
அனலடி!


அதிரடி!

கல்கி

குடும்பத்துடன் களிக்க...

KALKI
25.12.2005 ரூ.7.00
96 பக்கங்கள்



சென்னை ஏன் ஈர்க்கிறது?

இந்தியா வந்தால் சென்னை பக்கமே திரும்பிப் பார்க்க மாட்டார் பில்கேட்ஸ். ஆனால், இம்முறை இந்தியாவுக்காக ஒதுக்கிய நான்கு நாட்களில் இரண்டு நாட்கள் சென்னையில் வட்டமடித்துக் கொண்டிருந்தார். (விட்டால், ரங்கநாதன் தெருவில் இறங்கி ஷாப்பிங் செய்யச் சென்றிருப்பார் போல)

சரி, திடீரென சென்னை மீது ஏன் சாஃப்ட்வேர் கம்பெனிகள் இத்தனை கரிசனம் கொள்கின்றன? காக்னிசன்ட் (cognizant) கம்பெனியின் இயக்குனர் ராம்குமாரிடம் கேட்டோம்.



• பில்கேட்ஸ்

"சமீபகாலமாக இந்தியாவில், குறிப்பாக சென்னையில் முதலீடு செய்ய ஆர்வம் காட்டும் மூன்று கம்பெனிகள் மைக்ரோ சாஃப்ட், இன்டல் மற்றும் ஏ.எம்.டி. இம்மூன்றுமே சாஃப்ட்வேர் தொழிலில் ஜாம்பவான்கள். இதில் மைக்ரோசாஃப்ட் ஏழாயிரத்து அறுநூறு கோடியை முதலீடு செய்கிறது. இன்டெல் 4500 கோடி, ஏ.எம்.டி. 13,500 கோடி என அடுத்தடுத்த வருடங்களில் வாரியிறைக்கவிருக்கிறார்கள். இந்திய சாஃப்ட்வேர் கம்பெனிகளைவிட இம்மூன்று நிறுவனங்கள்தான் அதிக அளவில் இளைஞர்களை வேலைக்கு எடுக்கவிருக்கின்றன.

உலகத்தரமான கல்வியும், தூதரக அலுவலகத்திலிருந்து, எம்.என்.சி. கம்பெனிகள் வரை சென்னையில் இல்லாதது ஒன்றுமில்லை என்கிற நிலைதான் அவர்களைச் சென்னையில் முதலீடு செய்ய வைத்திருக்கிறது. உலகிலுள்ள இந்திய சாஃப்ட்வேர் திறமைசாலிகளில் பெரும்பாலானோர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பதை இந்நிறுவனங்கள் நன்கு அறிந்து வைத்துள்ளன.



• ராம்குமார்

அதுதவிர புலம் பெயர்ந்துள்ள பல தமிழ் இளைஞர்கள், சில காலம் கழித்து தமிழ் நாட்டுக்குத் திரும்ப முடிவெடுத்திருப்பதால், அவர்களை அப்படியே கட்டிக் காக்கவும் சாஃப்ட்வேர், ஹார்டுவேர், சிப் தயாரிக்கும் சர்வதேச கம்பெனிகள் சென்னையைக் குறிவைக்கின்றன. மிக முக்கியமாக தமிழ் நாட்டு இளைஞர்களின் அசாத்திய உழைப்பும் வேலை நேர்த்தியும் அயல்நாட்டில் தமிழ்நாட்டுக்குப் பெருமை தேடித் தந்துள்ளன. சென்னையின் அமைதியான சூழலும் அவர்களை வெகுவாகக் கவர்ந்திருக்க வேண்டும்" என்றார் ராம்குமார்.

- செந்தில்

வட்ட மேஜை

எம்.எஸ். அவர்கள் பற்றி விஜயா ராஜேந்திரன் எழுதியுள்ள 'அம்மா' கட்டுரை கிடைத்தற்கரிய பொக்கிஷம்.
சென்னை - 78, வி.எஸ். அனந்தராமன்

வையவனின் 'உயிர் கூடும் நெடுஞ்சாலை' டாபிகல் கதை நெஞ்சைத் தொட்டது!
சென்னை - 64, வெ. கோபாலன்

'**கா**ங்கிரஸான பா.ஜ.க' தலையங்கம் படித்தேன். ஜனசங்கத்திலிருந்து ஜனதா கட்சியாக சங்கமித்து, அதை உடைத்து வெளியேறி பாரதிய ஜனதாவாகி ஆட்சியைப் பிடித்த வரையிலும்தான் மக்கள் செல்வாக்கின் உச்சகட்டம். இனி இந்துத்வாவை எடுத்து வைத்து ஆடினாலும் பாரதிய ஜனதாவுக்கு இறங்குமுகம்தான்.
மதுரை-9, இரா.கல்யாணசுந்தரம்

'**க**லைஞனின் இதயம் கடலைவிட ஆழமானது' என்பதற்கு நடிகர் பிரகாஷ் ராஜின் உள்ளம் ஓர் உரைகல்.
மேலகிருஷ்ணன்புதூர், கே.எல். சுபாக்கனி

வெந்தபுண்ணில் வேல் பாய்ச்சுவது போல் பத்து கேள்விகள் கேட்ட பரமுவை ராப்ரிதேவி போட்டுத் தாக்காமல் இருந்தால் சரி!
ஈரோடு, கன்னி. சுப்பிரமணியன்

'**ஆ**று' படம் பற்றி 'ஆறே வரி'யில் பதில் சொல்லி அசத்திவிட்டார் தராசு!
கந்திருப்பம், சி.செசி

ஆனந்த் பட்வர்த்தனுடனான சந்திப்பு அசத்தல்!
சென்னை - 73, கே.வி.ராமன்

வேகமாகவும் விவேகமாகவும் இருந்தது அன்புமணியின் பேட்டி.
விளாத்திகுளம், அ. அப்துல்காதர்



சூப்பர் டச்!

புரட்டிப்போட்ட மழை! தவித்துப் போன மக்களின் துயர

சென்னையின்
14 சட்டசபை
தொகுதிகளின்
எம்.எல்.ஏ.க்கள்
பற்றிய சிறுகுறிப்பு...



துறைமுகம்

க.அன்பழகனின் வீடு இருக்கும் தெரு எப்போதும் பிஸியாக இருக்கும். அவர் வீட்டுக்கு அடுத்த வீட்டில்தான் செல்வி, கல்கி சீரியல் ஷூட்டிங் நடைபெறுகிறது. கேட்க வேண்டுமா பிஸிக்கு!

நிலையைக் கண்டு கண்ணீர் விட்டோம்!
மதுரை-16, ஆர்.லட்சுமி

உலக அழகி நடாலியா உள்ளூர் அழகிகளிடம் போட்டோ மூலம் பவனி வந்தது சூப்பர் டச்!
ஏற்காடு, ஜெயந்தி சிவக்குமார்

ஆங்காங்கே வெளியாகியிருந்த எழுத்தாளர்களைப் பற்றிய செய்திகள் இதுவரை கேட்டிராதவை!
நெய்வேலி, சாந்திசுந்தர்

'**கூ**ட்டணி அரசு அமைந்தால், பா.ம.க. அதில் பங்கு பெறாது' என அன்புமணி இப்போது கூறுவதெல்லாம் சரி. ஆனால் பாழாய்ப்போன 'காலத்தின் கட்டாயம்'னு ஒண்ணு அரசியலில் இருக்குதே!
பெங்களூர், யமுனா ரெங்கநாதன்

வாரிசுகளின் ஆதிக்கச் சண்டையால் அதிர்ச்சிக்குள்ளாகியுள்ள சிவசேனா புலியின் பிரமிப்பை படு கச்சிதமாகப் படமாக்கியுள்ள மூன்றாவது கார்ட்டூன் ஏ.ஒன்!
கும்பகோணம், கே.என்.பாலகிருஷ்ணன்

'**தீ**' கவிதைகள் ஆறும், வடிவமைப்பும் இன்னும் என் மனவீட்டில் பிரகாசித்துக் கொண்டே இருக்கின்றன.
சென்னை, கவிக்கோலம் ரா.கிருஷ்ணமூர்த்தி

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர் :
கி. ராஜேந்திரன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் :
சீதா ரவி

ஆசிரியர் குழு :
அனுராதா சேகர்
ஆர்.சி. ஜெயந்தன்
மு.மாறன்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்

தொலைபேசி :
2225 1522, 2225 0623,
2225 1324

தொலைநகல் :
044 - 22251021

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.390/-
ஆறு மாதம் : ரூ.195/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 63.50யு.எஸ். டாலர்
இலங்கை : ரூ.2060/-

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

ஒவ்வொரு இதழும் உங்கள் மேன்மைக்கு

'தேர்தல் தேதி நெருங்க நெருங்க மதில்மேல் பூனையாகத் தவிக்கிறார் வைகோ' என்கின்றன ஊடகச் செய்திகள். இதுபோன்ற அரசியல் சர்ச்சைகளின் மையமாக எப்போதுமிருக்கும் கலிங்கப்பட்டி நாயகனை பரபரப்பான ஓர் அரசியல் சூழலில் சந்தித்தோம்.

கட்சி துவங்கிய இந்த பதிமூன்று வருட காலகட்டத்தில், உங்கள் கட்சி சட்டமன்றத்தில் இடம்பெறும் வாய்ப்பு கிடைக்கவில்லை. இந்த நிலையில் வரவிருக்கும் சட்டமன்றத் தேர்தலை எப்படிப் பார்க்கிறீர்கள்?

''எங்கள் பயணத்தின் முக்கியமான கட்டத்தை இப்போது நாங்கள் நெருங்கிக் கொண்டிருக்கிறோம். இரண்டு சட்டமன்றத்தில் நுழைய முடியவில்லை. ஆனால், சட்டமன்றம் செல்ல வாய்ப்புக் கிடைக்காமலேயே சரித்திர சாதனைகளைப் படைத்திருக்கிறோம்.

இப்போது 2006 சட்டமன்றத் தேர்தல் முக்கியமான கட்டம். எங்கள் இயக்கம் பரிபூரணமான ஜனநாயக இயக்கம். உட்கட்சி ஜனநாயகத்தை உயிராகப் போற்றுகிற இயக்கம். தொண்டர்களால் உருவான இந்த இயக்கத்தின் நிர்வாகிகள், தொண்டர்கள் உணர்வைத்தான் பிரதிபலிப்பார்கள். அந்த வகையில் வியூகம் என்பது, அரசியல் களத்திலோ, யுத்த களத்திலோ, ஆருடங்களுக்கும் யூகங்களுக்கும் தீனிபோடும் ஒன்றல்ல. We will cross bridge, when we reach there."

1998 மற்றும் 1999 பாராளுமன்றத் தேர்தல்களில் பா.ஜ.க அணியில் இணைந்து, அந்த வகையில் குறிப்பிடத்தக்க வெற்றி பெற்றீர்கள். திராவிட இயக்கக் கட்சியான ம.தி.மு.க, பா.ஜ.கவோடு கூட்டணி அமைத்தது ஒரு சறுக்கல்தானே!



''எந்த இயக்கமும் ஏதாவது ஒரு கட்டத்தில் சமரசம் செய்துகொண்டே ஆக வேண்டும். மூல நோக்கத்தை இழந்தால்தான் தவறு. எங்கள் மதச்சார்பின்மை கொள்கையை காவு கொடுக்காமல், ஜனநாயகத்தைப் பாதுகாக்கப் போராடியிருக்கிறோம். பா.ஜ.க பொதுசிவில் சட்ட மசோதா கொண்டுவந்தபோது அறிமுக நிலையிலேயே எதிர்த்து வோட்டு போட்டிருக்கிறோம். அரசு ஊழியர்கள் ஆர்.எஸ்.எஸ் பயிற்சிகளில் கலந்துகொள்ளலாம் என்ற ஆணை போடும் நிலையில், வாஜ்பாய் அவர்களிடம் போராடி அதை மாற்றியிருக்கிறோம். மக்கள் மறந்துபோய், எங்கோ மூலையில் தள்ளப்பட்ட சேதுசமுத்திர திட்டத்துக்கு உயிர் கொடுத்திருக்கிறோம். எங்கள் இயக்கம் நடத்திய கடற்கரை பேரணிக் கூட்டத்தில்தான் வாஜ்பாய் 'மத்திய அரசு இந்தத் திட்டத்தை செயல்படுத்தும்' என்று முதன்முதலாக அறிவித்தார். அது மட்டுமல்லாமல் தொடர் நடவடிக்கைக்கு நிதி ஒதுக்கப்பட்டது. சேது சமுத்திர திட்டத்துக்கு முட்டுக்கட்டை

போடப் பார்த்த இலங்கை அரசின் சதியை முறியடிக்க முடிந்தது. அதேசமயம் சேது கால்வாய் திட்டம் செயல்படுத்தப்பட நானே காரணம் என்று சொந்தம் கொண்டாடவில்லை. ஆனால் மறக்கடிக்கப்பட்ட திட்டத்துக்கு உயிர் கொடுத்தது ம.தி.மு.கதான். அதேபோல் நெய்வேலி லிக்னைட் நிறுவனம் தனியார் கைக்கு மாற இருந்ததையும் தடுத்தவர்கள் நாங்கள்தான். எனவே பா.ஜ.கவோடு இருந்தாலும் எங்கள் தனித்தன்மையை இழக்காமல் தமிழ்நாட்டு நலன்களுக்கு பாடுபட்டு வந்திருக்கிறோம்."

படாமல் பாதுகாத்துக் கொள்ள வேண்டிய அவசியம் எங்களுக்கிருக்கிறது. தே.ஜ.மு. கூட்டணி அரசின் அமைச்சரவையில் பங்கு வகித்த ஒரே காரணத்துக்காக, கூட்டணி தர்மத்தின் அடிப்படையில், 'பொடா' தீர்மானத்தில் ஆதரித்து வோட்டு போட வேண்டிய நிலை வந்தது. இது ஒரு பிழை. இத்தனைக்கும் கூட்டணித் தலைவர்கள் கூட்டத்தில் 'பொடாவைக் கொண்டு வரக் கூடாது' என்று கடுமையாக எதிர்த்துப் பேசியிருக்கிறேன். ஆனால் பாராளுமன்றத்தில் நான் இந்தத் தீர்மானத்தின்போது பேசவேயில்லை. இத்தனை வருடகால பாராளுமன்ற அனுபவத்தில் நான் பேசாத ஒரே தீர்மானம் இதுதான் (நான் பொடாவை ஆதரித்து பாராளுமன்றத்தில் பேசியதாகச் சிலர் தவறாகச் சொல்லி வருகிறார்கள்). மத்திய கூட்டணி அரசில் பங்கு வகிக்கும் நிலையில் இதுபோன்ற சங்கடங்களைச் சந்திக்க வேண்டியிருக்கிறது.



"தன்மானத்தை விட்டுக்கொடுக்க மாட்டேன்!"

2004 பாராளுமன்றத் தேர்தலில் ஜனநாயக முற்போக்குக் கூட்டணியில் ஒரு அங்கமாக இருந்தாலும் அமைச்சரவையில் இடம்பெற வேண்டாம் என்று முடிவெடுக்க முக்கியக் காரணம் என்ன? மத்திய அரசின் செயல்பாடுகள் உங்கள் கட்சியைப் பாதிக்கக் கூடாது என்ற எச்சரிக்கை உணர்வுதானா?

"நாங்கள் வளர்ந்து கொண்டிருக்கிற இயக்கம். கொள்கைகளுக்குக் குந்தகம் ஏற்

ஆனால் அமைச்சரவையில் இடம் பெறாமல் இருப்பதற்கு இது மட்டுமே காரணமல்ல. தொண்டர்களின் உணர்வு அது. அவர்களின் எண்ண ஓட்டத்தைப் புரிந்துகொண்டு அமைச்சரவையில் இடம் பெறாமல் இருக்கிறோம்."

ஆளுங்களுக்கு அப்பாற்பட்டது வியூகம் என்று சொல்கிறீர்கள். இப்போதைய உங்கள் கூட்டணி நிலைப்பாடு மாறக்கூடும் என்றும் செய்திகள் வருகின்றனவே!

"தி.மு.க. தலைமையிலான கூட்டணியில் தொடர்கிறோம். பாராளுமன்ற தேர்தலில் வென்றது போல சட்டமன்ற தேர்தலில் வெற்றி பெற வேண்டும் என்பதால் இதய சுத்தியோடு இருக்கிறோம்; உழைக்கிறோம். அதற்கு நேர் எதிர்நிலை பற்றி சிந்திக்க என்ன அவசியம்?"

'வைகோ உலகத் தமிழர்களின் நலனுக்குக் குரல் கொடுப்பாரே தவிர, உள்ளூர் தமிழர்களின் நிலை பற்றி அவருக்குக் கவலையில்லை. ஈழப் பிரச்னை காரணமாக நடுநிலை மக்களின் ஆதரவை அவர் இழந்து விட்டார்' என்ற ஒரு கருத்து இருக்கிறதே?

"மேம்போக்காக பார்த்து ஒருவரைப் பற்றி ஒரு கருத்தை ஏற்படுத்திக் கொள்வதற்கு pre- conecived biased notion என்பார்கள். அந்த வகையில் என்னைப் பற்றிய கருத்து இது. என்னுடைய பணிகளில் 95 விழுக்காடு தேச, மற்றும் தமிழக நலன்களின் அடிப்படையில்தான் இருக்கிறது. ஈழப் பிரச்னையில் விடுதலைப் புலிகளின் மீது வெறுப்புக் கண்ணோட்டம் இருப்பதால் எங்களைப் பற்றியும் வெறுப்பு ஏற்படுகிறது. எங்களுடைய பல ஆக்கபூர்வமான பணிகளை வெளிச்சம் போட்டுக் காட்ட தொலைக்காட்சிகளோ, ஊடகங்களோ இல்லை. நான் 100 கூட்டத்தில் பேசினால் அதில் 99 கூட்டங்களில் நமது பிரச்னைகள், அதற்கான தீர்வு என்றுதான் பேசுகிறேன். ஆனால் ஏதாவது ஒரு கூட்டத்தில் ஈழப் பிரச்னை பற்றிப் பேசினால் அது பிரதானமாகப் பிரசுரிக்கப்பட்டு, பிரச்னை கிளப்பப்படுகிறது. பல கருத்துக்களை இருட்டடிப்புச் செய்துவிட்டு, ஒரு கருத்தை மட்டும் திணிக்கும் இந்தப் போக்கு ஜனநாயகமாகாது. சிங்கள இனவாத அரசுக்கு ஆதரவாகச் சில மத்திய அரசு அதிகாரிகள் செயல்பட்டு வருகிறார்கள். அவர்களின் முயற்சியால் இந்தியா - ஸ்ரீலங்கா இடையே ராணுவ ஒப்பந்தம் ஏற்பட இருந்தது. தமிழர் நலன்களுக்கு எதிராக இது அமையக்கூடும் என்பதால், நாங்கள் தலையிட்டு இதைத் தவிர்த்தோம். ஆனால் ஈழப் பிரச்னையில் எங்கள் இந்த நிலைப்பாட்டால், 'இவர்கள் மற்ற சிலரைப் போல பித்தலாட்டத்தனம் செய்யவில்லை' என்று மக்கள் நினைக்கிறார்கள். இதனால் மாறுபட்ட கருத்துக் கொண்டவர்கள்கூட எங்களை மதிக்கின்ற நிலை வந்திருக்கிறது. அதுவும் பலரைக் கவலைப்பட வைக்கிறது!

பலவீனம் எது என்பதை உணர்வதே என் பலம். குறிப்பாகச் சொல்வதென்றால் சில நிலைப்பாடுகளில் நான் விடாப்பிடியாக இருப்பதே என் பலம். தன் மானத்தை எந்தச் சூழலிலும், நிர்பந்தத்திலும் இழந்துவிடக் கூடாது என்பது எனது உறுதியான நிலைப்பாடு. இது ஒரு வகையில் எனது பலம்."



பொடா சிறை வாசம் உங்கள் கட்சியின் வளர்ச்சியை பாதித்ததா? 19 மாத சிறைவாசம் சொல்லிக் கொடுத்த பாடம் என்ன?

"என்னுடைய 19 மாத சிறைவாசம் கட்சிக்குப் புதிய பலத்தைக் கொண்டு வந்து சேர்த்திருக்கிறது. எங்கள் தோழர்களின் முயற்சியால் ஒரு கோடிக்கும் அதிகமான மக்கள் 'நான் பொடாவில் சிறைவைக்கப்பட்டது சரியல்ல' என்று கையொப்பமிட்டு மத்திய அரசிடம் மனு சமர்ப்பித்

தார்கள். இது எவ்வளவு பெரிய பணி? முன்னிலும் எப்போதையும் விட, கட்சியை வலிவோடும் பொலிவோடும் நடத்தினார்கள் என் சகாக்கள். நான் சமரசம் செய்து கொண்டிருந்தால் சிறையிலிருந்து வெளியே எப்போதோ வந்திருக்கலாம். ஆனால் நான் ஒரு போதும் சுயநலத்திற்காக சமரசம் செய்து கொள்ள மாட்டேன்; இயக்க நலன் கருதி சில சமயங்களில் சமரசம் செய்து கொள்ள வேண்டிய அவசியம் வந்து விடுகிறது. மற்றபடி சிறைவாசம் நான் புதிதாகப் படிக்க, எழுத மிக உதவியாயிற்று."

Moral policing என்று அரசு தனிமனித சுதந்திரத்தில் தலையிடும் போக்கு இப்போது இருப்பதாகக் கருதுகிறீர்களா?

"தனிமனித சுதந்திரம் என்பது நமது கலாசாரத்தையும் பண்பாட்டையும் நாசமாக்கிக் கொள்ளும்படியான ஒரு கருத்தாகவோ, செயலாகவோ இருக்கக் கூடாது. அப்படியிருப்பின் அரசு தலையிடலாம். அதேபோல சில பிரச்னைகளில் கருத்துக்களைச் சொல்லுகிற நபர் யாரென்று பார்க்க வேண்டும். சொல்லுகின்ற நபரின் தகுதியை வைத்துப் பார்த்து அந்தக் கருத்தை அலட்சியப்படுத்தினால், பலருக்கு அந்தத் தவறான செய்தி போய்ச் சேராது."

திடீர் திடீரென அரசியலில் குதிக்கும் நடிகர்களால், மக்கள் கண்ணோட்டம் மாற்றப்பட்டு, அரசியல் தரம் குறைந்து வருகிறதென்று கருதுகிறீர்களா?

"தமிழ்நாட்டு அரசியல் உலகில் கலை உலகத்துக்குத் தொடர்ந்து ஒரு முக்கியப் பங்கு இருந்து வந்திருக்கிறது. எது சரி; எது தவறு என்பதை மக்கள்தான் தீர்மானிக்க வேண்டும். ஆனால் மக்கள் மனத்தில் நிரந்தர இடம்பிடிக்க வேண்டுமானால், உன்னார்ந்த சேவை, உண்மை, நேர்மை ஆகியவை அவசியம்"

கடந்த பாராளுமன்ற தேர்தலுக்குப் பிறகு ஜெயலலிதா தனது ஆதரவுத் தளத்தை வலுப்படுத்திக் கொண்டிருக்கிறார் என்பது உண்மைதானா?

"அப்படி ஒரு முயற்சியை அவர் மேற்கொண்டிருக்கிறார்; அது போன்ற தோற்றத்தை உருவாக்க முயல்கிறார்கள். எங்கள் கூட்டணி பலத்தின் முன் அவரது எந்த முயற்சியும் வெற்றி பெறாது."

- **ப்ரியன்**

படங்கள் : **ஸ்ரீஹரி**

தவமாய் தவமிருந்து...

அடிதடி, ஆபாசம், ரெட்டை அர்த்த வசனம், ஹீரோ டாமினேஷன்னு ஏகமா கெட்டுப்போய் கிடக்குற தமிழ் சினிமாவ சுத்திகரிக்க வந்திருக்கிற படம்தான் தவமாய் தவமிருந்து. திரையில ஒரு நாவலையே பதிவு செஞ்சிருக்காரு சேரன். வாசிக்க மூணு மணி நேரமாகுது. ஆனா அலுப்போ, சலிப்போ ஏற்படல. ஒண்ணு ரெண்டு இடத்தைத் தவிர, தமிழ் சினிமாவோட அத்தனை ஃபார்முலாக்களையும் உடைச்சு துவம்சம் பண்றாரு வெற்றிகரமா. அதுக்காகவே அவருக்கு ஸ்பெஷலா ஒரு பொக்கே தரலாம்.

நடிப்புக்காக தரணும்னா படத்துல நடிச்ச... சாரி, வாழ்ந்திருக்குற எல்லாருக்குமே தரணும். முத்தையா, அதாங்க நம்ம ராஜ்கிரண் இருக்காரே... மனுஷனே இல்லங்க அவரு. இப்படி எல்லாம்கூட ஒரு ஆளால நடிக்க முடியுமான்னு ஆச்சர்யப்படுத்தி, ஏக்கமாக்கி, அழுகைல கொண்டு போய் நிறுத்திடுறாரு. தமிழகத் தகப்பன்களை அப்படியே பார்க்கற மாதிரி இருக்கு. படம் பார்க்குற ஒவ்வொருத்தரும் தன்னோட அப்பாவாத்தான் ராஜ்கிரணைப் பார்க்குறாங்க. ரெண்டு பசங்களுக்காக அவர் உருகறதும், அவங்க படிப்புக்காக யார் யார்கிட்டயோ கையேந்தறதும், கேட்டப்பல்லாம் தப்பு செய்யறாங்கன்னு தெரியாமலே பணத்தை எடுத்து நீட்டறதும், மகன்களால் ஏமாற்றப்பட்டோம்னு தெரிஞ்சதும் ஒடிஞ்சு போறதும், ஒரு சுடு சொல் தாங்காம உயிரையே விடறதும்னு எந்தவொரு இடத்துலயும் துளி பிசிறு இல்லாம ஏ கிளாஸ் நடிப்பை வழங்கியிருக்காரு ராஜ்கிரண். அண்ணாச்சிக்கு தேசிய விருது நிச்சயம்னு அடிச்சு சொல்லலாம்.

சாரதாவா சரண்யாவும் செம பின்னு பின்னியிருக்காங்க. அம்மாக்களுக்கே உரிய பாந்தமான முகம், ஆளுமைன்னு அள்ளிடறாங்க அப்ளாஸை. தவறு செஞ்சு திருந்தி, திரும்பி வந்த மருமகனையும் மருமகளையும் ஏத்துக்காம கதவைச் சாத்தறதும் பேரக் குழந்தையோட அழுகையால பாசம் உடைஞ்சு அருவியா கொட்டறதும்னு ஏகப்பட்ட நிறைவு சரண்யா நடிப்புல.

புதுமுகம் செந்தில், மீனா ரெண்டு பேருமே புதுமுகமா தெரியல. இந்தக் காலத்து மருமகள்களை அப்படியே பிரதிபலிக்குறாங்க மீனா. அவங்க பேசுற டயலாக்ஸும், மாடுலேஷனும் செம அசத்தல். அம்மணிக்கு பிரகாசமான எதிர்காலம் இருக்கு. மனைவிக்கு அடங்கறதா, அம்மாவுக்கு பயப்படறதான்னு தெரியாம தவிச்சு, கூனிக் குறுகிப்போய் சம்சாரமே சரணம்னு அடங்கிடுற செந்தில் யதார்த்த புருஷன்!

சேரனும் நல்லாத்தான் நடிச்சிருக்காரு. ஆனா ஒரு சில இடங்கள்ல சொதப்பிடுறாரு. அவரோட முகத்துக்

கும் உடல் வளத்துக்கும் காலேஜ் ஸ்டுடண்ட் பாத்திரம் கொஞ்சம் கனம்தான். அழறதும் பார்க்க என்னமோ மாதிரி இருக்கு. ஆனா பத்மப்ரியா நல்ல செலக்ஷன். காதலால கர்ப்பமாகி சென்னைக்கு ஓடி வந்து, ஒண்டுக் குடித்தன அறைல தங்கி அவங்க படற கஷ்டங்கள் கண்ணீரை வரவழைக்குது. அதே நேரத்துல பி.இ படிச்ச சேரன் கட்டை வண்டி இழுத்து அவங்கள காப்பாத் தறதெல்லாம் கொஞ்சம் டூமச்தான்.

ராஜ்கிரண் அச்சகத்தோட வேலையாளா வர்ற இளவரசு, இனிக்க இனிக்கப் பேசி காமெடி இல்லாத குறையைப் போக்கிடுறாரு.

குறிப்பிட்டு பாராட்டு வேண்டிய டெக்னிக்கல் ஆட்கள் லிஸ்ட் பெருசு. காலமாற் றத்தை துல்லியமா பதிவு பண்ணப் போராடி ஜெயிச் சிருக்குற ஒளிப்பதி வாளர் எம்.எஸ். பிரபு, ஆர்ட் டைரக் டர் ஜே.கே. ரெண்டு பேரும் திருஷ்டி சுத் திப் போட்டுக்கலாம். 'இப்படியெல்லாம் கூட இவங்களால மியூசிக் போட முடியுமா'ன்னு திரும்பிப் பார்க்க வெச் சிருக்காங்க சபேஷ் - முரளி.

எத்தனையோ ஹீரோக்கள் தன்னை முன்னிலைப் படுத்தி கதை பண்ணச் சொல்ற இந்தக் காலத்துல, ராஜ்கிரண் கதாபாத்திரத்த ஹீரோவாக்கி அழகு பார்த்திருக்குற சேரனோட மனசு, எல்லாருக்கும் வந் தாத்தான் தமிழ் சினிமா உருப்படும். அதே மாதிரி அண்ணன் கேரக்டர் மட்டுமில்ல, தன்னோட தம்பி கேரக்டரும் பலவீனம் நிறைஞ்சதுதான்னு ஒளிக்காம கொள்ளாம படத்துல பதிவு பண்ணதையும் பாராட்டியாகணும்.



ஒரு இயக்கு நரா சேரன் எதுக் கும் காம்ப்ரமைஸ் பண்ணிக்காம தொடர்ந்து இது போன்ற தரமான படங்களைத் தந் துக்கிட்டே இருக் கணும். 'தவமாய் தவமிருந்து' தமிழ் சினிமாவோட குறிஞ்சுப்பூ கூட இல்ல... அதுக்கும் மேல!

- லஜ்ஜாவதி

பூங்கொத்துக்கள், விடாமல் துரத்தும் வாழ்த்தழைப்புகள், ஓயாமல் கண் சிமிட்டும் எஸ்.எம்.எஸ்.களுக்கிடையேதான் அண்மைக்கால நாட்களை நகர்த்திக் கொண்டிருக்கிறார்கள் ராஜ்கிரணும் சரண்யாவும். எல்லாவற்றிலிருந்தும் தாற்காலிகமாக விடுவித்து, கல்கிக்காக அவர்களை பேச அழைத்தோம்...

"எல்லோருக்கும் அப்பாவாயிட்டேன்!"



“சினிமாவில் கிடைக்கும் பெயர், புகழைப் பயன்படுத்தி சமுதாயத்துக்கு சிறு துரும்பாவது நகர்த்த வேண்டும் என்கிற என் அலைவரிசையோடு ஒத்துப் போகிறவர் இயக்குனர் சேரன். ‘தவமாய் தவமிருந்து’ முத்தையாவாக நான் வாழ்ந்ததைக் கண்டு, ஐந்து வயதுக் குழந்தையிலிருந்து அறுபது வயதுக் கிழவர்வரை எல்லோரும் என்னை தந்தையாகவே பாவிக்கிறார்கள். பெருமையாக இருக்கிறது. ‘தேசிய விருது வாங்கித் தராமல் விடமாட்டோம்’ என அன்புள்ளங்கள் துடிக்கின்றன. அனைத்தும் சேரனால் நான் அடைந்த பாக்கியம். என் மீதான இறைவனின் கருணை.

ஒருநாள் சேரன் என்னிடம் வந்து ‘தவமாய் தவமிருந்து’ கதையைச் சொல்லத் தொடங்கினார். ‘ஹீரோ அங்க வர்றாரு. இங்கே போறாரு’ என்று சொல்லிக்கொண்டு வந்தவர் இடையில் நிறுத்தி, ‘அண்ணே, நான் இதுவரைக்கும் ஹீரோன்னு சொன்னது உங்களைத்தான். நான் படத்துல நடிச்சாலும் நீங்கதான் ஹீரோ. இதுல நான் இயக்குநராக மட்டும் ஜெயிச்சா போதும். உங்களுக்குக் கதை பிடிச்சிருந்தா பண்ணலாம். இல்லாட்டி நான் வேறு படம் பண்றேன்’ என்றார். சிலிர்த்து விட்டேன்.

வழக்கமாக படப்பிடிப்பில் ஐந்து நிமிடம் இடைவெளி கிடைத்தால் புகைக்கத் தொடங்கி விடுவேன். ஒரு நாள் சேரன் என்னிடம் தயங்கியபடி வந்து, ‘அண்ணே, தப்பா எடுத்துக்காதீங்க. முத்தையா சிகரெட் பிடிக்க மாட்டாரு’ என்றார். ஒளிப்பதிவாளர் எம்.எஸ்.பிரபுவும் இதை



“சேரன் ஒரு டெரர்!”

“என் வாழ்க்கையில் ‘நாயக’னுக்குப் பிறகு எந்தப் படத்தினாலும் நான் இவ்வளவு பெரிய சந்தோஷத்தை அனுபவிக்கலை. பாரதிராஜா சார் போன் பண்ணி அப்படிப் பாராட்டறார். ‘பின்னிட்ட. எல்லாரையும் அழ வெச்சுட்டியேம்மா’ன்னு உருகறாரு. ப்பா... இதுக்கெல்லாம் நான் சேரனுக்கு நன்றி சொல்றதுக்கு முன்னாடி என் கணவருக்குத்தான் நன்றி சொல்லணும்.

‘தவமாய் தவமிருந்து’க்கு முன்னாடியெல்லாம் யார் டைரக்டர், சம்பளம் ஓ.கேவாங்கற ஒரு வட்டத்துக்குள்ளதான் படத்தை செலக்ட் பண்ணுவேன். அப்போதான் ஒரு நாள் சேரன் மனைவி என்கிட்ட போன் பண்ணி, படத்தைப் பத்தியும் ‘சாரதா’ கேரக்டர் பத்தியும் சொன்னாங்க. போட்டோ ஷூட் முடிஞ்ச பிறகுதான் எனக்கு உறைச்சுது... ‘ஆஹா... இது சாதாரண படமில்லை. நிறைய உழைப்பும் நேரமும் தேவைப்படும். சரண்யா உன்னால இது முடியாது’ன்னு. சேரன்கிட்ட நேரா போய், ‘சார், எனக்கு இரண்டு பெண் குழந்தைகள். எனக்கு அம்மா, அப்பாவோ அல்லது பார்த்துக்க வேற ஆளுங்களோ கிடையாது. என்னால இவ்வளவு கஷ்டமான ரோல் எல்லாம் பண்ண முடியாது’ன்னு கட் அண்டு ரைட்டா சொல்லிட்டேன். அவரும் மனசே இல்லாம சரின்னுட்டார். அப்புறம் போட்டோ ஷூட் ரிசல்ட் பார்த்த பிறகு, நான்தான் சாரதாவா நடிக்கணும்னு பிடிவாதமா என் கணவர் பொன்வண்ணன்கிட்ட சொல்ல, அவரும் என் மனசை மாத்திட்டார்.

ஆடி ஓடி கஷ்டப்பட்டு நடிச்சு முடிச்சாலும் மனசோரமா ஒரு உறுத்தல். ‘ம்ஹூம்... இது எனக்கான படமில்லை. ராஜ்கிரண்தான் பேரைத் தட்டிட்டுப் போகப் போறார்’னு. ப்ரிவியூ பார்க்கப் போறேன். டைட்டில் கார்டிலிருந்து படம் முடியற வரைக்கும்... அம்மாடி! நானா இப்படி நடிச்சேன்! எனக்கு பேச்சே வரலை போங்க.

சேரன் ஒரு டெரர். தான் ஆமோதித்தார். தான் உருவாக்கிய கதாபாத்திரத்தை ஆழமாக நேசிக்கும் கலைஞன் சேரன். தவறுக்கு வருந்தி அன்றோடு படப்பிடிப்பு தளத்தில் புகை பிடிப்பதை விட்டொழித்தேன். ‘பாண்டவர் பூமி’ படம் பண்ணும்போதுகூட எங்களுக்குள் சகோதர உணர்வு மட்டுமே நிலவியது.

ஆனால் ‘தவமாய் தவமிருந்து’ படப்பிடிப்பின்போது உள்ளூர தந்தையாகவே என்னை எண்ணத் துவங்கிவிட்டார் சேரன். எனக்கும் மூத்த பிள்ளை கிடைத்துவிட்ட சந்தோஷம்.

மூன்று சில்வர் ஜூப்ளி படங்கள் கொடுத்துவிட்டு, பின்னர் மூன்று

நினைச்சதுதான் வரணும்னு அவ்வளவு அடம்பிடிப்பார். கோபம் என்னமா வரும்ங்கறீங்க! கண்கள்ல வேகம் கொப்பளிக்க அவர் நடிச்சுக் காண்பிக்கறதைப் பார்த்தாலே நமக்கும் நடிப்பு பீறிட்டு வரும். இதனால இந்தப் படத்துல நான் கிளிசரின் போட வேண்டிய அவசியமே வரலைங்க. அப்புறம் சேரன் யூனிட் ரொம்ப டிசிப்ளின். வெட்டி அரட்டை, செல்போன் சிணுங்கல்... மூச்! சேரனுக்கு எவ்வளவு நல்ல மனசு பாருங்க... டைட்டில் கார்டுல என் பெயரையும் ராஜ்கிரண் சார் பெயரையும் முதல்ல போட்டு அப்புறம் அவர் பேரைப் போட்டிருக்கார். தான் வித்தியாசமானவர்ங்கிறதை இந்த விஷயத்துலயும் நிரூபிச்சிட்டாரு...

தப்பான பீரியட்ல கதாநாயகியா நடிக்க வந்துட்டோமோன்னு அடிக்கடி நினைப்பேன். சுஜாதா, லட்சுமியெல்லாம் கதாநாயகியா நடிச்ச சமயத்துல நானும் ஃபீல்டுல இருந்திருக்கணும். கதாநாயகின்னாலே கிளாமரா நடிக்கணும்ங்கிற நிலைமை இருந்ததால என்னால பெரிய அளவுல வர முடியலை. இருக்கட்டும். கேரக்டர் ஆர்ட்டிஸ்டா நடிக்கத் தட்டுப்பாடு இங்கே இருக்கு. என் சமீபத்திய படங்களான 'ராம்', 'தவமாய் தவமிருந்து' போன்றவை அந்தத் தட்டுப்பாட்டை தீர்த்து வைச்சிருக்கும்னு நினைக்கிறேன்... இனியும் இது தொடர்ந்தா சந்தோஷம்.''

சுமாரான படங்கள் கொடுத்ததால் என் திரையுலக வாழ்வில் தேக்கம் நிலவியது உண்மைதான். வழக்கமான ஹீரோயிஸம் இல்லாமல் 'நந்தா'வில் அற்புதமான குணச்சித்திர வேடம் கிடைத்தபோது, எனக்குக் கிடைத்த மரியாதையாய் அதை ஏற்றுக் கொண்டேன். அதற்குள் என்னைப் பற்றி ஏராளமான வதந்திகள். கடனில் தத்தளிப்பதாக பத்திரிகைச் செய்திகள். அனைத்தும் மாயை. ஒரு வட்டத்துக்குள் வாழ்பவன் நான். சினிமா விழாக்களுக்கெல்லாம் போகாதவன். நல்ல கதைக்காகக் காத்திருந்தேனே தவிர, நொடிந்தெல்லாம் போய்விடவில்லை. என் மனைவி ஹதிஜா நாச்சியார், வளர்ப்பு மகன் ப்ரியா, மகன் திப்பு சுல்தான் மற்றும் என் வளர்ப்புத் தந்தை சையத் பாவா என அனைவரின் அன்பிலும் கட்டுண்டு கிடப்பவன் நான். இவர்கள் பொழிந்த அன்பைத்தான் என்னால் படத்திலும் இயல்பாக காண்பிக்க முடிகிறது.


• குடும்பத்துடன்...



சேரன் இப்பொழுது புதுப் பாதை அமைத்துள்ளார். இதோ என் சொந்தத் தயாரிப்பில், இளையராஜா இசையில் நான் ஹீரோவாக நடித்து இயக்கும் படத்தை வெகு விரைவில் துவங்க உள்ளேன். முத்தையா கதாபாத்திரத்துக்குச் சிறிதும் குறைவில்லாமல் இனி என் கதாபாத்திரங்கள் அமையும்.''

- ச.ந.கண்ணன்

படங்கள்: ஓம்



கேலிக் கூத்தான கேள்விகள்!

நாடாளுமன்ற ஜனநாயகத்தை இதற்குமேல் கேலிக் கூத்தாக்க முடியாது! மக்கள் பிரதிநிதிகளாகத் தேர்வு செய்யப் படும் எம்.பிக்கள், மக்கள் நலனுக்காக மன்றத்தில் முறையீடுகள் செய்து, கேள்விகள் எழுப்பி, நல்லது நடக்க வழிசெய்ய வேண்டிய வர்கள். ஆனால், அவர்களோ பார்லிமெண்ட் உறுப்பினர் பதவியை, பணம் பண்ணும் ஆயுதமாக ஆக்கி விட்டார்கள்!


சில தொழிலதிபர்கள் விரும்பும் கேள்விகளை நாடாளுமன் றத்தில் எழுப்புவதற்காக பதினொரு எம்.பிக்களுக்குக் கையூட்டு தருவதாக நாடகமாடி, அவர்கள் லஞ்சம் பெறுவதை 'ஆஜ் தக்' தொலைக்காட்சி கேமரா படம்பிடித்துக் காட்டியிருக்கிறது. இந்த பதினொரு பேரில் பா.ஜ.க, காங்கிரஸ், சமாஜ்வாடி, ராஷ்ட்ரிய ஜனதா தளம் என அனைத்து கட்சியினரும் அடக்கம்!

எம்.பிக்களின் ஊதியம் சமீபத்தில்தான் இரட்டிப்பாக்கப் பட்டுள்ள நிலையில், ஒரு கேள்வி கேட்பதற்கு ஐயாயிரம் முதல் பதினையாயிரம் ரூபாய் வரையில் லஞ்சம் பெறப்பட்டிருப்பது அதிர்ச்சியோடு அருவருப்பையும் ஊட்டுகிறது.


கேமராவில் கையும் களவுமாகப் படம்பிடிக்கப்பட்ட இந்த பதினொரு பேர் ஒரு சிறிய 'சாம்பிள்'தான். கேள்வி எழுப்புவதற் காக இவ்வாறு கையூட்டு பெறுவது என்பது நீண்ட நெடுங்கால மாக, பரவலாக நடைபெற்று வேரூன்றிவிட்ட அவலம் என அறிகிற போது, அரசியல்வாதிகள் குறித்த நம் கொஞ்ச - நஞ்ச நம்பிக்



கல்கி



2005 டிசம்பர் 25
பார்த்திப மார்கழி 10
மலர் : 64
இதழ் : 21



கைகள் அப்படியே தவிடு பொடியாகின்றன!

நமது நாடாளுமன்றத்தில் கேள்வி நேரம் என்பதற்கு எப்பேர்ப்பட்ட அந்தஸ்து இருந்தது! ஆளுங்கட்சித் தலைவர்கள் அதனை பவித்திரமாகக் கருதி மிகுந்த முயற்சி எடுத்துக் கொண்டு கேள்விகளுக்கு பதில் அளிக்க ஆயத்தம் செய்து கொள்வார்கள். எதிர்கட்சியினரோ திணறடிக்கும் கேள்விகளையும் துணைக் கேள்விகளையும் கணைகளாகத் தொடுப்பார்கள். தமிழகத்தைச் சேர்ந்த தீரர் சத்தியமூர்த்தி போன்றோர் கேள்வி நேரத்தை உபயோகித்து பல அற்புத கருத்துகளும் திட்டங்களும் வெளிப்பட வழிவகுத்தனர். சத்தியமூர்த்தியின் துணைக் கேள்விகளை பிரதமர் நேரு வெகுவாக ரசித்து, வரவேற்றார் என்பதெல்லாம் வரலாற்றுச் சிறப்பு.


அத்தனை சிறப்புக்கும் இன்று களங்கம் ஏற்பட்டிருக்கிறது. சிந்தனையாளர்களும் தேச பக்தர்களும் அமர்ந்த இடத்தில் சுயநலவாதிகளும் மக்கள் விரோதிகளும் அமர்ந்திருக்கிறார்கள்!

நாடாளுமன்ற உறுப்பினர்களே இப்படி பகிரங்கமாகக் கையூட்டு பெறுகையில், அரசு அலுவலகங்களில் நாம் எவ்வாறு ஒழுங்கை எதிர்பார்க்க முடியும்?

நாடாளுமன்றத்தில் கேள்விகளை எழுப்புவதற்காக கையூட்டு தருவோரும் குற்றவாளிகளே. இந்தப் பாதகத்தில் ஈடுபடுவோர் பெரும்பாலும் தொழிலதிபர்களாக இருக்கிறார்கள். தங்கள் தொழில் அல்லது துறை சார்ந்த விஷயங்கள்பால் நாடாளுமன்றத்தின் கவனத்தைத் திருப்பவும், தங்களுக்குச் சாதகமான முடிவுகள் எடுக்கப்படும் வகையில் கேள்விகளை அமைக்கவுமே இவர்கள் லஞ்சம் தருகிறார்கள்.

மக்கள் பிரதிநிதிகளைச் சந்தித்து, விஷயங்களை விளக்கி, பிரச்னைகளின்பால் நியாயமான கவனத்தை ஏற்படுத்த இயலாதா? அல்லது நியாயமற்ற கோரிக்கைகளுக்கு கவனமும் ஆதரவும் கிட்டவேண்டும் என்பது இவர்களின் பேராசையா...?

இரண்டு காரணங்களுள் எது தூண்டுகோலாய் இருந்தாலும் சரி, புதிய பொருளாதாரக் கொள்கையின் நோக்கத்தை கேலிக்குள்ளாக்குகிறது இந்தக் கையூட்டு அசிங்கம்!



கையூட்டுகளுக்கு முடிவுகட்டும் வகையில், பெர்மிட் லைசென்ஸ் ராஜ்ஜியத்துக்கு விடை கொடுப்பதே புதிய பொருளாதார கொள்கையின் பிரதான நோக்கம். கட்டுப்பாடுகள் நீங்கிய நிலையில், தொழில் வர்த்தகத்துடன் நேர்மையும் தழைக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், பொருளாதாரம் வளர்ச்சியுற்றாலும் லஞ்சம் ஒழியவில்லை.

இத்தருணத்தில் மெட்ராஸ் மேனேஜ்மெண்ட் அசோசியேஷனில் உரையாற்றிய என். விட்டல் கூறிய கருத்து மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது.

"லஞ்ச-ஊழல் ஒழிந்து நேர்மை தழைத்தாலொழிய இந்தியா கண்டுள்ள முன்னேற்றங்கள் யாவும் அர்த்தமற்றவையாகிவிடும்" என்று கூறியிருக்கிறார், கண்காணிப்புத் துறையின் முன்னாள் தலைமை ஆய்வாளர் விட்டல்.

'ஆஜ் தக்' கேமராவால் பதிவு செய்யப்பட்ட பதினொரு பேரையும் விளக்கம் கேட்டு, நாடாளுமன்றத்திலிருந்து சோம்நாத் சாட்டர்ஜி தற்காலிகமாக வெளியேற்றி வைத்திருப்பதும் அவரவர் கட்சி தலைமை (ஆர்.ஜே.டி நீங்கலாக) அவர்கள் பேரில் ஒழுங்கு நடவடிக்கை எடுத்திருப்பதும் ஆறுதலான விஷயங்கள்.

எனினும், உலகத்தின் பார்வையில் இந்தியா இன்று முன்னேறும் தேசமாக காட்சி அளிப்பதற்கு பதிலாக லஞ்ச - ஊழலில் முன்னணி வகிக்கும் தேசமாகவே காட்சி அளிக்கிறது.

இங்கிலாந்து தேசத்தில் இதேபோன்ற ஊழல் அம்பலமான பிறகு, தொழிலதிபர்கள் தங்கள் கேள்விகளை நாடாளுமன்றத்தில் எழுப்புவதற்குத் தனி விதிகள் வகுக்கப்பட்டன. இங்கும் அதேபோல் விதிகள் வகுக்கலாம். ஆனால், எத்தனை சட்ட திட்டங்கள் கொண்டு வந்தாலும் அடிப்படை நேர்மை பண்பு இல்லாதவரை நீதியையும் நியாயத்தையும் நிலைநாட்ட முடியாது.

எம்.பிக்களும் தொழிலதிபர்களும் ஒரு விஷயத்தை நினைவில் கொண்டால் போதும்: கேள்விகளை எழுப்ப கொடுக்கப்படும் பணமும் பெறப்படும் பணமும் உண்மையில் இந்த தேசத்து மக்களுக்குச் சொந்தமானது. பொது மக்களே தொழிலகங்களின் முதலீட்டாளர்கள்; மக்களே அவற்றில் உழைப்பாளர்கள். பொது மக்களுக்குத் துரோகம் செய்யும் யாருமே நீண்ட காலத்துக்கு வெற்றிபெற முடியாது. ○



வாழ்க்கையைத் தொலைக்காதீர்கள்!

பகவத்கீதை போன்ற ஆன்மிகச் சொற்பொழிவுகளைக் கேட்க வருகிறவர்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதை நான் கண்கூடாகப் பார்க்கிறேன். சிலர் பொழுதுபோக்கிற்காக வருகிறார்கள்; சிலர் பேச்சாளர் என்னதான் சொல்கிறார் என்று கேட்கலாமே என்று வருகிறார்கள்; உண்மையான ஆர்வத்துடன், தேடல் உணர்வால் உந்தப்பட்டு, எல்லோரும் வருவதாகச் சொல்ல முடியாது. ஆகவேதான், ஐந்து நாட்களுக்குத் தொடர்ந்து சொற்பொழிவு நடக்கிறது என்றால், முதல்நாள் ஏக கூட்டம் வருகிறது. அடுத்தடுத்த தினங்களில், ஒரு தொய்வு ஏற்படுகிறது. கடைசி தினத்தன்று வருகிறவர்கள் எண்ணிக்கைக்கும், முதல் தினத்து எண்ணிக்கைக்கும் நிறைய வித்தியாசம் இருப்பதைக் காண முடியும்.

ஐந்து நாட்களும் வந்து என்னுடைய கீதைச் சொற்பொழிவைக் கேட்டுவிட்டால், ஏதோ பகவத்கீதையை கரைத்துக் குடித்துவிட்டதுபோல ஆகாது. கீதையில் கிருஷ்ணர் என்னென்ன சொல்லி இருக்கிறார் என்பதற்கு ஒரு அறிமுகம் கிடைக்கும். அவ்வளவுதான்!

சிலர், கீதையின் சில அத்தியாயங்களில் உள்ள சுலோகங்களை மனப்பாடமாகச் சொல்லுவார்கள். ஆனால் அந்த வரிகளுக்கு என்ன அர்த்தம் என்றே தெரியாது. அவற்றுக்கு என்ன விளக்கம் என்று தெரியாது.

வெற்றி உங்கள் சாய்ஸ்! 20

கிருஷ்ணர், அர்ச்சுனனுக்குச் சொன்னது, மனித வாழ்க்கையுடன் எந்தவிதத்தில் தொடர்புடையது என்று புரியாது. அதை மனித வாழ்க்கையில் கடைபிடிப்பது எப்படி என்று தெரியாது.

எனவேதான் கீதையும், இதர ஆன்மிக நூல்களும் என்ன சொல்கின்றன என்பது குறித்த சொற்பொழிவுகள் மூலமாக அவற்றுக்கும், தங்களுக்கும் இடையே ஒரு உறவை ஏற்படுத்திக்கொண்டு, மீண்டும், மீண்டும் கீதையின் ஸ்லோகங்களையும் அவற்றின் பொருளையும் அவற்றுக்குரிய விளக்கங்களையும் படித்துப் புரிந்துகொள்ள வேண்டும்; மனத்தெளிவு பெற வேண்டும். அவற்றை வாழ்க்கையில் கடைபிடிக்க வேண்டும்; அதனால் ஏற்படும் நற்பலன்களை அனுபவிக்க வேண்டும்.

இது, மலரிலிருந்து தேனீக்கள் தேனைச் சேகரிப்பது போன்ற ஒரு பணி! மனிதனாலும் அப்படி வாழ முடியும். ஆனால்



சுனந்தாஜி

மகன் இருந்தாலும், தாய்ப்பாசத்துக்குக் குறைவிருக்காது.

இங்கே கல்லூரியில் படித்து, நிறைய மார்க் வாங்கியவுடன், பையன் அமெரிக்காவில் மேற் படிப்பு படிக்க வேண்டும் என்று விரும்புவான். அல்லது அப்பா, தன் மகனை அமெரிக்காவுக்கு அனுப்பி படிக்க வைக்க வேண்டும் என்று ஆசைப் படுவார்.

தன் மகன் அமெரிக்கா

அதற்கு மனிதனின் முயற்சி அவசியம்.

பறவைகள் முட்டையிடுகின்றன. சில நாட்களில் முட்டைகள் பொரிந்து குஞ்சுகள் வெளிவருகின்றன. தாய்ப்பறவை, குஞ்சுகளுக்கு உணவு ஊட்டி விடுகிறது. பறக்கக் கற்றுக் கொடுக்கிறது. தட்டுத் தடுமாறி பறக்க ஆரம்பிக்கிற குஞ்சுகள், சில நாட்களிலேயே சுதந்திரமாகப் பறக்கத் தொடங்கி விடுகின்றன. அதன்பின் தமது தாயை அவை அண்டிப் பிழைப்பதில்லை.

மிருகங்கள் குட்டி போடுகின்றன. பிறந்த குட்டிகளுக்குத் தாய் பாலூட்டுகிறது. வீட்டில் வளர்க்கும் பூனையானாலும் சரி, காட்டில் திரியும் சிங்கம், புலியானாலும் சரி... ஒரே மாதிரிதான். குட்டிகளுக்கு எந்தவிதமான ஆபத்தும் வந்துவிடக்கூடாது என்று அதித எச்சரிக்கையோடு பாதுகாப்பு அளிக்கின்றன. ஆனாலும்கூட சில தினங்களுக்குப் பின் என்ன நடக்கிறது? குட்டிகள் தாயின் கட்டுப்பாட்டிலிருந்து விடுபட்டு, சுதந்திரமாய் வாழத் தொடங்கி விடுகின்றன.

காரணம், பறவைகளுக்கும், விலங்குகளுக்கும் தாய், சேய் சென்டிமென்ட் கிடையாது. ஆனால் மனிதன் அப்படி இல்லையே! தொண்ணூறு வயதுப் பெண்மணிக்கு எழுபது வயதில்



போவதற்கு வேண்டிய எல்லா உதவிகளையும் செய்வார். தன் மகன் மேற்படிப்புக்காக அமெரிக்கா போவதைப் பற்றி பெருமையாக எல்லோரிடமும் சொல்லி சந்தோஷப்படுவார். அம்மாவுக்கும் பெருமைதான். தன் பெருமையைக் காட்டிக் கொள்ளத் தவற மாட்டாள்.

ஆனால், அமெரிக்காவுக்கு வழி அனுப்பி வைக்க ஏர்போர்ட்டுக்கு வந்ததும், மகன் தங்களை விட்டுவிட்டுப் போகிறானே என்று கண் கலங்குவார்கள்.

எதற்காக அவர்கள் கண் கலங்க வேண்டும்?

மகன் சொல்லாமல் கொள்ளாமல் ஊரைவிட்டு ஓடிப் போய்விட்டான் என்றால், பாசத்தைக் கொட்டி வளர்த்த மகன் இப்படிச் செய்துவிட்டானே என்று கலங்கலாம். (அதுவே சரியல்ல என்பது இன்னொரு கோணம்). அப்படி இல்லாமல், நீங்கள் பெருமைப்படுகிற மாதிரி, உங்கள் மகன் வளமான எதிர்காலம் அமையும் என்று நம்பிக்கையுடன், உங்கள் ஒப்புதலுடன், மனமார்ந்த ஆசிகளுடன் அமெரிக்கா புறப்பட்டுப் போகிறபோது எதற்காகக் கண்கலங்க வேண்டும்?

பிரிந்து போகிற பிள்ளைக்காக மனவருத்தப்படுவதற்கும், குடும்பத்தில் குழந்தை பிறந்தவுடன் ஒரேயடியாக குதூகலப்படுவதற்கும் பெரிய வித்தியாசமில்லை. குடும்பத்தில் குழந்தையின் புதுவரவு சந்தோஷமானதுதான். அதை நான் மறுக்கவில்லை. ஆனால் அதற்கு அதீதமான முக்கியத்துவம் தர வேண்டிய அவசியமில்லை.

பிறப்புக்கு எப்படி அதீத முக்கியத்துவம் அவசியமில்லை என்று சொன்னேனோ, அதே விதி இறப்புக்கும் உண்டு. இந்த உலகில் பிறக்கிற எவரும் ஒருநாள் இறக்கத்தான் வேண்டும். நான் ஏற்கெனவே சொன்னது போல இந்த உலகில் மதம், இனம், நாடு, மொழி, இதர விஷயங்கள் என்று மக்களில் பல பிரிவுகள் இருந்தபோதிலும் என்னைப் பொறுத்தவரை இரண்டே இரண்டு பிரிவுகள்தான். ஒன்று இறந்துவிட்டவர்கள்; இன்னொன்று இறக்கப் போகிறவர்கள்.

"நான் நிரந்தரமானவன்! எனக்கு இறப்பே கிடையாது!" என்று யாராவது சொன்னால் அவரை ஞானி என்று பாராட்டுவீர்களா? இல்லை மனநிலை சரியில்லாதவர் என்று பரிதாபப்படுவீர்களா?

சோகங்களில், கஷ்டங்களில் ஆழமானது என்று உலகில் கருதப்படுவது மரணம் ஏற்படுத்துகிற சோகம்தான்! நானும் அதை ஒப்புக்கொள்கிறேன். ஆனால் ஒரு விஷயத்தை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும்! காலம் என்பது மாபெரும் நிவாரணம். அது எத்தகைய ஆழமான சோகத்தையும் நாளடைவில் குறைத்து, மறையச் செய்துவிடும். மீளவே முடியாத சோகம் என்று உலகில் எதுவுமே கிடையாது!

சோகம் உங்களைப் பாதிப்பது தவிர்க்க முடியாத ஒன்றுதான். ஆனால் அதிலிருந்து மீள வேண்டியது அவசியம். அந்த சோக வட்டத்துக்குள்ளேயே உழன்றுகொண்டே இருந்து வாழ்க்கையை நீங்கள் தொலைத்துவிடாதீர்கள்.



ராயபுரம்

ஜெயக்குமார் விளையாட்டுப் பிரியர். சீஸனுக்கு ஏற்றாற்போல் விளையாடுவதில் சமர்த்தர். முன்பு நீச்சல், குண்டு எறிதல். இப்போது கிரிக்கெட்.

குழந்தை, விளையாட்டு பொம்மைகளை வைத்துக்கொண்டு விளையாடுகிறது. ஒரு பொம்மை உடைந்து விடுகிறது என்று வைத்துக் கொள்வோம். அது குழந்தையை ரொம்பவே பாதிக்கிறது. சில சமயங்களில் குழந்தைகள் மிகவும் நேசிக்கிற பொம்மைகள் உடைந்துவிட்டால், அதனால் குழந்தைகளுக்கு ஏற்படுகிற சோகத்தைச் சலபத்தில் ஆற்றிவிட முடியாது. சில குழந்தைகள், "உடைந்துபோய்விட்ட பொம்மையை வைத்துக்



கொண்டு விளையாட வேண்டாம்! தூக்கிப் போட்டுவிடு! நான் வேறு ஒரு பொம்மை வாங்கிக் கொடுக்கிறேன்" என்று சொன்னாலும் சமாதானமடையாது.

ஆனால் குழந்தையின் பொம்மை உடைந்தவுடன், ஒரு பெரியவரின் மனம் என்ன நினைக்கிறது? "அட! ஒரு பொம்மை உடைந்துவிட்டது. அவ்வளவுதானே! போனால் போகட்டும்; வேறு ஒன்று வாங்கிக் கொடுத்தால் போச்சு!"

குழந்தையின் சோகத்தை அவர் புரிந்து கொள்ளவில்லை என்று இதற்கு அர்த்தம் இல்லை. அவருக்குக் குழந்தையின் சோகமும் புரிகிறது; அதற்காக குழந்தை கவலைப்பட வேண்டியதில்லை என்றும் தெரிகிறது. காரணம், குழந்தையின் மனநிலையைவிட, அப்பாவின் மனநிலை, அறிவுபூர்வமாகச் சற்று உயர்ந்த நிலையில் இருக்கிறது.

அதேசமயம், பெரியவர்கள் தங்களுக்குச் சோகம் நிகழ்கிறபோது, அறிவுபூர்வமான நிலையில் இருந்துகொண்டு அதனைப் பார்க்காமல் உணர்ச்சிபூர்வமான நிலையிலே இருந்துகொண்டு பார்க்கிறார்கள். அதனால்தான் சோகத்திலே சிக்கிக்கொண்டு மீண்டு வரத் தெரியாமல், முடியாமல் தவிக்கிறார்கள்!

உங்கள் மோட்டார் சைக்கிள் சக்கரத்தில் உள்ள ஒரு ஸ்க்ருவைக் கழற்ற வேண்டும் என்றால் நீங்கள் என்ன செய்கிறீர்கள்? மோட்டார் சைக்கிளின் டூல்ஸ் பெட்டியில் இருக்கும் ஒரு ஸ்க்ரு டிரைவரை எடுத்துப் பயன்படுத்துவீர்கள்.

உங்களுடைய கைக்கடிகாரத்தில் இருக்கிற மிகவும் நுண்ணிய ஸ்க்ரு ஒன்றைக் கழற்றுவதற்கு அந்த மோட்டார் சைக்கிளின் ஸ்க்ரு டிரைவரைப் பயன்படுத்த முடியுமா? கடிகாரத்தின் நுண்ணிய ஸ்க்ருவின் அளவுக்கு ஏற்ப தயாரிக்கப்பட்ட ஸ்க்ரு டிரைவரைத்தானே பயன்படுத்த வேண்டும்?

பொதுவாக, எந்த ஒரு விஷயமும் எந்த ஒரு காரணத்துக்காக உருவாக்கப்பட்டதோ, அதற்குத்தான் அதைப் பயன்படுத்த முடியும்.

நீங்கள் அனைவரும் நிச்சயம் யானையைப் பார்த்திருப்பீர்கள். அதன் கம்பீரமான தோற்றத்துக்கு அழகு சேர்ப்பது அதன் துதிக்கை. அந்த துதிக்கைக்கு மிகவும் பிரத்யேகமான ஒரு குணாதிசயம் உண்டு.

அது என்ன?

(வெற்றி தொடரும்)

படம்: ஸ்ரீஹரி

"ஒருவருக்கு எவ்வளவுதான் திறமை, புகழ், உழைப்பு, மக்கள் சக்தி, செல்வாக்கு இருந்தாலும் கட்சியின் நலனுக்குக் குந்தகம் விளைவித்து, உட்கட்சி ஜனநாயகத்தை மீறுவாரேயானால் அவர் நீக்கப்படுவார் என்பது உணர்த்தப்பட்டிருக்கிறது"- உமாபாரதி பா.ஜ.கவிலிருந்து நீக்கப்பட்டதற்கு அக்கட்சியின் தேசியச் செயலாளர் இல. கணேசன் கூறியுள்ள கருத்துதான் இது. சமீபகாலமாக பா.ஜ.கவில் நிலவும் குழப்பங்கள் குறித்து அவரிடம் பேசினோம்.

தலைவரை எதிர்த்துப் பேசியவர் கட்சியை விட்டே நீக்கப்படுகிறார்... ஆனால் உட்கட்சி ஜனநாயகம் பற்றிப் பேசுகிறீர்கள்.முரண்பாடாக இருக்கிறதே...



(எடுத்த எடுப்பிலேயே உஷ்ணமாகிறார்) அத்வானியின் குறைகளைப் பற்றி அத்வானியிடமே நேரில் புகார் தரலாம் என்கிற அளவுக்கு உட்கட்சி ஜனநாயகம் உள்ள கட்சி பா.ஜ.க... ஆனால் அதை வெளிப்படுத்தும் இடம் - விதம் மிகவும் முக்கியம். ஒரு முக்கியமான ஆலோசனைக் கூட்டத்தில் செய்தியாளர்கள் உள்ளே இருக்கும் போதே தலைவரைப் பார்த்து மிரட்டும் தொனியில் சவால் விட்டுப் பேசுவதும் அதுபற்றி வெளியே சென்று பேசுவதும் தான் உட்கட்சி ஜனநாயகம் என்றால், அது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று. ஒரு ஐந்து நிமிடம் கழித்துச் சொல்லியிருந்தால் அவருடைய கருத்து ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கலாம்...ஆனால் உமாபாரதி அவசரப்பட்டு விட்டார்... வழக்கம் போல்...

சட்டமன்ற உறுப்பினர்கள் கூடித்தான் முதல்வரைத் தேர்ந்தெடுக்க வேண்டும்... ஆனால் பா.ஜ.கவின் டெல்லித் தலைமை முதல்வரை நியமனம் செய்வது சர்வாதிகாரம் இல்லையா... இதையேதானே காங்கிரசும் செய்து வருகிறது...

"காங்கிரசில் அப்படி ஒரு நடைமுறை இருப்பது உண்மைதான். மேலிடத்தின் அபிமானத்துக்குரியவருக்குச் செல்வாக்கு இல்லாவிட்டாலும்கூட முதல்வர் பதவியில் வலுக்கட்டாயமாகத் திணிக்கப்படுவார். ஆனால் பா.ஜ.கவில் உண்மையிலேயே உறுப்பினர்களின் ஆதரவு யாருக்கு இருக்கிறது... யாரால் நல்ல நிர்வாகத்தைத் தர முடியும் என்பதெல்லாம் தீவிரமாக ஆராயப்பட்டு அதன் பின்னர் தான் அவருடைய பெயர் முன்மொழியப்பட்டு, தலைமையால் அறிவிக்கப்படும். இதற்கு கன்சென்ஸஸ் என்று பெயர்... ஆகவே இதற்குப் பெயர் சர்வாதிகாரமும் அல்ல... அத்வானி சர்வாதிகாரியும் அல்ல..."

பீகாரின் வெற்றிக்கு உமாபாரதியின் பிரசாரத்தைப் பயன்படுத்த அவருக்கு மத்திய பிரதேச முதல்வர் பதவி ஆசை காட்டி, பின்னர் மோசம் செய்துவிட்டதாகக் கூறப்படுகிறதே...

(கோபமாகிறார்) "அடுத்த ம.பி முதல்வர் நீங்கள்தான் என்று யாரும் அவரிடம் அதிகாரபூர்வமாகச் சொன்னார்களா... இல்லையே... அவராக அப்படிப் புரிந்துகொண்டால் அதற்கு கட்சித் தலைமை என்ன செய்ய முடியும்...? வேண்டுமானால் பீகார் தேர்தலுக்குப் பிறகு ம.பி முதல்வர் பதவிக்கு மாற்றம் வரலாம் என்று கூறியிருக்கலாம்... உண்மையில் சொல்லப்போனால் உமாபாரதிக்கு முதல்வராகும் ஆசையே இல்லை. மாறாக மத்திய பிரதேசத்தின் சோனியாவாக - ஒரு சூப்பர் சி.எம்மாக இருந்து அரசாட்சி செய்யவே ஆசைப்படுகிறார். அதற்காகவே என்ன பேசுகிறோம் என்று தெரியாமல் நிதானமிழந்து பேசி வருகிறார். மற்றபடி யாரும் அவரை ஆசை காட்டி மோசம் செய்யவில்லை."

கட்சியை விட்டு நீக்குவதும் பின்னர் மன்னிப்புக் கடிதம் வாங்கிக்கொண்டு சேர்த்துக் கொள்வதும் பா.ஜ.கவுக்கு வாடிக்கையாகி விட்டதுதானே...

(யோசித்தபடியே) "ஒருவரை நீக்குவதும் திரும்பச் சேர்த்துக் கொள்வதும் அடிக்கடி நடப்பது உண்மையிலேயே

கேலிக்குரியதுதான், ஒப்புக்கொள்கிறேன். உமாபாரதி அத்தியாயத்துக்கு இப்போது எடுக்கப்பட்டிருக்கும் முடிவே நிரந்தரமானதாக இருப்பதுதான் கட்சிக்கு நல்லது என்று தொண்டர்கள் எண்ணுகிறார்கள்.

உமாபாரதி தனிக்கட்சி தொடங்கினால் ம.பி.யில் பிற்படுத்தப்பட்டோர் வாக்குகளை இழந்து பலவீனமாகும் வாய்ப்பிருக்கிறதே...

''பா.ஜ.கவை விட்டு விலகினால் யாராக இருந்தாலும் அவர்கள் தமது முகவரியை இழந்துவிடுவது உறுதி.... ஆளானப்பட்ட பா.ஜ.கவே விழுந்து விழுந்துதான் போராடி எழுகிறது. அப்படியிருக்க, அவர் தனிக்கட்சி கண்டால் மூன்று நாட்களுக்கு மீடியாவில் இலவச விளம்பரம் கிடைக்கலாம். அத்தோடு சரி... மற்றபடி பா.ஜ.கவை பலவீனப்படுத்தலாம் என்பதெல்லாம் பகல்கனவுதான். அவருடைய முயற்சி வெற்றி பெறாது.''

டிசம்பரில் நடக்கும் மாநாட்டில் அத்வானி ராஜினாமா என்று கூறப்




"தி.மு.க கூட்டணியை உடைக்கிறார் ஜெ!"

-இல.கணேசன் அனலடி

பட்டது. ஆனால் இப்போது அதற்கு வாய்ப்பில்லை என்பதுபோல மஹாஜன் பேசியிருக்கிறாரே.... ஆக யாரை திருப்தி செய்ய அந்த ராஜினாமா நாடகம் அரங்கேற்றப்பட்டது?

ஏற்கெனவே சென்னையில் அத்வானி ராஜினாமா அறிவிப்பை வெளியிட்டு விட்டார். ஆகவே டிசம்பர் மாநாட்டில் மீண்டும் ஒருமுறை 'தலைவர் பதவி ராஜினாமா' என்ற விஷயமே நிகழ்ச்சி நிரலில் வராது என்ற அர்த்தத்தில் கூறியிருப்பார் மஹாஜன். இதற்குக் காரணம் மாநாடு போடுவது தலைவரின் ராஜினாமாவுக்காக அல்ல... கட்சி வளர்ச்சிக்காக என்பது தொண்டர்களுக்கு உறுதி செய்யப்பட வேண்டும். தவிர, உற்சாகத்துடன் மாநாட்டுக்கு வரும் தொண்டர்கள், போகும்போது துக்கமாக எதற்குச் செல்ல வேண்டும் என்று அப்படி முடிவெடுத்திருக்கலாம். அதேசமயம் ராஜினாமா யாரையும் திருப்திப்படுத்த நடத்தப்பட்ட நாடகமல்ல. அத்வானி தாமாக முன்வந்து எடுத்த முடிவுதான் அது. அந்த மாநாடு முடிந்த பின்னர் அடுத்த தலைவர் குறித்து முடிவு செய்யப்படும்.



தி.நகர்

தென் சென்னையில் நடக்கும் பொதுக்கூட்டங்கள், விழாக்களை பிரம்மாண்டமாக நடத்தி அசத்துவதால் 'சின்ன வீரபாண்டியார்' என்று தி.மு.க.வில் பட்டம் கொடுத்திருக்கின்றனர் ஜெ. அன்பழகனுக்கு.

தமிழகத்தில் வரும் சட்டமன்றத் தேர்தலின்போது விஷப்பரீட்சைக்குத் தயாராகிவிட்டீர்கள் போலுள்ளதே...?

"கடிகார பெண்டுலம் போன்று தி.மு.க - அ.தி.மு.க பக்கமே மாறி மாறி சாய்ந்து வெறுத்துப்போன வாக்காளர்கள், இம்முறை ஒரு மாற்றம் விரும்புகிறார்கள். அதற்கு வசதியாகவே தமிழக பா.ஜ.க 234 தொகுதிகளிலும் போட்டியிடுகிறது. பா.ஜ.க வலுவாக இருக்கும் தொகுதிகளில் மும்முனைப்போட்டி ஏற்பட்டு, அதில் நாங்கள் வெற்றிபெற அதிக வாய்ப்புகள் இருக்கின்றன. தனித்துப் போட்டி என்ற முடிவு உண்மையிலேயே ஒரு துணிச்சலான முடிவுதானே தவிர, விஷப்பரீட்சை அல்ல."

தி.மு.க கூட்டணியில் ஏற்பட்டிருக்கும் சலசலப்பு பற்றி...

"காங்கிரஸ் கூட்டணி அரசு என்பது ம.தி.மு.க தவிர மற்ற கட்சிகளுக்கு ஒரு காமதேனுவாகவே இருக்கிறது. தன்னிடம் இருக்கும் அமைச்சர் பதவிகளை விட்டுவிட்டு வெளியே வர அந்தக் கட்சிகள் விரும்பாது. ம.தி.மு.க வெளியிலிருந்து ஆதரவு தருவதால் ம.தி.மு.க வெளியேற வாய்ப்பிருக்கிறது. அப்படியே வெளியே வந்தாலும் அது அ.தி.மு.க அணியில் சேராது. ஏனென்றால் அ.தி.மு.க.வுடன் சேர்வது வெட்கக்கேடானது என்பது அவர்களுக்குத் தெரியும். ஆக, ம.தி.மு.க.வின் நிலையைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். அதேசமயம் தி.மு.க கூட்டணியை உடைக்கும் முயற்சியில் ஜெ. ஈடுபட்டுக் கொண்டுதான் இருப்பார்."

ஒருவேளை ம.தி.மு.க வெளியே வந்தால் அதனுடன் பா.ஜ.க கூட்டணிக்கு வாய்ப்பிருக்கிறதா...?

"மே மாதம் தேர்தல் என்கிறார்கள். இடையில் ஏறக்குறைய நாலைந்து மாதங்கள் இருக்கின்றன. ஆகவே இப்போது கூட்டணி பற்றி பா.ஜ.க சிந்திக்கவில்லை. காலம் கனியும்போது சிந்திக்கும்."

- இரா. முத்துக்குமார்

படம் : ஸ்ரீஹரி

திருமண வாழ்த்து



திருவாரூர் கல்கி ஏஜெண்ட் திரு.கல்கி நடராஜய்யரின் பேரனும்
திரு.சந்தானராமன் அவர்களின் ஜேஷ்ட குமாரனுமாகிய
சிரஞ்சீவி **தியாகராஜன்** என்கிற **எஸ்.ராஜேஷ்**க்கும்,
சௌபாக்யவதி **கே.சுபாஷினி**க்கும்
12.12.2005 அன்று திருமணம் மிகச் சிறப்பாக நடைபெற்றது.
மணமக்கள் எல்லா செல்வங்களும் பெற்று வளமுடன் வாழ வாழ்த்துகிறோம்.

லவ் பாஸிட்டிவ்

சுவாமிஜியின் சத்சங்கம் முடிந்ததும் ரகுபதி எழுந்து கொண்டான். நீண்ட க்யூ வரிசையில், அவரிடம் ஆசீர்வாதமும் பதிலும் பெறுவதற்கு ஆட்கள் நின்று கொண்டிருந்தார்கள்.

வெளியே பிரசாதம் வழங்கும் இடத்தில் போய் நின்றபடி சட்டைக் காலரை தளர்த்திவிட்டுக் கொண்டபோதுதான் அவளைப் பார்த்தான். ஆம்! அது அவளேதான்.

ரம்யா இப்போது ஆளே மாறியிருந்தாள். நல்ல உயரமாக இருப்பாள். இப்போது மொத்த உருவமுமே சுருங்கி, உயரம் குறைந்தாற் போல இருந்தாள். நீளமாக கூந்தல் இருக்கும் அவளுக்கு. இப்போது அதுவும் உயரம் குறைந்து போய் ஒன்றிரண்டு நரை முடிகளுடன் நைந்து போயிருந்தது. கண்களில் கூட ஆர்வம் குறைந்து போய் இளமஞ்சள் நிறம் கூடியிருந்தது. முகத்தில் ஒருவித வறட்டுத் தன்மையும் இறுக்கமும் கூடியிருந்தன.

அருகே போனான்.

"ஹாய்... ரம்யா... எப்படி இருக்கே... என்னைத் தெரியுதா... இங்கே அடிக்கடி வருவியா நீ" என்றான் பட்டென்று.

பத்து வருடங்கள் முன்பு ஏற்பட்ட பழக்கம். சாதாரண பழக்கம் என்று சொல்ல முடியாது. ரம்யா அப்போது வங்கி ஒன்றில் வேலை பார்த்து வந்தாள். வங்கியின் அத்தனை பெண்களிலும் வசீகரமாக இருப்பாள். அவளைப் பார்த்த முதல் நாளே சண்டை வந்துவிட்டது. எண்ணி எடுத்துக் கொடுத்த நூறு ரூபாய் கட்டுக்களில் இருநூறு ரூபாய் குறைகிறது என்றான் ரகுபதி. அவளுக்குக் கோபம் வந்துவிட்டது. மறுபடி வாங்கி எண்ணிப் பார்த்தாள். சரியாக இருந்தது. ரகுபதி வாங்கி எண்ணிப் பார்த்துவிட்டு 'இருநூறு குறைகிறது' என்றான். திரும்ப வாங்கி எண்ணிப்பார்த்து பஞ்சாயத்து செய்ய கூட்டத்தில் முடியாது. 'சரியாக இருக்கிறது. வாங்கிக்கொண்டு போ' என்பது போல் நோட்டுக் கட்டுக்களை அவன் பால் தள்ளிவிட, கட்டு நகர்ந்து போய் கீழே விழ, அதில் யாரோ கால் வைத்து விட்டார்கள். காச்மூச்சென்று கத்த ஆரம்பித்து விட்டான் ரகுபதி.

மேனேஜர் வந்துவிட்டார். எல்லோரும் வேடிக்கை பார்க்க, ரம்யாவுக்கு அவமானமாக இருந்தது. விருட்டென்று வெளியே போன ரகுபதி, வங்கிக்கு எதிரே உள்ள டீக்கடைக்குப் போய் உட்கார்ந்தான். நண்பனின் கடை. அங்கே உட்கார்ந்து சரிபார்த்தபோது சரியாக இருந்தது. எப்படி அப்போது மட்டும் இருநூறு ரூபாய் குறைந்தது என்று தெரியவில்லை.

விஜயநிலா

உடனே கிளம்பிப்போய் சொன்னால் அந்தப் பெண் இன்னும் எகிறுவாள். கூட்ட நெரிசலில் மற்றவர்களுக்கும் இடைஞ்சலாக இருக்கும் என்று காத்திருந்தான். பிஸினஸ் முன்பணத்தை பிறகு கொடுத்துக் கொள்ளலாம். முதலில் அவளிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்வோம் என்று காத்திருந்தான். மதியம் வங்கி விடுமுறை என்பதால் இரண்டு, இரண்டரைக்கெல்லாம் வெளியே வந்து விடுவாள் என்று காத்திருந்தான்.

ரம்யா வண்ணக் குடையை விரித்தபடி வெளியே வந்தாள். அவள் எதிரில்போய் நின்று விவரம் சொல்லி மன்னிப்புக் கேட்டபோது பொரிந்து தள்ளி விட்டாள். 'ஏண்டா வலியப் போய் இந்த வேகாத வெயிலில் அவளிடம் திட்டு வாங்கவேண்டும்' என்று நொந்து கொண்டான்.

அடுத்த ஒருவாரமும் வங்கிக்குச் செல்வதற்கான வேலை இல்லை. இன்னொரு நாள் வங்கிக்குச் சென்றபோது, செலானில் வருடத்தை தவறாக எழுதிக் கொடுத்தான். ஒன்றும் சொல்லாமல் அவளே திருத்திவிட்டு அவனிடம் கவுன்ட்டர் சைன் கேட்டபோது, அவள் முகத்தை உற்றுப் பார்த்தான். அவளது கண்கள் அவனைச் சந்தித்ததும் பிரிக்க இயலாமல் ஒரு வினாடி தடுமாறின.



தலையைக் குனிந்து கொண்டாள்.

அப்புறம் மெல்ல சிரிப்பு, சின்னச் சின்னதாகப் பேச்சு என்று வளர்ந்து தொலைபேசியில் அடிக்கடி பேசிக் கொள்ளும் அளவுக்கு வந்துவிட்டது. அவன் தான் தன் மனத்திலுள்ள எண்ணத்தை முதலில் சொன்னான். ரம்யாவுக்கும் அவனைப் பிடித்திருந்தது. 'வீட்டுக்கு வந்து பேசுங்கள்' என்றபோது யோசிக்காமல் அந்த வார ஞாயிறன்றே தன் நண்பனை அழைத்துக்கொண்டு போய் விட்டான்.

ரம்யாவின் அப்பா தாசில்தார் அலுவலகத்தில் ஹெட்கிளார்க். ஆனால் கலெக்டர் தோரணை இருக்கும். வீட்டில் அவர் பேச்சுக்கு யாரும் எதிர்ப்பேச்சு பேச முடியாது.

ரகுபதி நேரடியாக விஷயத்துக்கு வந்தான். ரம்யாவின் அப்பா ரிங் மாஸ்டர் போல உட்கார்ந்திருந்தார். காபி கொண்டு வந்து வைக்கலாமா, வேண்டாமா என்ற தயக்கம் அந்த வீட்டுப் பெண்களின் மனத்தில் இருந்தது.

"ஸார்... என் பேர் ரகுபதி... இவன் என் நண்பன். பெயர் கிருஷ்ணன். எனக்கு உங்க பொண்ணு ரம்யாவைப் பிடிச்சிருந்தது. அதான் உங்களைப் பார்த்து பேசிட்டுப் போகலாம்னு வந்தேன்."

நிமிர்ந்து அவன் முகத்தைப் பார்த்தார். தொண்டையைச் செருமிக்கொண்டு, "தனம் ரெண்டு காபி கொண்டு வா" என்றார். அவரைப் பொறுத்தவரை காபி கொடுத்து விட்டால், 'நிக்காதே இடத்தை விட்டுக் கிளம்பு' என்று அர்த்தம். ரம்யா பயத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"ஸார்... எந்த டிபார்ட்மெண்ட்ல உத்யோகம் பாக்குறீங்க..." என்றார்.

"இல்லை ஸார்... நான் உத்யோகம் எல்லாம் பார்க்கலை, சொந்தமா தொழில் பண்றேன்" என்றான்.


"அடேயப்பா... பிஸினஸ்மேனா நீங்க? சொல்லுங்க, என்ன பிஸினஸ் பண்றீங்க? எவ்வளவு டர்ன் ஓவர் வரும்? ஸார் யாரு உங்க பிரதரா?"

"இன்னதுதான் தொழில்னு சொல்லிக்கிற மாதிரி இன்னும் தலையெடுக்கலை ஸார். சின்னச் சின்னதா பல வேலைகள் பண்றேன். பாக்கெட் பால் ஏஜென்ஸி, பழைய பேப்பர் கடை, மளிகை சாமான்கள் டோர் டெலிவரி பண்றதுன்னு..."

"ஓ... பிஸினஸை ஹாபியா, ஒரு பொழுது போக்கா செய்யறீங்க. பேங்க்ல வேலை பார்க்கற பொண்ணுன்ன உடனே பிடிச்சு போட்டறலாம்னு கணக்கு போட்டுப் பார்த்துட்டீங்க. ஸார் என்ன பிஸினஸ் பண்றாரு?"

"உங்க பொண்ணு வேலை பார்க்கற பேங்க் எதிர்ல டீக்கடை வெச்சிருக்கான் ஸார்" என்றான் ரகுபதி.

"ஆக, அந்த டீக்கடையில் வெச்சுத்தான் சதித்திட்டம் உருவானதா... போயிட்டு வாங்க சாமி. எங்களுக்குச் சொந்தத்திலேயே மாப்பிள்ளைகள் இருக்காங்க. ஒரு சப்-கலெக்டர் வரனையே வேண்டாம்னு துரத்தினவன் நான். போயிட்டு வர்றீங்களா..."



தேர்தல் பிரசாரத்துக்கென ஜெயா டி.வியில் அரசியல் நிகழ்ச்சிகள் தயாரிக்கும் பணிகள் துவங்கிவிட்டன. அதில் பங்கேற்க தன்னைத் தயார்படுத்தி வருகிறார் ராதாரவி.

ரகுபதி நிமிர்ந்து ரம்யாவைப் பார்த்தான். ரம்யாவின் முகத்தில் இளமை விடை பெற்றிருந்தது. நாற்பது வயதுக்குரிய முகமாக அவள் முகம் ஆகிவிட்டிருந்தது.

"எனக்கு அந்தநாள் நல்லா ஞாபகம் இருக்குங்க. என்ன தொழில் பண்றதுன்னு பிடிபடாமத்தான் ஒவ்வொரு தொழிலா செய்து பார்த்துக்கிட்டிருந்

தேன். என் முகத்துல அடிச்ச மாதிரி உங்கப்பா பேசின வார்த்தைகள்தான் என்னை செதுக்குச்சு. நான் அவர் பேச்சைத் தப்பா எடுத்துக்கலை. எனக்குன்னு என்ன அடையாளம் இருக்குன்னு யோசிக்க ஆரம்பிச்சேன்... பாக்கெட்ல மசாலா பவுடர் கொண்டு வரணும்னு முடிவு பண்ணினேன். ஒரு பாக்கெட், ஒரு ரூபாயைத் தாண்டக்கூடாது. மெஷின் இல்லாம கையால அரைச்ச மசாலா பவுடரா இருக்கணும். மெஷின்ல அரைச்சா சூட்டுல மசாலா இறுகிப் போய் டேஸ்ட் மாறிடுது. அதனால கையால அரைக்கணும்னு முடிவு பண்ணி முயற்சி பண்ணினேன். சாஷே பாக்கெட்ல ஷாம்பூ மாதிரி, மசாலா தான்னு முடிவு பண்ணினேன். தினப்படி கூலி வாங்கிச் சமைக்கறவங்களுக்கு குழம்போ, ரசமோ வைக்க ஒரு ரூபா செலவு பண்றது பெரிசில்ல. அதனால பிஸினஸ் சூடு பிடிச்சிருச்சு. இப்ப வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி பண்றேன். எல்லாத்தையுமே சாஷே பாக்கெட்ல தர்றதுனு முடிவு பண்ணிட்டேன். எந்த அடையாளமும் இல்லாத நான் இப்ப மல்ட்டிநேஷனல் கம்பெனிகளுக்குச் சவாலா இருக்கேன்'' என்றான்.

ரம்யா பதில் பேசாமல் அமைதியாக நின்றாள். அவன் முகத்தை உற்றுப் பார்த்தாள். ரகுபதி படபடவென்று பேசினாலும் அவன் பேச்சில் கர்வமோ, பெருமையோ இல்லை. சாதாரணமாக இருந்தான்.

"நீங்க வந்து கேட்டுட்டுப் போனதுக்கு அப்புறம் எனக்குக் கல்யாண ஏற்பாடு துரிதமாயிடுச்சு ரகுபதி. ஒரு நாள் எனக்கு யாரோ ராங் நம்பர் கால் பண்ணவும், என்ன ஏதுன்னு தோண்டித் துருவி அம்மாகிட்ட விசாரிக்க ஆரம்பிச்சுட்டாரு. வந்த வரனை அத்தனை தூரம் விசாரிக்காம சட்டுனு கல்யாணம் பண்ணிக் குடுத்துட்டாரு. என் புருஷன் நல்லவர்தான். ஈ.பியில இன்ஜினியர். ஆனா அம்மா பிள்ளை. எந்த கெட்ட பழக்கங்களும் இல்லாத, சாமர்த்தியங்களே இல்லாத அம்மா பிள்ளை. அவரோட சேர்ந்தவங்க எல்லாரும் வேலையில் மேல மேல வந்துட்டாங்க. இருந்த சொந்த வீட்டையும் வித்து அவர் தங்கை புருஷனுக்குக் கொடுத்துட்டு வாடகை வீட்ல இருக்கோம். குழந்தைங்களை இஷ்டப்பட்ட ஸ்கூல்ல சேர்த்து படிக்க வைக்க முடியலை. இதெல்லாம் உங்களை அன்னிக்கு அடிக்காத குறையா விரட்டுன பாவம்தான்."

"சாட்... நல்லவேளை நாம சந்திச்சோம் ரம்யா" என்றான்.

"என்ன சொல்றீங்க ரகுபதி?"

"இல்லன்னா இன்னமும் நீங்க என்னை விரட்டினதுலதான் இப்படி ஆயிடுச்சுன்னு நினைச்சு மருகிட்டு இருந்திருப்பீங்க'' என்றான்.

''பின்னே... அது மகாபாவம் இல்லையா?"

"இல்லை. வாங்க இப்படி உட்காருவோம். புரியற மாதிரி சொல்றேன். எல்லா பிரச்னைகளுக்கும் நாம எடுக்கற முடிவுகள்தான் காரணம். நம்மளோட நல்ல நிலைமைக்கும் நாம எடுக்கற முடிவுகள்தான் காரணம். உங்கப்பா என் அறியாமையை, ஆர்வக்கோளாறை போட்டு உடைச்சதும் கலங்கிப் போகாம என்ன புதுசா செய்யலாம்னு தேடிப்போனது நான் எடுத்த முடிவு. உங்கப்பா கைகாட்டின வரனைக் கல்யாணம் பண்ணிக்க சம்மதிச்சது உங்க முடிவுதான் ரம்யா. இப்படி விசாரிக்காம கல்யாணம் பண்ணி வெச்சுட்டாரேன்னு நீங்க உங்கப்பாவைக் குறை சொல்ல முடியாது."

"பின்ன என்ன செய்யறது ரகுபதி."

"ஒரு சின்ன வட்டத்தைப் போட்டுக்கிட்டு வாழறோம் ரம்யா. போடும்போது சூழ்நிலைகள் காரணமா சின்ன வட்டத்



சேப்பாக்கம்

தேர்தலுக்கு முன்னதாக, ஒரு மாதம் தான் தொடர்ந்து எழுத விருக்கும் திராவிட இயக்க வரலாற்று நூலுக்காக நேரம் ஒதுக்கும் மூடில் இருக்கிறார் கலைஞர்.



கலாமிடமிருந்து...

சினிமா குடும்பத்திலிருந்து வந்த கமலா திரையரங்கு அதிபரின் மகன் நாகு சிதம்பரம், அப்துல் கலாம் கையால் 2005-ம் ஆண்டுக்கான சிறந்த தொழிலதிபர் விருதை வாங்கியுள்ளார். ஆட்டோமொபைல் பொருட்களின் ஏற்றுமதித் தொழிலில் எட்டு வருடங்களாக ஈடுபட்டு வருகிறார் நாகு. ஆரம்பத்தில் கமலா திரையரங்கின் பொறுப்பைக் கவனித்து வந்த நாகு, பின்னர் தன் மாமனாரின் வியாபாரத்தில் இறங்கிவிட்டார். சினிமாவோ, ஆட்டோமொபைலோ இரண்டுமே நன்றாகப் போனால்தான் மதிப்பு!

தைப் போட்டுக்கிட்டாலும் அந்த வட்டத்தை அழிச்சுட்டு பெருசா போட எப்பவாவது முயற்சி பண்றமா சொல்லுங்க? முயற்சி, முயற்சின்னு தொடர்ந்துக்கிட்டே இருக்கணும் ரம்யா. தட்டினா கதவு திறக்காது. தொடர்ந்து கைவலிக்க மனசு சோர்ந்து போகாம தட்டிட்டே இருந்தாத்தான் எந்தக் கதவும் திறக்கும். சரி... நேரடியாவே கேக்கறேன். பத்து வருஷம் முன்னே பேங்க்ல பார்த்த ரம்யா மாதிரி இல்லியே நீங்க? முகமெல்லாம் மாறிப் போச்சு. அடையாளமே தெரியலையே..."

"கவலைதான்னு வச்சுக்கங்க ரகுபதி. பைத்தியம் பிடிச்சவ மாதிரி ஒவ்வொரு கோயிலா அலையறேன். கேள்விப்படாத சாமியாரை எல்லாம் போய் பார்த்து ஆசி கேக்கறேன். ஆனாலும் மனசு ஒரு நிலையில இல்லை. சில சமயங்கள்ல காரணமே இல்லாம துக்கமா இருக்கு. பிபி, ஷுகர், மூட்டு வலி எல்லாம் வந்தாச்சு. யோகா கிளாஸுக்கும் போறேன்."

சிரித்தான் ரகுபதி. மிரண்டு போய்ப் பார்த்தாள். ஏன் சிரிக்கிறான்?

"நீங்க எப்படி ரகுபதி அப்படியே இருக்கீங்க. பணமும் வசதியும் பகட்டான வாழ்க்கையும்தானே காரணம்?" என்றாள்.

"இல்லங்க... பணம் வந்தா நீங்க சொல்ற வியாதிகள் எல்லாம் தானே வந்து நிற்கும். நீங்க பண்ணாத ஒண்ணை நான் பண்றேன். அதுதான் காரணம்."

"புதிர் போடறீங்களே."

"புதிர் இல்லை. உங்களை லவ் பண்ணினேன். உங்கப்பா ஓடுடான்னு விரட்டிட்டாரு. எதுக்கு பார்ட்டிக்குலரா ஒரு பொண்ணை மட்டும் லவ் பண்ணுவானேன்னு இப்ப எல்லாரையும் லவ் பண்ண ஆரம்பிச்சுட்டேன். என் மனைவி, குழந்தைங்களை என் கஸ்டமர்களை, இந்த ஊரை, இந்தக் கோயில்கள்ல இருக்கற தெய்வங்களைன்னு கொஞ்சம் கன்னாபின்னான்னு பெரிய லெவல்ல நேசிக்க ஆரம்பிச்சுட்டேனா? இப்ப என் மனசுல கோபம், ஏமாற்றம், பொறாமை, சூழ்ச்சின்னு எந்த கெட்ட குணமும் நுழைய முடியல. அதனால எந்த வியாதியும் வர முடியலை. தினம் கண்ணாடியில் என் முகத்தைப் பார்த்துப்பேன். 'எத்தனை அழகான கம்பீரமான முகம் எனக்கு'ன்னு என் முகத்தை நானே ப்ரியமா ரசிப்பேன். எனக்கான வாழ்க்கை நல்லாவே இருக்குன்னு நம்பறேன். அதுதான் ரகசியம்."

"இது எப்படி... சுவாமிஜி சொல்லிக் கொடுத்தாரா?" என்றாள் பிரமிப்புடன்.

"இது சுவாமிஜி சொல்லிக் கொடுத்து வரவேண்டியதில்லை ரம்யா. நம்ம மனசுக்குள்ளேயே எல்லா மந்திர சக்தியும் இருக்கு. சுவாமிஜியைப் பார்க்கறதுக்கும், இது மாதிரி இடத்துக்கு நான் வர்றதுக்கும் காரணம் இந்த இடங்கள்ல எல்லாருடைய மனசும் ஒன்றுபடும்போது பாஸிட்டிவ் எண்ண அலைகள் உருவாகும். அது எனக்கு பாட்டரி ரீசார்ஜ் பண்ற மாதிரி. எனக்கே உங்கப்பா மேல கோபம் இல்லை. நீங்க அவரை வெறுக்காம இருக்க முயற்சி பண்ணுங்க. முடிஞ்சா லவ் பண்ணுங்க. எல்லாத்தையும் லவ் பண்ணுங்க, லைஃப் கலபமா இருக்கும்" என்று ரகுபதி விடைபெற்று நடக்க ஆரம்பிக்க, ஆழமாய் பெருமூச்சு விட்டாள் ரம்யா. சுவாசமும் எண்ணமும் இப்போது சீராகியிருந்தன.

வலைபாயுதே



அட! பூகம்ப ஜாதகம்!

மொபைல்:

இன்றைக்குப் பலருடைய லட்சியம் செல்போன் வாங்குவதாகத்தான் இருக்கிறது. மொபைல் உலகில் என்னென்ன மாற்றங்கள் நடக்கின்றன, புதிதாக வந்துள்ள மொபைல்களின் விவரங்கள் என்னென்னவென அப்டேட் ஆகிக்கொள்ள உதவும் தளம் www.phonescoop.com நோக்கியா, சைமன்ஸ், பாம், ஹிட்டாச்சி, சோனி, மிட்சுபிசி, விடெக் என உலக மார்க்கெட்டில் ரிங்கிக் கொண்டிருக்கும் எல்லா மொபைல்களும் இங்கே கண்காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கின்றன.

டௌன்லோட்:

டிசம்பரும் அதுவுமா நீங்க அழகா ஒரு கிறிஸ்துமஸ் மரம்கூட வைக்காம இருந்தா எப்படி! கிறிஸ்துமஸ் தாத்தா கோச்சுக்க மாட்டாரு? அதனால நீங்க சமர்த்தா www.efreedown.com/soft_141378.html-க்கு போனீங்கன்னா அழகா, இலவசமா ஒரு கிறிஸ்துமஸ் மரத்தை எடுத்துக்கலாம். அதை உங்க டெஸ்க்டாப்லயே மினுக் மினுக்னு வைச்சுக் கொண்டாடலாம். ஓ.கே.வா!



வலைப்பதிவு:

நியூயார்க்கில் வாழும் ஸாங்கோ ஸௌவ் என்பவர் இலங்கைக்கு கிழக்கே ரிக்டர் ஸ்கேலில் ஐந்துக்கு மேல் மதிப்புள்ள பூகம்பம் வரும் என்று கணித்திருந்தார். அக்டோபர் 16-ம் தேதி அன்று அப்படி ஒரு பூகம்பம் வந்ததாகவும் தன்னுடைய வலைத்தளத்தில் எழுதியுள்ளார். அதேபோல இந்தியாவில் கேரளாவுக்கு மேலே உள்ள பகுதிகளில் 6.5 ரிக்டர் அளவு பூகம்பம் வரும் என்று அக்டோபர் 14 அன்று கணித்திருந்தார். பத்து நாட்களில் 'நான் கணித்தது தவறாக இருக்கலாம்' என்று சொல்லி விட்டார். போன வருடம் டிசம்பர் 26 அன்று தமிழகத்திலும் இலங்கையிலும் கொடூர தாண்டவம் நடத்திய சுனாமி உருவானது கடலுக்கடியில் ஏற்பட்ட பூகம்பத்தால்தான். அந்த பூகம்பத்தை டிசம்பர் 13-ம் தேதி அன்றே கணித்திருக்கிறார். மேலும் விவரங்களுக்கு quake.exit. com/images_2004_6.htm. இந்தோனிஷியாவில் 'Geoeruption' ஏற்படும் என்று இவரால் சொல்ல முடிந்திருக்கிறது. தன் சொந்தச் செலவிலும் மற்றவர்களின் நன்கொடை மூலமாகவும் பூகம்ப ஆராய்ச்சியைத் தொடர்ந்து செய்து வருகிறார். (tamilnithi. blogspot.com - வலைப்பதிவிலிருந்து)

- வலைஞன்


பின்வாங்காமல்



''எனது செலக்ஷன் எப்பவுமே பெஸ்ட்! உங்க செலக்ஷன் எப்பவுமே வொர்ஸ்ட்!''

''அத நீ சொல்லித்தான் தெரிஞ்சுக்கணுமா? உன்னையும் என்னையும் பாத்தாலே தெரியலியா?''

- பாளை. பாலு




''மக்களோட மூட நம்பிக்கைக்கு ஒரு எல்லையே இல்லாம போயிடுச்சு!''

''எப்படிச் சொல்றீங்க?''

''தொடர் மழைய நிறுத்த வேண்டி, எங்க ஏரியாவுல ரெண்டு கழுதைகளுக்கு 'டைவர்ஸ்' பண்ணி வெச்சுட்டாங்க...!

- குட்டி பிரசன்னா




''பழசையெல்லாம் கொஞ்சம் எண்ணிப் பாருங்கன்னு சொன்னதும் தலைவர் எங்கே வேகமா போறாரு?''

''சென்ட்ரல் ஜெயிலுக்குத் தான்.''

- வீ.விஷ்ணுகுமார்


சிரிப்பூ!



"காலைல எழுந்து தண்ணி பிடிச்சு, சமைச்சு, துணி துவைச்சுட்டு ஆபீஸ் வர ரொம்ப கஷ்டமா இருக்கு... கல்யாணம் பண்ணிக்கலாமான்னு யோசிக்கறேன்..."

"யோசிச்சு செய்... ஒருத்தனுக்கு செஞ்சுக்கவே ரொம்ப கஷ்டமா இருக்குன்னு சொல்றியே... ரெண்டு பேருக்கு எப்படி செய்யப் போறே?"

- கே. ஆனந்தன்




"நான் தேடிப் போன மந்திரவாதி தமிழ் இலக்கணம் நெறைய படிச்சிருப்பார் போலிருக்கு."

"எப்படிச் சொல்ற?"

" உங்க எதிரிக்குச் செய்வினை பண்ணணுமா, செயப்பாட்டு வினை பண்ணணுமா'ன்னு கேட்டாரே!"

- வீ. விஷ்ணுகுமார்



"மவராசா சாமியோவ், நீங்களும் உங்க படைவீரங்க ரெண்டாயிரம் பேரும் இன்னைக்கிப் பின் வாங்கறதா சொன்னாங்க சாமியோவ். நல்ல 'பின்'னா கொண்டாந்திருக்கோம்! வாங்கு சாமியோவ்!"

- இரத்தினம்

அனிமல் பிளானட் பார்க்கறீங்களா?

உலகம் இவ்வளவுதான்!

பிரான்சிலுள்ள வேலன்சியன்ஸ் எனும் பகுதியில் இருக்கிறது அந்த வீடு. அம்மா, பெண் இருவர் மட்டுமே வசித்து வருகிறார்கள். அம்மாவுக்கு 38 வயது (அந்த இளம் பெண்ணின் வயது வேண்டாம். கட்டுரை அம்மாவைப் பற்றியது தான்). ஒரு மாலை நேரம். ஏதோ சில அற்ப காரணங்களுக்காக இருவருக்குமிடையே பயங்கரச் சண்டை. எகிறிக் குதித்து கத்திக்கொண்டிருந்த அந்த இளம்பெண், ஒரு கட்டத்தில் கோபித்துக்கொண்டு விறுவிறுவென்று வீட்டை விட்டு வெளியேறி தன் பாட்டி வீட்டுக்குப் போய்விட்டாள்.

பாவம் அந்த அம்மா, தனிமை, வெறுப்பு, கோபம், சோர்வு அனைத்தும் ஒன்றுசேர்ந்து தாக்க, வேறு வழியின்றி தூக்க மாத்திரை பாட்டிலைத் திறந்திருக்கிறாள், (தற்கொலை செய்து கொள்வதற்காக அல்ல, தூங்குவதற்காகத்தான் என்று சொல்கிறார்கள்). அடித்துப் போட்டது போல் இரவு முழுவதும் மயக்க நிலை. இடையில் ஒருமுறை படுக்கையை விட்டு எழுந்திருக்க முயன்றபொழுது அரை மயக்கத்தில் கீழே விழுந்து விட்டாள். பிரச்னை தொடங்கியது.

'லொள் லொள்' என்று குரைத்தபடி என்னவோ ஏதோ என்று ஓடி வந்தது அவள் வளர்த்த லாப்ரடார் வகை புஸ்ஸி. கீழே விழுந்து கிடந்த எஜமானியைப் பார்த்ததும் அதற்கு என்ன தோன்றியதோ தெரியவில்லை. அவளது முகத்தைத் தனது வாயால் அசைத்துப் பார்த்திருக்கிறது. பயனில்லை. அப்படியே தனது நாக்கை நீட்டி அவளது கன்னத்தை எச்சில் படுத்தியிருக்கிறது. பிறகு...

நீண்ட நேரத்துக்குப் பிறகு நினைவு மீண்டு, அந்தப் பெண் கண் விழித்த பொழுது அவளால் எழ முடியவில்லை. மரண வலி. முகம் முழுவதும் ரத்தம். மூக்கு, தாடை, கன்னம் என்று சதை கிழிக்கப்பட்டிருந்தது.

இதுபோன்ற விசித்திர விபரீதத்தை பிரான்ஸ் மருத்துவர்கள் இதுநாள் வரை கண்டதில்லை. எவ்வளவு முயன்றும் அவர்களால் அவளது முகத்தைச் சீரமைக்க முடியவில்லை. என்ன செய்வது என்று தெரியாமல் அப்போதைக்கு சிகிச்சையளித்து அனுப்பி விட்டார்கள். ஆனால் முகம் முழுவதும் துவாரங்கள். பேச முடியாது. சாப்பிட முடியாது. ஒரு சொட்டுத் தண்ணீர் கூட குடிக்க முடியாது. வாயில் எதைப் போட்டாலும் தங்காது. ஒரு கட்டத்தில் வாயைத் திறக்கவே முடியாமல் போனது. ஒரு முகமூடியை மாட்டிக்கொண்டு வாழ்ந்து வந்தாள். அந்த லாப்ரடார் எதற்காக அப்படிக் கடித்து வைத்தது என்று அறிந்து கொள்ள முடியவில்லை. இந்தச் சம்பவத்திற்குப் பிறகு நாயைக் கொன்று விட்டார்கள். சில மாதங்கள் கழிகின்றன.



இரண்டு வாரங்களுக்கு முன்பு, அவளுக்கு சிகிச்சையளித்த அதே குழு, அந்தப் பெண்ணை லியான் எனும் பகுதிக்கு அழைத்து வந்து, துணிந்து முதல் முறையாக முக மாற்று அறுவை சிகிச்சை நடத்தியிருக்கிறார்கள். மிக மிக ஆபத்தான சிகிச்சை. லாப்ரடாரிடம் மறுபடியும் தாடையைக் காட்டுவதற்கு ஒப்பான ஒரு செயல். மாற்றுச் சதை கொடுத்தது, இறந்து போன ஒருவர். அவரது

முகத்திலிருந்து தேவைப்படும் சதைப் பகுதிகளை பிய்த்து இந்தப் பெண்ணின் முகத்தில் அமர்த்தி யிருக்கிறார்கள். சிகிச்சை மாபெரும் வெற்றி (லியோன் இப்பொழுது மாற்று அறுவை சிகிச்சையின் தலைமையிடமாக மாறியிருக்கிறது. ஏழு வருடங்களுக்கு முன்னால் முதல் முறையாக இங்கு ஒருவருக்கு கையில் மாற்று அறுவை சிகிச்சை செய்திருக் கிறார்கள். இப்பொழுது முகம்).



படுக்கையை விட்டு எழுந்த அந்தப் பெண், நடுங்கியபடியே கண்ணாடியில் தனது புதிய முகத்தைப் பார்த்திருக் கிறாள். சந்தேகமேயில்லை. முகம் அவளு டையதுதான், அதே பழைய கண்கள், அதே நெற்றிச் சுருக்கங்கள். ஆனால் நுனி மூக்கு அவளுடையதல்ல, தாடை, கன்னம் அவளுடையதல்ல. உதடுகள் அவளுடையதல்ல. புது பாவாடை அணிந்து கொண்டு திரும்பித் திரும்பிப் பார்க்கும் சிறுமியைப் போல தனது முகத்தைத் திருப்பித் திருப்பிப் பார்த்துப் பூரித்திருக்கிறாள்.

படுக்கைக்குத் திரும்பியவுடன் மருத் துவர்களிடம் சைகையால் ஒரு பேப் பரும் பேனாவும் கேட்டிருக்கிறாள். கொடுத்திருக்கிறார்கள். அவசர அவசர மாக அவற்றை வாங்கிக் கண்ணீர் பொங்க 'நன்றி' என்று எழுதி அந்த மருத்துவரிடம் காண்பித்தபொழுது அவளது புதிய முகத்தில் ஒரு குட்டிச் சிரிப்பு...

புதிய முகம்பெற்ற அம்மா, கோபித் துக்கொண்டு போன இளம்பெண், லாப்ரடார் இவர்கள் மூவரது பெயர் களும் அறிவிக்கப்படவில்லை. முதல் நபரின் பெயர் மருத்துவ ரகசியம். சம் பந்தமேயில்லாத இரண்டாவது நபரின் பெயரை அறிந்து கொள்வதில் படிப்பவர் களுக்கு இத்தனை ஆர்வம் ஏற்பட்டுள்ள தற்குக் காரணம், 'இளம்பெண்' என்ற அடைமொழிதான். மற்றபடி உலக அறிவு விருத்திக்கு இந்தப் பெயர் பயன்படப் போவதில்லை. மூன்றாவது நபர் மரியா தைக்குரிய லாப்ரடார். சிறிது முயன்றால் அவரது பெயரைக் கண்டுபிடித்து விட லாம்.

பின்குறிப்பு : டாமி, பப்பி, பிளாக்கி என்று உங்கள் வீட்டில் திரியும் லொள் லொள்ளோடு கவனமாக இருப்பது நல்லது. தொண்டையைக் கனைக்கும் பொழுதே குறிப்பறிந்து கொடுக்க வேண்டியதைக் கொடுத்து விடுவது நல்ல பண்பு. தாடையோடு தாடை சேர்த்து, மூக்கோடு மூக்கு சேர்த்து, நெற்றியோடு நெற்றி முட்டிக் கொஞ்சும்பொழுது கூடுதல் கவனம் தேவை. லாப்ரடாராக இருந்தால் 'வாங்க போங்க' என்று உயர்திணை யில்தான் பேச வேண்டும். 'பரவா யில்லை நீங்க சாப்பிடுங்க' என்று உபசரிக்க வேண்டும். அனிமல் பிளானட் பார்க் கும்பொழுது கூட தள்ளி யிருந்து பார்ப்பது சாலச் சிறந்தது.

- மருதன்

‘சோனியா பொறந்த நாளு...





சோனியாம்மாவோட பொறந்த நாளுன்னா சும்மாவா... மெரட்டி புட்டாங்கப்புன்னு சொல்லணும்ங்கறதுக்காகவே ஏகத்துக்கும் செலவு பண்ணியிருக்காங்க நம்ம வாசனோட சிஷ்ய கோடிங்க... சத்தியமூர்த்தி பவனுக்குள்ள அன்னிக்கு தொண்டர்களோட எண்ணிக்கையை விட டாடா சுமோ, டூவீலருங்க, போஸ்டர்களோட எண்ணிக்கைதான் தூக்கலா இருந்துச்சு.

இங்கிலீஷ்–தமிழ்னு சர்வகோஷ்டிகளும் சேர்ந்து... தனித்தனியா ஆளுக்கொரு சைசுல கலர் கலரா போஸ்டர் அடிச்சு ஒட்டியிருந்தாங்க... சும்மா சொல்லக்கூடாதப்பு... என்னமா வார்த்தைகளைப் போட்டுத் தாக்கியிருக்காங்க தெரியுமா...

'Pride of our Nation
Mother of our Nation
Our beloved
Supremo
Soniaji'-ன்னு ஒரு இங்கிலீஷ் போஸ்டரு... 'மதவாத சக்திகளை முறியடித்த மகா சக்தியே'ன்னு சுத்திபாரா ஜனார்த்தனம், 'இந்தியாவின் உயர்ந்த பிரதமர் பதவி வேண்டாம் என்று ஏற்க மறுத்த அன்னை சோனியா'ன்னு ஜே.எம். ஆருண்... இன்னும் விடியல் சேகர், சிடி மெய்யப்பன், ராயபுரம் மனோன்னு ஏகப்பட்ட பேரு கிட்டத்தட்ட பதினாறு வகை போஸ்டர் ஒட்டியிருந்தாங்கப்பு...

இதெல்லாம் பத்தாதுன்னு நம்ம யூத்து தலைவரு விஷ்ணுபிரசாத்து. பேனரை பவன்ல வச்சுப்புட்டு மெகா சைசு கேக்கோட கலைஞர் வூட்டுக்குப் போயி, அவரை வெட்டச் சொல்லியிருகாரு... ஒருவேளை பார்ட்டி ஹெட் ஆபீசுன்ன உடனே காரு கோபாலபுரம் போயிடிச்சோ என்னவோ... அதே மாதிரி யாருமே ஒட்டாத இடத்துல, அதுவும் கட்டடத்தோட முகப்புல போஸ்டர் ஒட்டி எல்லார் வாய்லயும் கடி வாங்கிட்டு இருந்தாருப்பு டாக்டர் செல்லகுமாரு...

முழுக்க முழுக்க வாசன் ஆளுங்களே பவன்ல டேரா போட்டிருந்ததால மத்த ஆளுங்க யாரும் உள்ள வரவே இல்லே.. இளங்கோவன், சுதர்சன நாச்சியப்பன்லாம் தனி ஆவர்த்தனம் பண்ணிட்டாங்க. கார்த்திக் சிதம்பரம் மட்டும் ஆரம்பத்துல இருந்து கடைசி வரைக்கும் வாசன் கூடவே ஒட்டிக்கிட்டு இருந்துட்டு கிளம்பினாருப்பு.

பவன்ல அன்னிக்கு ரொம்ப ஆவலா எதிர்பார்க்கப்பட்டவங்க ரெண்டு பேரு. ஒருத்தரு 'முன்னாள் துண்டு போடாத தி.மு.க.காரர்' திண்டிவனத்தார். அடுத்தவரு 'எழில் காத்த நாயகி' விநாயகமூர்த்தி. திண்டிவனத்தாரு எட்டிக் கூடப் பார்க்கல... அம்பிகா சோனி ஏதோ நோட்டீசு கொடுத்துட்



ஒற்றன்

டாங்களாம்ல அவருக்கு-

அதைப் பத்தி ஒவரா நக்கல் விட்டுட்டு இருந்தாங்கப்பு...

"தீப்பிடிக்குதாம்ல... தீ... எல்லாத்துக்கும் சேர்த்து வச்சாங்கள்ல ஆப்பு..."ன்னு செம நக்கல் பார்ட்டிகளா பேசிக்கிட்டு இருந்தாங்க. ஆனா விநாயகமூர்த்தி வந்து பக்குவமா தலையைக் காட்டிட்டு கௌம்பிட்டாரு... ஒரு தொண்டரு எந்த சந்தடியிலயும் கலந்துக்காம ரொம்ப சோகமா பவனோட மூலைல உட்கார்ந்து பராக்கு பார்த்துக்கிட்டிருந்தாரு. இன்னொரு கதர்ச்சட்டை அவருகிட்ட வந்து 'என்னண்ணே, சோனியாம்மா பொறந்த நாளுல சோகமா இருக்கீங்க? கிளம்புங்க போகலாம்'னு புறப்பட்டாங்க. பின்னாடியே போய்ப் பார்த்தேன். நம்ம டாஸ்மாக்குதேன்.

திரும்ப பவனுக்கு ரிட்டர்ன் ஆனா, மேடையில விநாயகமூர்த்தி, கார்த்திக்னு ஏகப்பட்ட பேரு... எல்லாரையும் பேச விட்டா கதை கந்தலாயிடும்னு நினைச்சு தானே மொதல்ல மைக்கப் புடிச்சுட்டு கிளம்பிட்டாருப்பு வாசன்.

போறப்ப தானே காரை டிரைவ் பண்ணினாரு. அதைப் பார்த்து ஆர்வக் கோளாறுல முண்டியடிச்ச கதர்ச் சட்டைங்க காரை நகரவே விடல... நீந்தி நீந்தித்தான் கிளம்பினாரு....

வாசன் காரு சத்தியமூர்த்தி பவனை தாண்டுச்சோ இல்லியோ... பவன்ல இருந்த ஒரு வண்டியையும் காணலப்பு... அட... இது காங்கிரஸ் கட்சி!

படங்கள் : ராஜன்

சோகத்த மறந்த நாளு!'



எங்கே என் கண்ணன்?

'தர்மத்தையே தர்மம்
செய்தவன் கர்ணன்; அதனால்
அவன் கர்மத்தையெல்லாம்
சீர்செய்தவன் இந்தக் கண்ணன்!'
- ஸ்ரீ கிருஷ்ணன்

சீனுவின் நிலையைப் பார்த்து ராஜம் அப்படியே விக்கித்துப் போய் விட்டாள். அப்படியே குனிந்து அமர்ந்து அவரை மடியில் தாங்கிக் கொண்டாள். அவரோ முகத்தைக் கோணிக்கொண்டு நெஞ்சை வலிப்பதைக் குறிப்பால் உணர்த்தினார்.

''ஐய்யோ என்னன்னா இது... இருங்கோ யாரை யாவது கூட்டிண்டு வரேன்... எனக்கு ரொம்ப பயமா இருக்கு...'' என்று அவரை அப்படியே படுக்க வைத்துவிட்டு தங்கியிருந்த அந்த ஆஸ்ரம அறையை விட்டு வெளியில் வந்தாள். அவள் வந்தவிதம், கலங்கிப் போன அந்த முகம் அங்கு இருப்பவர்களுக்கு ஏதோ பிரச்னை என்பதை உணர்த்தி விட்டது.

தமிழ்நாட்டுக்காரர்கள் வந்தால் தங்குவதற்கென்றே உள்ள ஆஸ்ரமம் அது. எனவே பாஷை ஒரு பிரச்னையாக இல்லை. எல்லோருமே உதவிக்கு ஓடி வந்தனர். அப்படி வந்தவர்களில் ஜெகன்னாத் என்கிற ஒரு டாக்டரும் இருந்தது தான் அதிசயம்.

''சிம்டம்ஸை பார்த்தா இது ஒருவித மைல்ட் அட்டாக் மாதிரி தெரியுது...'' என்றவர், சீனுவை காற்றாட படுக்க வைத்துவிட்டு டாக்சி ஒன்றுக்குச் சொல்ல ஓடினார். அதிகபட்சமாக ஐந்தாவது நிமிடமே சீனுவும் ராஜமும் காரில் அடங்கிவிட, அதுவும் ஆஸ்பத்திரி நோக்கி ஓட ஆரம்பித்தது. கூடவே அந்த டாக்டர்.

காரில் சீனு பேச முயற்சித்தார்.

''ரா...ராஜம்... பெட்டி மாறிடுத்து! நர்மதைக் கரைல அந்த சித்தயோகி சொன்ன மாதிரியே என் கண்ணன் குதிச்சு ஓடிட்டான். நிச்சயமா காசில தான் இருக்கணும் அந்தப் பெட்டி.... கணேஷுக்கு போன் போடு. கண்ணனைப் பத்தி முதல்ல விசாரி...'' என்று சீனு திக்கித் திக்கி பேசியதைக் கேட்ட அருகில் இருந்த டாக்டர் படுவேகமாக ஹார்ட் அட்டாக் வந்த காரணத்தைப் புரிந்து கொண்டுவிட்டார்.

''என்ன, எதையாவது மிஸ் பண்ணிட்ட அதிர்ச்சியா? டோன்ட் ஒர்ரி. நீங்க மிஸ் பண்ணினது எதுவா இருந்தாலும் திரும்பக் கிடைக்கும். இந்த நேரத்துல மனசை கொதிக்க விடாதீங்க. பி.பி.எகிறினா ஹார்ட்டுக்குத்தான் ட்ரபுள்... இதோ என்கிட்ட செல்போன் இருக்கு. நம்பர் சொல்லுங்க. நான் லைன் போட்டுத் தரேன். இங்கயே இப்



பவே அந்தப் பெட்டி பத்ரமா இருக்கறத நீங்க ஊர்ஜிதப்படுத்திக்கலாம்...'' என்ற அந்த டாக்டரிடம் சரியான வேகம். செல்போன் பட்டன்கள் மேல் விரலை நிறுத்திக்கொண்டு முகத்தைப் பார்த்தார். சீனு சிரமப்பட்டு வேட்டியின் இடுப்பு மடிப்பில் இருந்து பர்ஸை எடுத்து அதில் இருந்த கணேஷின் கார்டை எடுத்து நடுங்கியபடி நீட்ட, அடுத்த முப்பதாவது நொடி கணேஷ் 'ஹலோ' சொன்னான்.

"அம்பி கணேசா... பெட்டி மாறிடுத் துப்பா..."- ராஜம்தான் பேசினாள்.

"ஆமாம் மாமி... நான் நேத்தே பார்த் துட்டேன்... கவலைப்படாதீங்க பத்ரமா வெச்சிருக்கேன்..."

''ஏன்னா... பெட்டி பத்ரமா கணேஷ்கிட்டதான் இருக்காம்...''- ராஜம் சீனுவிடம் சொல்லிவிட்டு மீண்டும் பேசினாள்.

"சரி... கணேசா! இங்க அவருக்கு பெட்டி மாறின விஷயம் தெரிய வந்த நொடி நெஞ்சு வலி வந்துடுத்து. இப்ப ஆஸ்பத்திரிக்குப் போய்ண்டுருக் கோம். அங்க எங்களுக்கு நீ கிடைச்ச மாதிரி, இங்க ஒரு டாக்டரை அந்தப் பெருமாள் அனுப்பி வெச்சிருக்கார்... அவருக்கு எதுவும் ஆயிடக் கூடா துன்னு துடிக்கறது என் மனசு. அந்தப் பெட்டி பத்ரம். அதை சாதா ரணமா நினைச்சு தூக்கி பரண்ல கிரண்ல போட்டுடாதே...'' அவள் சொல்லிக் கொண்டிருக்கும்போதே லைன் கட்டாகி செல் அமைதியா னது. அதை உதறி உதறி 'ஹலோ' சொல்லி காதில் வைத்துப் பார்த் தாள் ராஜம்.

"இல்ல... இந்த ஏரியாவுல சிக்னல் கிடைக்கல. விடுங்கோ... ஹாஸ்பிடல் போன பிறகு அங்க இருந்து பேசிக்க லாம். டோண்ட் ஒர்ரி'' என்றார் டாக்டர்.

''ராஜம்... அது பத்ரமா இருக்கறத விட முக்கியம் பூஜை. ஆனா அந்த கணேஷ் ஒரு நாத்திகனாச்சே... இப்படி ஆயிடுத் தேடி..." என்று கடுமையாக சீனு உணர்ச்சி வயப்பட, முகம் உடனேயே வலியோடு கோணத் தொடங்கியது.

"நோ சார்... இப்படி நீங்க உணர்ச்சி வசப்படறது ரொம்பத் தப்பு...'' என்ற டாக்டர், சற்றுக் குனிந்து வெளியே பார்த்தார். ஹாஸ்பிடல் முகப்பு தெரிந்தது. சீனு உடனடியாக அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார்.

செல்போனை மார்பு மேல் வைத்துக் கொண்டே கண்களை மூடியிருந்தான்



கணேஷ். அவன் ராஜத்துடன் பேசியதைப் பார்த்துக்கொண்டுதான் இருந்தாள் அனுராதா. பாதியில் பேச்சு கட் ஆகவும் அவளிடமும் தவிப்பு.

"என்ன கணேஷ், பெட்டி விஷயமா தானே அந்த அம்மா பேசினாங்க..."

"ஆமாம். நான் கூடப் பெட்டியைத் தொலைச்சது அவருக்குத் தெரிய வந்தா ஹார்ட் அட்டாக்கே வந்துடும்னு சும்மா பேச்சுக்குத்தான் சொன்னேன்... ஆனா அவருக்கு நிஜமாவே வந்திருச்சுபோல..."

"கணேஷ்...அவங்க பேசின நம்பருக்கு ட்ரை பண்ணிப் பாருங்களேன்...'' அனுராதா துரிதப்படுத்தினாள். கணேஷும் ட்ரை பண்ணினான். டாக்டர் அகப்பட்டுவிட்டார்.

"கணேஷ் ஃப்ரம் வாரணாசி..."

"ஓ...தட் யங்மேன்! மிஸ்டர் சீனு தானே உங்களுக்கு வேணும்?"

"யெஸ் சார்... நீங்கதான் அவருக்கு ஹெல்ப் பண்ணிக்கிட்டிருக்கற டாக்டரா?"

''எக்ஸாக்ட்லி. அவர் இப்ப இன்டென்சிவ் கேர்லதான் இருக்கார். கப்புள் ஆஃப் அவர்ஸ் ஆகும் அவரோட ரெகவரி பற்றித் தெரிய... ஜஸ்ட் இப்பத் தான் அந்த மூங்கில் பெட்டி பற்றி மிஸஸ் சீனு என்கிட்ட சொல்லிண்டிருந்தாங்க. இன்ஃபாக்ட் இன்னிக்குப் பூஜை செய்ய முடியாதபடி ஆயிடுச்சேங்கறதுதான் மிஸ்டர் சீனுவோட அட்டாக்குக்கு மேஜர் காரணம்.

நான் கூட அவர்கிட்ட சொன்னேன். 'உங்க கண்ணனுக்குக் கட்டாயம் இன்னிக்குப் பூஜை நடக்கும் கலங்காதிங்க'ன்னு 'இல்ல... அந்தக் கணேஷ் ஒரு நாத்திகன். பூஜைன்னாலே பெட்டியைத் தூக்கி கங்கைல வீசி எறிஞ்சிடுவான்'னு ரொம்பவே டெம்ப்ட் ஆனார் மிஸ்டர் சீனு. ஆனா நான் அப்படி நினைக்கல.

'மிக அதிகபட்ச மனிதாபிமானம், கொஞ்சமும் ஏமாந்துடக் கூடாதுங்கற மிதமிஞ்சின எச்சரிக்கை... இதெல்லாம் தான் நாத்திக உணர்ச்சியா மாறுது.. வாஸ்தவத்துல ஒரு நாத்திகன்தான் பெரிய பரோபகாரி. மாறுபட்ட கருத்துக்கும் சரிசமமான மதிப்பும் மரியாதையும் கொடுக்கறவன். அதனால உங்க சார்பா அந்தக் கணேஷே பூஜை செய்வார். தைரியமா இருங்கோ'ன்னு சொன்னேன்.

அவருக்கு இப்ப ட்ரீட்மெண்ட் கொடுத்துக்கிட்டு இருக்கோம். பட் இந்த மருந்து அவரை பெருசா காப்பாத்தாது. நீங்க பூஜை செய்திங்க, கண்ணனுக்கு இன்னிக்குப் பூஜை தொடர்ந்ததுங்கற தகவல் அவர் காதுல விழறதுலதான் அவரது ரெகவரியே இருக்கு.

ஐ மீன்.. ஒரு உயிரைக் காப்பாத்த நீங்க உங்க தனிப்பட்ட நம்பிக்கைகளை மூட்டை கட்டி வெச்சிட்டு பூஜை செய்வீங்கன்னு சொல்லியிருக்கேன். செய்வீங்கதானே?"

- டாக்டர் ஜெகன்னாத் வெகு அழகாய்ப் பேசியவராக கேட்ட அந்தக் கேள்வி கணேஷை ஒரு உலுக்கு உலுக்கிவிட்டது. முதல் முறையாக 'நடப்பது எதுவும் தற்செயல் சம்பவம் இல்லை. ஒரு திட்டமிட்ட செயல்தானோ என்பது போன்ற ஒரு எண்ணம்! என்ன பதில் சொல்வது என்பது தெரியாதபடி ஒருவித அமைதிக்குள் புதைந்து விட்டவனை இரும்பவும்



எழும்பூர்

வெளியே சாப்பிடுவதை எப்பொழுதும் தவிர்த்து விடுவார் பரிதி இளம்வழுதி. நண்பர்கள் குழாம் சேர்ந்துவிட்டால் போதும்... அடையாறு ஹாட் சிப்ஸில் பட்டையைக் கிளப்பி விடுவார். அதுவும் எப்பொழுதாவதுதான்.

தனது குரலால் ஒரு உலுக்கு உலுக்கத் தொடங்கினார் அந்த டாக்டர்.

"ப்ளீஸ் மிஸ்டர் கணேஷ். ஒரு பத்து நிமிஷம் அந்தக் கண்ணனுக்கு ஏதாவது நைவேத்யம் பண்ணி ஒரு கற்பூர ஆரத்தி காமிச்சிடுங்க. முடிஞ்சா ஸ்லோகம் சொல்லுங்க..."

"சார்..."

"என்ன மிஸ்டர் கணேஷ்... இட்ஸ் ஓ.கே. நீங்க எதுக்கு டெவி கேட்டா ஃபீல் பண்ணிக்கிட்டு... நீங்க பூஜை பண்ணிட்டதா நான் ஒரு பொய்ய சொல்லி முதல்ல அவங்கள காப் பாத்தற வழியைப் பாக்கறேன்..."

"இல்ல சார்... பொய் சொல் லாதீங்க. நீங்க சொன்ன மாதிரி... எனக்காக இல்ல அவருக்காக நான் பூஜை செய்யறேன். அவர் செய்தப்போ கவனிச்சேன். கிட்டதட்ட ஒரு மணி நேரம் ஆச்சு. அதைவிட கூடுதல் காலம் எனக்கு ஆகும்னு நினைக்கறேன்.

பரவால்ல! ஒரு டாக்டரா நீங்க சொல்றதுலயும் சில நியாயங்கள் இருக்கு. நான் பூஜை பண்றேன் டாக்டர்... பூஜை பண்றேன். முடிஞ்சா நான் பண்ணும் போது போன் பண்ணுங்க. நான் மந்திரம் சொல்றது அவர் காதுல விழட்டும்..."

- கணேஷ் சொன்னதைக் கேட்டு அனுராதாவுக்கு ஒரே ஆச்சரியம்.

"கணேஷ்... நீங்க பூஜை பண்ணப் போறீங்களா வாவ்! எனக்கென்னவோ எதுக்காக இல்லாட்டாலும் நீங்க பண்ற பூஜைங்கறதுக்காவே அதுல மயங்கி, அந்த கண்ணன் நிஜமாவே வரப் போறார் பாருங்க..." அனுராதா பரவசப்பட்டாள்.

அதன்பின் கணேஷ் எதுவும் பேச வில்லை. கெந்திக் கெந்தி நடந்து சென்று குளித்துவிட்டு வந்தவன், ஒரு வேட்டி யைக் கட்டிக் கொண்டான். அப்படியே பெட்டியைத் திறந்து வைத்து அதன்முன் அகல் விளக்கு இரண்டை தேடிக் கண்டு பிடித்து வந்து ஏற்றினான். பின் அனு ராதாவிடம் பூக்கள் வாங்கிவரச் சொல்லி, அதில் ஒரு சரத்தை கண்ணன் மேல் சாற்றியவன், உதிரிப் பூக்களை கையில் வைத்துக்கொண்டு மௌனமாகத் துதிக்க ஆரம்பித்து முதல் பூவை கண்ணன்மேல் போட்டவன், "ஓம் கிருஷ்ணாயநம..." என்றான். பின் 'புல்லாங்குழல் கொடுத்த மூங்கில்களே... அந்த புருஷோத்தமன் புகழ் பாடுங்களேன்...' என்று கண்ணதாசனின் டி.எம்.எஸ் பாடிய பாடலை தான் கேட்ட விதத்தில் அதே ராகத்தில் பாடினான். நல்ல குரல் வளம்... எனவே துளியும் பிசிறு தட்டவில்லை. அனுராதா பார்த் துக்கொண்டே இருந்தாள். அறையில் வாழைப்பழம் இருந்தது. அதுதான் நிவேத னப் பொருள்! நல்லவேளை ஊதுபத்தியும் இருந்தது. தூப தீபம் காட்டியவன், செல் போனில் நம்பர் போட்டு டாக்டரைப் பிடித்தவனாக "டாக்டர் சார், நான் இப்ப பூஜை செய்து கொண்டிருக்கேன். மணி அடிக்கப் போறேன். அந்த சீனிவாசன் சார் கேட்கற மாதிரி செய்யுங்க..." என்று மணியையும் அடித்து முடித்தான்.

ஜன்னல் பக்கமாக இப்போது கிளி களுடன் வேறு பறவைகளும் தெரிந்தன. எங்கிருந்தோ ஒரு வாசம் வேறு மிதந்து வரத் தொடங்கியது. வெளியிலும் பெரி தாக மணி சப்தம் கேட்கத் தொடங்கியது. அதே சமயம் வாசற்புரம் நெற்றியில் கோபிச் சந்தனத்துடன் ஒருவன்!

(தொடரும்)



மைலாப்பூர்

ஓய்வாக இருக்கும்போதும் பயணத்தின் போதும் ஆன்மிகப் புத்தகங்கள் இல்லாமல் பார்க்க முடியாது கே.என்.லட்சுமணனை. தீவிர வாசிப்பாளர்.



எங்கள் எம்.எஸ்.

வழிகாட்டும் ஒளி!

எம்.எஸ் அம்மாவும் டி.எஸ். மாமாவும் கிளினிக்கைத் தேடி வந்துவிடுவார்கள்! எத்தனையோ முறை நாங்கள் சொல்லிப் பார்த்துவிட்டோம்... ''அவசியம் ஏற்படுகிற போதெல்லாம் நாங்கள் வருகிறோம். உங்கள் உடல் நலனைப் பரிசோதிக்கிறோம்; கவனித்துக் கொள்கிறோம். நீங்கள் எங்கள் கிளினிக்கைத் தேடி வர வேண்டாமே...'' என்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். ஆனால் அவர்கள் அவ்வப்போது வரத்தான் செய்தார்கள். வந்தவர்கள் ஏதோ தங்கள் உடல் நலத்தைப் பரிசோதித்துக்கொண்டு போனார்கள் என்பதில்லை. அம்மா தன் உடம்பை பற்றியே மறந்துவிடுவார். கிளினிக்கில் பணியாற்றும் ஊழியர்கள், உதவியாளர்களிடம் அவர்களுடைய குடும்பத்தினரைப் பற்றி விசாரிக்க ஆரம்பித்துவிடுவார்! 'பெண்ணுக்கு வரன் அமைந்ததா?' 'மாட்டுப் பெண்ணுக்குப் பிரசவம் ஆயிற்றா?' என்றெல்லாம் அவரவர் வீட்டு விஷயங்களை விசாரிக்கிற போதே சம்பந்தப்பட்டவர்களின் பெயரைக் குறிப்பிட்டுத்தான் விசாரிப்பார் அம்மா!

எங்கள் ஊழியர்களின் சந்தோஷத்துக்குக் கேட்க வேண்டுமா! 'எப்படி நம் குழந்தைகளை இவர் நினைவு வைத்துக் கொண்டிருக்கிறார்! நாம் என்ன பாக்கியம் செய்தோம்' என்று அவர்கள் நெகிழ்ந்துபோய் கண் கலங்கிவிடுவார்கள்.

இப்படி எல்லோரையும் விசாரித்து சந்தோஷப்படவும் சந்தோஷப்படுத்தவுமே இந்த அரிய தம்பதி எங்கள் கிளினிக்கைத் தேடி வந்தார்கள் போலும்!

நான் அம்மா - மாமாவுக்கு டாக்டராகப் பொறுப்பேற்றது முப்பது ஆண்டுகளுக்கு முன். எத்தனையோ பெரிய டாக்டர்கள் இருந்தபோதிலும் பிரபல சர்ஜன், எனது ஆசிரியர் டாக்டர் மோஹன் ராவ், என்னைத் தேர்ந்தெடுத்து அந்தப் பொறுப்பை ஒப்படைத்தார். ''நீ இவர்களை மிக சிரத்தையாகக் கவனித்துக் கொள்ள வேண்டும்'' என்று அவர் பணித்ததை எனது பாக்கியமாகவே கருதுகிறேன்.

ஆனால் அதற்கு முன்பே எம்.எஸ் அம்மா, டி.எஸ் மாமாவுடன் எங்கள் குடும்பத்துக்குத் தொடர்பு இருந்தது. எனது தந்தை சி.கே. வேங்கடநரசிம்மன் ஒரு முன்னணி வழக்கறிஞர். கர்னாடக சங்கீதத்தில் ஆழ்ந்த ஈடுபாடு உள்ளவர். 'பாபு சார்' என்று இசை வட்டாரங்களில் அறியப்பட்டார் அவர். மியூசிக் அகாடமியின் ஆரம்ப வளர்ச்சிக் காலகட்டத்தில் சுமார் 25 ஆண்டுகளுக்கு அதன் செயலாளராக இருந்தார். சங்கீத வித்வான்கள் அடிக்கடி வந்து சென்ற எங்கள் இல்லம் டிசம்பர் சீசன் சமயத்தில், இந்திய கிரிக்கெட் அணியின் டெஸ்ட் மேட்ச் காலத்து ஓய்வு அறைபோல் ஆகிவிடும்! கச்சேரிகளுக்கிடையே எல்லா வித்வான்களும் வருவார்கள்; ஓய்வு எடுத்துக் கொள்வார்கள். எம்.எஸ். அம்மாவின் வருகை மட்டும்

டாக்டர் சி.வி.கிருஷ்ணசாமி



எப்போதும் ரொம்ப ஸ்பெஷலாக இருக்கும்.

கச்சேரி தினத்தன்று படபடப்பும் கவலையுமாக இருப்பார் அம்மா. தம்மால் ரசிகர்களின் எதிர் பார்ப்புக்கு ஈடுகொடுக்க முடியுமா என்று கவலைப் படுவார்! அந்தக் கவலையெல்லாம் அவசியமற்றது என்று உறுதி கூறி, அவரது நிகழ்ச்சிகள் எப்போதுமே 'ஹவுஸ்ஃபுல்' என்று எடுத்துச் சொல்லி, அவர் கையைப் பிடித்துச் சென்று மேடையில் அமர்த்தி விட்டு வருவது எனது தந்தையின் பொறுப்பாக இருந்தது!

அப்பா வழங்கிய இந்த ஆதரவையும் ஊக்கத்தையும் எம்.எஸ். அம்மா என்றென்றைக்கும் நினைவுகூர்ந்து சந்தோஷப்படுவார். பிற்காலத்தில் யாருக்கேனும் என்னை அறிமுகம் செய்து வைப்பிதெனில், அப்பா தொடர்பான



சம்பவங்களைச் சொல்லித்தான் அறிமுகப்படுத்துவார்.

அம்மாவுக்கும் மாமாவுக்கும் நகைச்சுவை உணர்வு அதிகம். வள்ளுவர் கோட்டம் அருகே அவர்கள் ஒரு சிறிய வாடகை வீட்டில் குடித்தனம் இருந்த போது மாமா சொல்லுவார்:

"எங்கள் வீட்டுக்கு வருகிறவர்கள், நாங்கள் டீ.வி பார்க்கறது உண்டா என்று கேட்கிறார்கள்... நான் ரொம்ப ரெகுலரா சி.வியை (டாக்டர் சி.வி.கே) பார்த்துக் கொண்டிருக்கிறேன் என்று சொல்லி விடுவேன்...!"

உடல்நலக் குறைவை இப்படியே



• எனது பேத்தியுடன்...

நகைச்சுவை உணர்வோடு உதறித் தள்ளிவிட்டு இரண்டு பேரும் அர்த்த முள்ள வாழ்க்கை வாழ்ந்தார்கள். எத்தனை எளிமை, என்ன ஒரு சௌலப்பியம் இருவரிடமும்!

எங்கள் மூத்த மகளின் திருமணத்தின் போது (1990), என் மனைவி டாக்டர் பிரேமாவும் நானும் அவர்களை அழைக்கச் சென்றோம்.

"இது நம்ம அகத்துக் கல்யாணம். நான் தான் முதல்ல பாடணும்" என்று சொல்லிவிட்டார் அம்மா. மாமாவும் உடனே ஆமோதித்தார்.

அம்மாவோடு எம்.எல்வியும் டி.கே.பியும் கூட எங்கள் மூத்த மகள் பிறந்து தொட்டிலில் போட்டபோது வந்து பாடினார்கள். இருபத்தொரு வருடங்களுக்கு முன் நடந்த அந்த நிகழ்வை நினைவுகூர்ந்து, "அம்மா, உங்கள் கச்சேரிக்குப் பிறகு இந்தக் கல்யாணத்தில் எம்.எல்.வி அக்காவின் கச்சேரியும் உண்டு" என்றோம்.

அம்மாவுக்கு இரட்டிப்பு சந்தோஷமாகிவிட்டது. திருமண வரவேற்பில் அவர் அற்புதமாகப் பாடியதும் அல்லாமல், எம்.எல்.வி அக்காவின் கச்சேரியையும் கடைசிவரை இருந்து கேட்டுவிட்டு மனமாரப் பாராட்டிவிட்டுப் போனார்.

அதே ப்ரியத்துடன் எங்கள் இரண்டாவது மகளின் திருமணத்துக்கும் பாடினார் அம்மா.

ஒரு நாள் டி.எஸ். மாமாவிடமிருந்து திடீரென்று போன் வந்தது. அம்மாவும் அவரும் இரவு எட்டு மணியளவில் எங்கள் வீட்டுக்கு வர இருப்பதாகவும்; ஒரு பர்சனல் விஷயமாக வருவதாகவும் சொன்னார்கள். பிரேமாவுக்கும் எனக்கும் சற்றே குழப்பம் என்றபோதும் மிக ஆவலோடு அவர்களை எதிர்நோக்கினோம்.

வந்து சேர்ந்து ஆரம்ப விசாரிப்புகள் முடிந்ததும் மாமா சொன்னார்:

"நாங்கள் எதற்கு வந்திருக்கோம் என்கிறதை இன்னும் ஆத்மாவுக்குக் கூடச் (அவர்களுடைய பிரத்யேக உதவியாளர்) சொல்லலை. நீங்கள் மறுக்காமல் இதை வாங்கிக்கொள்ள வேண்டும்..." என்று இரண்டு உறைகளை நீட்டினார். "இதில் இருக்கும் தொகையை உங்கள் இரு பெண்கள் பெயரில் எஃப்.டியாகப் போடுங்கள் - சுந்தரம் ஃபைனான்ஸில் போடணும்; வேறெங்கேயும் போட வேண்டாம்" என்று நிபந்தனையும் விதித்தார்கள்! "எஃப்.டி மெச்சூர் ஆன



• அம்மாவுடன் நான்...

பிறகு எங்கள் ஆசியுடன் அதை குழந்தைகளுக்குக் கொடுத்துவிடுங்கள்'' என்றார்கள்.

பிரேமாவும் நானும் நெகிழ்ந்து நெக்குருகிப் போனோம். எங்கள் குழந்தைகள் அந்த வைப்பு நிதியை அம்மாவின் நினைவுச் சின்னமாகவே கருதி இன்னமும் அப்படியே வைத்திருக்கிறார்கள்.

வாழும் காலத்தில் நூறு சதவிகிதம் பற்றற்றவர்களாக வாழுபவர்களை நமது பாரம்பரியத்தில் ஜீவன் முக்தர் என்று அழைப்பதுண்டு. எம்.எஸ் அம்மா நிறைவாழ்வு வாழ்ந்த ஜீவன் முக்தர் என்றுதான் நான் சொல்வேன். அவர் பாரத் ரத்னாவாக கௌரவிக்கப்பட்ட போது மாமா இல்லாதது குறைதான். பொதுவாழ்விலிருந்து விடைபெற்றுக் கொண்டவரை, எங்கள் நீலாங்கரை இல்லத்தில் வெகு சில நண்பர்களிடையே நடந்த ஒரு பாராட்டு நிகழ்ச்சிக்கு எப்படியோ வரவழைத்து விட்டோம். சமஸ்கிருத பேராசிரியர் வீழிநாதன் அன்று உரையாற்றினார். அம்மாவுடைய வாழ்க்கை வெறும் சாதனைகளால் ஆனது அல்ல; நிறைவான அந்த வாழ்க்கை, சாதனைகளைக் கடந்த உயர் வாழ்க்கை என்பதை ராமாயணத்திலிருந்தும் மஹாபெரியவாளின் அருளுரைகளிலிருந்தும் மேற்கோள் காட்டி விளக்கினார்.

அம்மாவின் பழைய இசைத்தட்டுகள் சிலவற்றைத் தேடிப்பிடித்து வந்து அன்று ஒலிக்கச் செய்தார் எங்கள் நண்பர் வி.சுந்தரம் (ரிடையர்ட் ஐ.ஏ.எஸ்). அவற்றைக் கேட்டுவிட்டு ஒரு குழந்தையைப் போல் அதிசயப்பட்டு மகிழ்ந்தார் அம்மா.

இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு அம்மா வெளியே அதிகம் வரவே இல்லை. தனக்குள்ளேயே ஒடுங்கினார். ஸ்தூல உடலின் தவிர்க்க முடியாத உபாதைகளை அவர் தமக்கே உரிய கௌரவத்துடன், தளராத நல்லியல்புடனும் தாங்கிக் கொண்டார். அவர் மரணத்தில் கூட எங்கள் மருத்துவக் குழு ஒரு பாடம் கற்றுக் கொண்டது:

வாழ்வின் இறுதியை நெருங்கும்போது போராட்டங்களின்றி விடைபெற்று இறைவனின் பாதங்களில் சரணாகதி அடைய வேண்டும் என்கிற தவிர்க்க முடியாத பாடம்!

மிக உறுதியுடனும் மலர்ச்சியான கம்பீரத்துடனும் நிகழ்ந்து முடிந்தது அந்த படிப்பினை.

அம்மாவுக்கு நிறைய மருந்துகளும் சிகிச்சையும் அளித்திருக்கிறோம்... ஆனால், அவற்றையெல்லாம்விட அவர் உடல்நலத்தைப் பேணியவை அவருடைய தெய்வ பக்தியும் கள்ளமற்ற அவர் உள்ளமும்தான். அந்த உள்ளத்தின் அன்பு ஒளி எங்களுக்கு என்றென்றும் வழி காட்டும். ●

"அல்லாரும் என்ன பண்றாங்கன்னா" என்று எஸ்.எஸ். மியூசிக் ஸ்ரேயா ஆங்கிலமும் தெலுங்கும் கலந்த ஒரு கலவையான தமிழ் பேசுவது வேடிக்கை. சிரமப்பட்டு தெலுங்குத் தமிழில் அவர் நம்மிடம் பேசியதிலிருந்து...

எஸ்.எஸ். மியூசிக்கில் முதல் நாள்... ஞாபகம் இருக்கிறதா?

"நல்லா இருக்கு. அன்னைக்கு ஐந்து ஆடிஸன் டெஸ்ட். எல்லாத்துலயும் நான் சொதப்பினேன். சரியா பேச வரலை. நடக்க வரலை. வேற எந்தப் பொண்ணும் கிடைக்காததால போனாப் போகுதுன்னுதான் என்னை அன்னைக்குத் தேர்ந்தெடுத்தாங்க. ஆனா இன்னைக்கு எஸ்.எஸ். மியூசிக்கில் சேர்ற புதுப் பொண்ணுங்க எல்லோரும் 'நான் ஸ்ரேயா மாதிரி ஆகணும்'னு சொல்ற அளவுக்கு நான் புகழடைஞ்சிருக்கேன்."



"இரவு மரணம்... காலை ஜனனம்!"

மின்னல் வேகத்தில் தமிழை அட்சர சுத்தமாகப் பேசுவதில் மமதியை அடித்துக்கொள்ள ஆள் இல்லை. அவருக்கான முதல் கேள்வியே இதுபற்றிதான்.

"எல்லோரும் இது பத்தியே கேட்கறீங்க. உண்மையிலேயே இது அக்கிரமமான கேள்விங்க. ஒரு தமிழ்ப் பெண் விஜய் டி.வி மாதிரியான தமிழ் சேனல்ல அதுவும் 'ஹலோ தமிழா'ங்கிற நிகழ்ச்சியில சுத்தமா தமிழ் பேசறதுல என்ன பெரிய ஆச்சர்யம் இருக்க முடியும்? இங்கிலீஷில் பேசுவதும் தமிழைக் கொலை செய்வதும் காம்பியரிங் கிடையாது. தமிழ் அழகான மொழி. அதுக்கு நான் சிறு கிறல் கூட

சன் மியூசிக் போன்ற மியூசிக் சேனல்களால் எஸ்.எஸ். மியூசிக்குக்கு ஆபத்தா?

"இல்லைப்பா. இன்னும் எத்தனை சேனல்கள் வேண்டுமானாலும் வரட்டும். குறிப்பா சன் மியூசிக்கால் பாதிப்பு கொஞ்சமும் கிடையாது. இன்னைக்கும் மியூசிக் சேனல்களில் நாங்கதான் டாப்."

தமிழ் சினிமா பக்கம் வரமாட்டேங்கறீங்களே?

" 'சாமுராய்'ல 'ஒரு நதி ஒரு ஓடம்' பாட்டு பண்ணினேன். அது தப்புன்னு பின்னாலதான் புரிஞ்சுது. க்ளாமர் வாய்ப்பு தினமும் தேடி வருது. அதை

—'குபீர்' ஸ்ரேயா

யெல்லாம் ஒத்துக்கிட்டா பல லட்சங்கள் வரும்தான். வேண்டாம். பார்த்துப் பார்த்து மலையாளத்துல நல்ல கேரக்டர்கள் பண்ணினேன். அத்தனையும் ஹிட். இப்போ தமிழ்ல ஷங்கர் தயாரிப்புல 'வெயில்' பண்றேன். பசுபதி ஜோடி. மதுரைப் பொண்ணா சேலை உடுத்தி பட்டிக் காட்டு பெண் வேடம். அசத்துவேன் பாருங்க."

விரும்பிப் பார்க்கும் சேனல்?

"என்.டி.டி.வி மற்றும் ஃபேஷன் டீ.வி. தமிழ் சேனல்கள் பார்க்க மாட்டேன்."



"தமிழ் சேனல்கள் பார்ப்பதில்லை!"

ஏற்படுத்த மாட்டேன்" என்கிற மமதி. கான்வென்டில் மொழிப் பாடத்தில் ஹிந்திதான் எடுத்துப் படித்திருக்கிறார்.

ஸ்டூடியோ ராய் என்கிற விளம்பர கம்பெனியை நடத்தி வந்தவருக்கு இன்னும் சில வருடங்கள் கழித்து சினிமா கம்பெனி ஆரம்பிக்க வேண்டும் என்கிற ஆவல் உண்டு. "என் வேலைக்காக இப்போ எல்லா தமிழ்ப் படங்களும் பார்க்கறேன். பொதுவா கருத்துள்ள படங்கள் மீது எனக்குக் காதல் அதிகம். நாளை என் நிறுவனமும் இப்படிப்பட்ட படங்கள் பண்ணும்" கண்களில் நம்பிக்கை.

"இப்போ நான் குதிரையேற்றம் கத்துக்கிட்டு வர்றேன். களவும் கற்றுமற. அதேபோல் நாளைக்கு என்ன செய்வேன்னும் தெரியாது. ஒவ்வொரு இரவும் மரணம்; ஒவ்வொரு காலையும் ஜனனம். வாழ்க்கையைத் துள்ளத் துடிக்க அனுபவி என்பதுதான் என் பாலிசி" என்கிறார். பேட்டிக்காகப் போய் இறுதியில் அருள் கேட்டு வந்த மாதிரியிருந்தது நமக்கு.

—'தத்துவ' மமதி

- ச.ந.கண்ணன்

படங்கள்: ஸ்ரீஹரி, ஓம்

வீணை பவானி

கவலை நீங்கிற்று என்றா சொன்னேன்? ஆமாம்: கவலை நீங்கிற்று என்பது உண்மைதான். ஆனால் மனத்திற்குள் பெரும் ஏமாற்றமும் உண்டாயிற்று. கடைசியில் 'சாதிக்குணம்' என்று உலகம் சொல்வது சரியாய்ப்போய் விட்டதல்லவா? தாலி கட்டிய மனைவி அங்கே படுகிற துக்கத்துக்கும் இங்கே இவள் சாதாரணமாய் வந்தவர்களை 'வா' என்று அழைத்துக்கொண்டிருப்பதற்கும் எவ்வளவு வித்தியாசம்?

அதையெல்லாம் நான் வெளியில் காட்டிக்கொள்ளவில்லை. என்னுடைய பொறுப்பைக் கழித்துக் கொள்வதற்காக, ஏதோ ஆறுதல் வார்த்தை கூறிவிட்டுக் கிளம்பினேன். கிளம்பும்போது பவானி, 'அண்ணே! நவராத்திரி வெள்ளிக்கிழமையன்று, அம்மன் சந்நிதியில் கச்சேரி செய்யப்போகிறேன்; நீங்கள் கட்டாயம் வரவேணும்' என்றாள். எனக்குச் சுருக்கென்று தைத்தது. கச்சேரியா? இதற்குள்ளேயா?

'இந்த வருஷம் கச்சேரி செய்ய வேண்டியதுதானா தங்கச்சி? அடுத்த வருஷம் பார்த்துக்கொள்ளக் கூடாதா?' என்றேன்.

'இல்லை அண்ணே! கச்சேரி செய்வதாக முன்னமே ஒப்புக்கொண்டு விட்டேன். உற்சவப் பத்திரிகையிலே கூடப் போட்டுவிட்டார்கள். அதை மாற்ற இஷ்டமில்லை' என்றாள்.

எனக்கு அப்போது அவள்மீதும் கோவில் தர்மகர்த்தாக்கள் மீதும் கூடக் கோபம் வந்தது.

'சௌகரியப்பட்டால் வருகிறேன், தங்கச்சி!' என்றேன்.

'அப்படிச் சொல்லக்கூடாது, அண்ணே! ஒருவேளை இதுதான் நான் செய்கிற கடைசிக் கச்சேரியாயிருக்கும். நீங்கள் கட்டாயம் வரவேண்டும்' என்றாள்.

இதைக் கேட்டதும் என் மனம் உருகிவிட்டது. 'ஏனம்மா அப்படிச் சொல்கிறாய்? எது எப்படியானாலும் உன் சங்கீதம் மட்டும் வளரவேண்டும்' என்றேன். பிறகு நவராத்திரி வெள்ளிக்கிழமைக்கு அவசியம் வருவதாகச் சொல்லிவிட்டு, விடை பெற்றுக்கொண்டு சென்றேன்.

பவானிக்கு வாக்குக் கொடுத்தபடியே நவராத்திரி வெள்ளிக்கிழமை அன்று திருவாரூருக்குப் போனேன். அவள் வீட்டுக்கு நான் போனபோது கச்சேரிக்கு அவள் கிளம்புகிற சமயமாயிருந்தது. பவானியைப் பார்த்ததும் நான் பிரமித்துப் போய்விட்டேன். அவ்வளவு பிரமாதமாக ஆடை ஆபரண அலங்காரங்களைச் செய்துகொண்டிருந்தாள். கல்யாண மண்டபத்துக்குப் போகும் பெண் மாதிரி தோன்றினாள். இயற்கையிலேயே நல்ல ரூபவதி; இப்போது பார்த்தால், தேவலோகத்திலிருந்து ரம்பை, ஊர்வசி, மேனகை, திலோத்தமை ஆகியவர்களில் ஒருவர் இறங்கிப் பூலோகத்துக்கு வந்துவிட்ட மாதிரியே இருந்தது. மனத்திற்குள் எனக்கு ஏற்பட்ட வேதனையைச் சொல்லி முடியாது.

என்னைப் பார்த்ததும், பவானி புன்னகையுடன், 'அண்ணே! வந்துவிட்டீர்களா?' என்றாள்.

எனக்கு எரிச்சல் பற்றிக்கொண்டு வந்தது. இருந்தாலும் 'ஆமாம்; வந்து விட்டேன், தங்கச்சி!' என்று சாவதானமாகப் பதில் சொன்னேன்.

'அண்ணே! இன்று காலையிலிருந்தே

கந்தப்ப பிள்ளை சொன்ன கதைகள் - 9



உங்களை நான் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். போனால் போகட்டும் கச்சேரி முடிந்ததும் நீங்கள் நேரே இங்கு வர வேணும். ரொம்ப முக்கியமான காரியம்; தவறக்கூடாது' என்றாள்.

'ஆகட்டும் தங்கச்சி!' என்றேன்.

'உங்கள் தலைமேல் ஆணை! கட்டாயம் வரவேணும்' என்று சொல்லிவிட்டுப் பவானி வண்டியில் போய் ஏறிக்கொண்டாள்.

பவானி இந்த மாதிரிப் பேசி நான் கேட்டதில்லை. 'என்னமோ விஷயம் இருக்கிறது. எல்லாம் இராத்திரி தெரிந்து போகிறது' என்று எண்ணிக்கொண்டு கோவிலுக்குப் போனேன்.

என் வாழ்நாளில் நானும் எத்தனையோ சங்கீதக் கச்சேரிகள் கேட்டிருக்கிறேன். பிரபல வித்துவான்கள், பாடகிகள் எல்லாருடைய பாட்டையும் கேட்டிருக்கிறேன். ஆனால், அந்த நவராத்திரி வெள்ளிக்கிழமையன்று பவானி செய்த கச்சேரியைப் போல் கேட்டது கிடையாது. கேள்விப்பட்டதும் இல்லை. பவானியின் குரல் அன்று தேனாக இருந்தது. விரல் வீணையின் தந்தியை மீட்டிய போது அமுதவாரி பெருகிற்று. இதையெல்லாம் விட அன்று அவளுடைய பாட்டில் இன்னும் ஏதோ ஒன்று இருந்தது! அது கேட்பவர்களின் இருதயத்தில் ஒரு அதிசயமான இன்பவேதனையை உண்டு பண்ணிற்று. சபையில் அன்று ஒரே நிசப்தம். மூச்சு விடும் சப்தம்கூடக் கேட்கவில்லை. 'ஆஹா,' 'பேஷ்', 'சபாஷ்' முதலிய குரல்களும் இல்லை. எல்லாரும் மந்திரத்தால் கட்டுண்டது போல், அந்தத் தெய்வீக சங்கீதத்தை அனுபவித்துக் கொண்டிருந்தார்கள். கடைசியில், பவானி, 'பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்பரிந்து' என்ற திருவாசகத்தைக் காம்போதி ராகத்தில் பாடியபோது, நான் கர்ப்பக்கிரஹத்துக்




அமரர் கல்கி

குள்ளிருந்த அம்மன் விக்கிரகத்தை நோக்கினேன். இந்தப் பாட்டைக் கேட்டு விட்டு, அந்தக் கல்விக்ரஹம் உருகிக் கரைந்து போகவில்லையே என்று எனக்கு ஆச்சரியமளித்தது. ஆனால் ஒரு தடவை விக்ரஹத்தின் கண்களில் நீர்த்துளிகள் நின்றதுபோல் தோன்றியது. இது என்ன பிரமை என்று என் கண்களைத் துடைத்துக்கொண்டு, சுற்றுமுற்றும் ஜனங்களைப் பார்த்தேன். சபை ஓரமாக நாலாபுறத்திலும் ஜனங்கள் சுவர் வைத்தாற்போல் நின்று கொண்டிருந்தார்கள். அந்தக் கும்பலின் பின்வரிசையில் ஒரு மூலையில் நின்ற ஒரு முகத்தின் மேல் தற்செயலாக என் பார்வை விழுந்தது. அந்த மனுஷர் தலையில் பாதி நெற்றியை மறைத்து பெரிய முண்டாசு கட்டிக்கொண்டிருந்தார். கண்வலி வந்தவர்கள் போட்டுக் கொள்வது போன்ற பெரிய பச்சைக் கண்ணாடி அவர் கண்களை மறைத்தது. எதனாலேயோ திரும்பத் திரும்ப அந்த முகத்தின் மீது என் பார்வையும் கவனமும் சென்றன. அதற்குப் பிறகு பாட்டில் கவனம் குன்றியது. பார்த்த முகம் மாதிரியிருக்கிறதே? யாராயிருக்கும்? என்று அடிக்கடி மனது யோசித்தது. சட்டென்று உண்மை தெரிந்தது. என் உடம்பெல்லாம் பதறியது. ஏதோ விபரீதம் நேரிடப் போகிறது என்று மனத்திற்குள் ஏதோ சொல்லிற்று. நானும் கூட்டத்தின் ஓரத்தில்தான் இருந்தேனாதலால், மெதுவாக எழுந்திருந்து, நின்று கொண்டிருந்த ஜனங்களின் பின்புறமாகவே சென்று, அந்தப் பச்சைக் கண்ணாடிக்காரரின் சமீபத்தில் போய் நின்றேன்.

கச்சேரி முடிந்தது! எல்லோருக்கும் முன்னால் அந்த மனுஷர் விரைவாக அவ்விடமிருந்து கிளம்பிச் சென்றார். நானும் பின்னோடு போனேன். கோவிலுக்கு வெளியில் கொஞ்சம் ஒதுக்குப்புறமான இடத்துக்கு வந்ததும், நான் அவருடைய கையைப் பிடித்துக்கொண்டு, 'என்ன தம்பி! இது என்ன வேஷம்?' என்று கேட்டேன்.

கையை உதறிய கோபாலசாமி முதலியார் என்னைப் பார்த்ததும், 'யார், சுந்தப்பனா?' என்றார். பிறகு, அவர் 'ஆமாம் சுந்தப்பா! ஆமாம்! வேஷந்தான். இந்த உலகமே வேஷந்தான் பார்த்தாயல்லவா உன் தங்கச்சி போட்ட வேஷத்தை? முன்னே போட்டது ஒரு வேஷம்' என்று மனங்கசந்து பேசிக் கொண்டே போனார்.

'இல்லை தம்பி! நீங்கள் எல்லா விஷயமும் தெரிந்துகொள்ளவில்லை. பவானி இன்றைக்குச்



செய்த கச்சேரிதான் கடைசிக் கச்சேரி என்று சொல்லிற்று. அதனால்தான், இவ்வளவு ஆவேசமாகப் பாடிற்று' என்று சமாதானம் சொன்னேன்.

'கந்தப்பா! யாரிடம் காது குத்துகிறாய்? என்னைப் பச்சைக் குழந்தை என்று நினைத்துக்கொண்டாயா? பாட்டாம் பாட்டு! கச்சேரியாம் கச்சேரி! மனது வந்ததே! கடவுள் என்னுடைய கண்ணைத் திறப்பதற்காகவே, இந்த ரயில் விபத்தை உண்டு பண்ணினார்!

பேச்சை மாற்றுவதற்காக, நான் 'ஆமாம் தம்பி! கடவுள் தான் உங்களைப் பத்திரமாகக் கொண்டு வந்து சேர்த்தார். அந்த அதிசயத்தைப் பற்றிச் சொல்லுங்கள்? பத்திரிகையிலே ஏன் அப்படித் தவறாகச் செய்தி வந்தது? நீங்கள் எப்படித் தப்பிப் பிழைத்தீர்கள்? இத்தனை நாள் எங்கே இருந்தீர்கள்!' என்று கேள்விகளை அடுக்கினேன்.



'அதையெல்லாம் அப்புறம் விவரமாகச் சொல்கிறேன் கந்தப்பா! பெரிய கதை எழுதலாம். ஏதோ செத்துப் போனவன்தான் கடவுள் அருளால் பிழைத்தேன். பத்துநாள் சுயநினைவு இல்லாமல் ஆஸ்பத்திரியில் கிடந்தேனாம். அப்புறம் பழைய பத்திரிகைகளைப் பார்த்துச் செத்துப்போனவர்களின் ஜாபிதாவில் என் பெயரும் இருந்ததைத் தெரிந்துகொண்டேன். யாருடைய நிலைமை எப்படியெப்படி, என்னோடு, உடன்கட்டை ஏறுவேன் என்று சொன்னவர்கள் எல்லாம் இப்போது எப்படி இருக்கிறார்கள் என்று பார்க்க வேண்டுமென்று தோன்றிற்று. அதற்காக, இந்த வேஷத்துடன் வந்தேன். இப்போது பார்த்தாகிவிட்டது!' என்று மிகவும் வெறுப்புடன் சொன்னார்.

பேசிக்கொண்டே நாங்கள் தெருவோடு போய்க் கொண்டிருந்தோம். 'அதெல்லாம் இருக்கட்டும் தம்பி! இப்போது எங்கே போகிற உத்தேசம்?' என்று கேட்டேன்.

'அங்கேதான் போகிறேன். அவளை அடித்து விடுவேன். கொன்று விடுவேன் என்று நினைக்காதே! கச்சேரி பேஷாயிருந்தது என்று ஒரு வார்த்தை சொல்லிவிட்டுப் போய் விடுவேன்; அவ்வளவுதான். நீயும் வேணுமானால் பின்னோடு வந்து பார்!' என்றார் கோபாலசாமி முதலியார்.

இரண்டு பேருமாகவே போய்ச் சேர்ந்தோம். பவானி குதிரை வண்டியில் முன்னாலேயே வீட்டுக்கு வந்துவிட்டாள். அவளைத் தனியாக முதலில் பார்த்துத் தயார் செய்ய வேண்டுமென்று எண்ணினேன். அதற்குக் கோபாலசாமி முதலியார் இடங்கொடுக்கவில்லை. என்னைப் பின்னால் தள்ளிக்கொண்டு, அறைக்குள் அவர் முதலில் போனார்! நாங்கள் போகும்போது பவானி ஜலமோ, பாலோ

ஒரு கிண்ணத்திலிருந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தான். பச்சைக் கண்ணாடியும் பெரிய முண்டாசுமாக உள்ளே வந்தவரைப் பார்த்துவிட்டுப் பவானி ஒரு நிமிஷம் திகைத்து நின்றாள். முதலியார் கண்ணாடியையும் முண்டாசையும் எடுத்ததும் அவளுடைய முகத்தில் ஏற்பட்ட பயங்கர மாறுதலைப் பார்த்தேன். என் இருதயம் அப்படியே நின்றுவிட்டது.

எத்தனை நேரம் இப்படி மூன்று பேரும் ஸ்தம்பித்துப் போயிருந்தோம் என்று தெரியாது. பாவனி திடீரென்று சுருண்டுபோய்க் கீழே விழுந்தபோதுதான், எனக்குப் பிரக்ஞை வந்தது. எனக்கு முன்னாலேயே கோபாலசாமி ஓடி அவளைத் தூக்கித் தமது மடியில் வைத்துக்கொண்டார். சற்றுநேரம் நான் அங்குமிங்கும் பார்த்து விழித்துக்கொண்டு நின்றேன். பிறகு டாக்டரை அழைத்து வருவதற்காக ஓடினேன். டாக்டருடன் நான் திரும்பி வந்தபோது சந்தேகத்துக்கே இடமிருக்கவில்லை. பவானியின் உயிர் போய் அரைமணி நேரத்துக்கு மேலாகிவிட்டது.

கந்தப்ப பிள்ளை மேற்கண்டவிதம் கூறி கதையை நிறுத்தினார். அப்பொழுது தான் ஒவ்வொரு சம்பவமும் நடப்பது போல் அவ்வளவு தெளிவாகவும் உணர்ச்சியுடனும் அவர் சொல்லிக் கொண்டு வந்தபடியால், என் உள்ளம் முன்னைக் காட்டிலும் இளகிக் கனிந்து போயிருந்தது. சற்று நேரம் ஒன்றும் சொல்லத் தோன்றாமல் மௌனமாயிருந்தேன்.

எங்கள் சம்பாஷணை எப்படி ஆரம்பமாயிற்று என்பது ஞாபகம் வந்தது.

"திடீரென்று தோன்றிய கோபாலசாமி முதலியாரை அவருடைய ஆவி என்பதாக நினைத்து, பவானி பயந்துபோய் விட்டாளாக்கும். அப்புறம் நீங்கள் என்ன செய்தீர்கள்?" என்று கேட்டேன்.

"அப்புறம் செய்வதற்கு என்ன இருக்கிறது? டாக்டரிடம் 'எதிர்பாராத ஷாக்கினால் மரணம்' என்று சர்டிபிகேட் எழுதி வாங்கிக்கொண்டேன். கோபாலசாமி முதலியாரும் நானுமாகச் செய்ய வேண்டிய சடங்குகளையெல்லாம் செய்து முடித்தோம். பாவம்! அந்த மனுஷர்பட்ட துக்கத்துக்கு அளவே இல்லை."


"பவானியின் மனம் களங்கமற்றது என்று அப்புறமாவது முதலியார்க்குத் தெரிந்ததா? அவரிடம் அவள் வைத்திருந்த அன்பின் பெருமையை அறிந்து கொண்டாரா?" என்று கேட்டேன்.

"அது எப்படித் தெரியும்? அவருக்கு ஒரு பக்கம் வருத்தமிருந்தாலும், இன்னொரு பக்கத்தில் பவானி தன்னுடைய துரோகம் தெரிந்து போய்விட்டதே என்ற பயங்கரத்தினால் செத்துப் போய் விட்டாள் என்று எண்ணினார். ஆனால் கொஞ்ச நாள் கழித்து வெளியான விஷயம் அவருக்குப் பவானியின்மேல் இருந்த அவநம்பிக்கையை ஒருவாறு போக்கிற்று. பவானி தன்னுடைய சொத்தையெல்லாம் கோபாலசாமி முதலியாரின் குழந்தைகளுக்கு எழுதி வைத்திருந்தாள். உயில் வக்கீலிடமிருந்தது.

வியப்புடன், "ஓஹோ! அப்படியா!" என்றேன்.

இன்னமும் சொல்வதற்கு விஷயம் பாக்கியிருக்கிறது என்று கந்தப்ப பிள்ளை முகபாவத்திலிருந்து தெரிந்தது.

"எல்லாம் சரிதான், டாக்டரிடம் எதற்காகச் சர்டிபிகேட் எழுதி வாங்கினீர்கள்?" என்று கேட்டேன்.




ஆர்.கே.நகர்

அரசியல் விளையாட்டைவிட கேரம் விளையாட்டுதான் சேகர் பாபுவுக்கு ரொம்ப பிடித்தமானது. ஆனால் பாவம், நேரம்தான் அதற்குக் கிடைப்பதில்லை. எல்லாம் அரசியல்!

"இந்த மாதிரித் திடீர் மரணங்களில் போலீஸ் தொந்தரவு ஏற்படுமல்லவா? அதற்காகத்தான். கோபாலசாமி முதலியாருக்கே நான் உண்மையைச் சொல்லவில்லை. டாக்டருக்கும், எனக்கும் மட்டுந்தான் தெரியும்!" என்றார்.

ஏதோ விஷயம் பாக்கி இருக்கிறதென்று நினைத்தேன். "உண்மைக் காரணந்தான் என்ன?" என்று கேட்டேன்.



பெரம்பூர்

எஸ்.கே. மகேந்திரன் அசைவப்பிரியர். வெஜிடேரியன் ஓட்டலுக்குள் தப்பித் தவறிக்கூட நுழைய மாட்டார்.

நடந்து இருபத்தைந்து வருஷங்கள் ஆகின்றன. இனிமேல் சொன்னால் என்ன? - "பவானி மயங்கி விழுந்ததும் முதலியாருக்குப் பின்னால் நானும் ஓடினேனல்லவா? பக்கத்தில் இருந்த சிறு முக்காலிப் பலகையின்மேல் பவானி பால் குடித்த கிண்ணத்துக்குப் பக்கத்தில் ஒரு கடிதம் கிடந்தது. அதன்மேல் என் பெயர் எழுதி யிருக்கவே சட்டென்று எடுத்து, முதலி யாருக்குத் தெரியாமல் மடியில் வைத்துக் கொண்டேன். டாக்டரைக் கூப்பிடப் போனபோது, தெரு லாந்தர் வெளிச்சத் தில் படித்தேன். அந்தக் கடிதம் இதுதான்" என்று கூறி, கந்தப்ப பிள்ளை மடி யிலிருந்து ஒரு கடிதத்தை எடுத்துக் கொடுத்தார். அது வெகுநாட்பட்ட பழுத டைந்த காகிதம். அதில் மங்கிப் போன முத்து முத்தான எழுத்தில் பின் வருமாறு எழுதியிருந்தது.

"அன்புள்ள கந்தப்ப அண்ணனுக்குத் தங்கச்சி பவானி எழுதிக்கொண்டது. என் பிராண நாயகரைப் பிரிந்து நான் உயிர் வாழ விரும்பவில்லை. இன்றைக்கு நான் செய்யும் கச்சேரிதான் கடைசிக் கச்சேரி. அவர் எனக்கு அன்புடன் வாங்கிக் கொடுத்த வைர மோதிரத்திலிருந்த வைரங்களை எடுத்துப் பொடி பண்ணி வைத்திருக்கிறேன். கச்சேரியிலிருந்து வந்ததும் சாப்பிட்டுவிடுவேன். என் சொத்தில் பாதியைக் கோவிலுக்கும் பாதியை அவருடைய குழந்தைகளுக்கும் எழுதி வைத்திருக்கிறேன். உயில் வக்கீல்... ஐயரிடம் இருக்கிறது. நான் செய்வது பிசகாயிருந்தால் என்னை மன்னிக்கவும். அவரைப் பிரிந்து என்னால் உயிர் வாழ முடியாது.

இப்படிக்கு
பவானி"

இந்தக் கடிதத்தை இரண்டு மூன்று தடவை படித்து விட்டு, "இதை ஏன் கோபாலசாமி முதலியாரிடம் நீர் சொல்லவில்லை?" என்று கேட்டேன்.

"சொன்னால் என்ன லாபம்? ஏற்கனவே அவர் ரொம்பத் துக்கப்பட்டார். இது தெரிந்தால் அவரும் உயிரை விட்டாலும் விட்டிருப்பார், அல்லது அவருடைய மனைவி மக்கள்மேல் பாசமில்லாமல் போயிருக்கலாம். ஒரு குடும்பத்தை அநியாயமாகக் கெடுப்பானேன் என்றுதான் சொல்லவில்லை."

சற்றுப் பொறுத்து, "நான் போய்வருகிறேன் ஸ்வாமி!" என்று கந்தப்ப பிள்ளை எழுந்திருந்தார். கடிதத்தை அவரிடம் திருப்பிக் கொடுத்தேன்.

வாசற் கதவைத் திறந்துகொண்டு அவர் வெளியே சென்றார். ஜில்லென்று காற்று அடித்தது. இருண்ட வானத்திலிருந்து சிறு தூற்றல் போட்டுக்கொண்டிருந்தது. ○

அடுத்த வாரம்
'நாடகக்காரி'யின் கதையைத்
தொடங்கிச் சொல்கிறார்
கந்தப்ப பிள்ளை

விழிப்புணர்வு

இதயத்தில் இதயம்!


“சமைச்சுப் போடுங்க; துவைச்சுப் போடுங்கன்னா சொல்றேன்... கடைக்குப் போய் இதயம் நல்லெண்ணெய் வாங்கிட்டு வாங்கன்னுதானே சொல்றேன்.'' - மிரட்டும் பார்வையோடு வெடுக்கென்று 'நல்லெண்ணெய்' சித்ரா பேகம் இந்த விளம்பரம், அந்தக் காலத்தில் ஏக பிரபலம். தொலைக்காட்சி மூலம் தமிழ்நாட்டிலுள்ள ஒவ்வொரு வீட்டுக்கும் இதயம் நல்லெண்ணெய் அறிமுகமானது இந்த விளம்பரத்தால்தான்.


இதயம் நல்லெண்ணெய் அதிபர்களான வி.ஆர்.முத்து, சத்யம் மற்றும் தென்றல் சகோதரர்கள், மூன்றாம் தலைமுறையாக நல்லெண்ணெய் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். "நல்லெண்ணெய் தமிழனின் பாரம்பரிய உணவுப் பொருள். அது இன்று தரணியெங்கும் சென்றடைந்ததில் எங்கள் பங்கும் உள்ளது என்பதில் பெரு உவகை கொள்கிறோம்" என்கிறார் சகோதரர்களில் மூத்தவரான வி.ஆர்.முத்து. தொடர்ந்து தங்களது வெற்றிக் கதையைச் சொல்ல ஆரம்பித்தார்...

“சமீபத்தில் அமெரிக்கா சென்ற எங்களுக்குத் தெரிந்தவரான பேராசிரியர் பார்வதி ஈஸ்வரன் அங்குள்ள டிபார்ட்மெண்டல் ஸ்டோரில் இதயம் நல்லெண்ணெய் பாக்கெட்டுகளைக் கண்டு அது பற்றி விசாரித்திருக்கிறார். 'இட்ஸ் செல்லிங் லைக் ஹாட்கேக்' எனவாய் பிளந்திருக்கிறார் கடை முதலாளி. அமெரிக்கா மட்டுமல்ல ரஷ்யா, ஃபிரான்ஸ், ஜெர்மனி, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, ஸ்ரீலங்கா, மலேசியா, சிங்கப்பூர் எனப் பல நாடுகளில் பெருவாரியாக இதயம் நல்லெண்ணெயை ஏற்றுமதி செய்து வருகிறோம்.

அமெரிக்காவிலுள்ள இந்தியர்களுக்கு சோயா பீன்ஸ் ஆயில் போன்ற எண்ணெய் வகைகள் அவர்களது நாக்கைத் திருப்திப்படுத்துவதில்லை. இதயம் நல்லெண்ணெயால் சமைக்கப்பட்ட உணவை உண்ணும்போதுதான் அம்மாவின் சமையல் ,போன்று ஆத்மார்த்தமாக உணர்கிறார்கள். சமையல் எண்ணெயை எண்ணெய்க் கடைகளில் வாங்கி வந்த மக்களை, மெல்ல மெல்ல எங்கள் பக்கம் திருப்பியுள்ளோம். சென்ற வருடம் மட்டும் இதயம் நல்லெண்ணெயின் வியாபாரம் 120 கோடி ரூபாய்.

அதிகாலையில் வெறும் வயிற்றோடு சுமார் பத்து மி.லி. அளவுள்ள நல்லெண்ணெயை வாயில் வைத்து பதினைந்து இருபது நிமிடங்கள் வரை கொப்பளித்தால் சகல நோய்களும் நீங்குவதாக சமீபத்திய ஆராய்ச்சி ஒன்றில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஆந்திராவிலுள்ள தும்மல கோட்டஸ்வர் என்பவர்தான் இதன் அருமையை மக்களிடம் புத்தகங்கள்





• சகோதரர் சத்யம், தென்றல்



• வி. ஆர். முத்து

சக்சஸ் ஸ்டோரி

வழியாகக் கொண்டு சேர்த்தார். இவர் எழுதிய ஒரு நூலைப் படித்த பின்புதான் எனக்கும் விழிப்புணர்வு ஏற்பட்டது. இந்தப் பாதிப்பில் உருவானது தான் பத்து மி.லி அளவுள்ள 'இதயம் வெல்த்' ஆயில் புல்லிங் சாஷே பாக்கெட்டுகள் (விலை இரண்டு ரூபாய்). தினமும் காலையில் ஆயில் புல்லிங் செய்பவர்களுக்குச் சர்க்கரை நோய் குணமாக வாய்ப்புள்ளதாம்.

ராசாத்தி, டாட்ஸ்...

'ஒரே கூடையில் எல்லா முட்டைகளையும் போடாதே' என்பார்கள். அதே போல பணத்தை ஒரே தொழிலில் முதலீடு செய்யாமல் இதர தொழில்களிலும் கவனம் செலுத்தினோம். 'இதயம்' சம்பந்தமான வேலைகளை நானும் என் சகோதரர் சத்யமும் கவனித்துக்கொள்ள, மற்றொரு சகோதரர் தென்றலின் நிர்வாகத் தலைமையில் ராசாத்தி நைட்டீஸ் தொழிலை ஆரம்பித்தோம். காலப்போக்கில் மார்க்கெட்டின் தேவையைப் புரிந்து கார்மெண்ட்ஸ் பிரிவிலும் கால் பதித்தோம். இப்பொழுது நைட்டிஸ் மற்றும் இதர ஆடை வகைகளை ஏற்றுமதி செய்து வருகிறோம். உலகெங்கிலும் அப்பளங்களைத் தயாரித்து ஏற்றுமதி செய்து வருகிறது சென்னையைச் சேர்ந்த லேன்சன்ஸ் கம்பெனி. இவர்கள் தயாரிப்பில் உருவாகும் எட்டு வகையான அப்பளங்களைத்தான் 'டாட்ஸ் அப்பளம்' என்ற எங்களது ப்ராண்டில் விற்பனை செய்து வருகிறோம்.

கைமேல் பலன்

நல்லெண்ணெய் தொழிலில் தரத்துக்கு அதிகம் முக்கியத்துவம் கொடுக்கிறது இதயம் நல்லெண்ணெய். நல்லெண்ணெயின் மூலப் பொருளான எள்ளை தூசி, துரும்பில்லாமல் சுத்தம் செய்வதற்காகக் கோடிக்கணக்கில் செலவழித்து ஜெர்மன்

நாட்டுத் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்து கிறோம். மாதம் முப்பத்தைந்தாயிரம் எள் மூட்டைகளிலுள்ள (ஒரு மூட்டை 75 கிலோ) எள்ளை கல், மண் எதுவுமின்றி இயந்திரத் தால் புடைத்துச் சுத்தம் செய்வதால் நல் லெண்ணெயின் தரம் மேலும் கூடுகிறது. இதுபோல எங்களது வியாபாரத்தில் கடந்த 2000-ம் ஆண்டிலிருந்து நாங்கள் கொண்டு வந்த இன்னொரு புதிய முறை விநியோ கஸ்தர்கள் மூலமாக எங்களது பொருட் களை விற்பது. '86-லிருந்து 2000-ம் வரை சில்லறை வியாபாரிகளுக்கு நாங்கள்தான் நேரடியாக விற்று வந்தோம். மென்மேலும் விநியோகத்தைப் பலப்படுத்துவதற்காக விநி யோகஸ்தர்களை நாடினோம். கைமேல் பலன். வியாபாரம் இருபது சதவிகிதம் கூடியது.

தலைக்கு வந்தது...

ஒரு கட்டத்தில் இதற்கு மேல் என்ன வளர்ந்துவிட முடியும் என்ற நிலைமை யையும் அடைந்தோம். அப்பொழுது உருவானது ஒரு தேக்கம். நாளுக்கு நாள் பெருகும் போட்டியாளர்கள், குறைந்த விலை எண்ணெயை நாடும் ஒரு பிரிவினர் போன்ற காரணங்களோடு சைனாவின் அதிகமான எள் தேவையும் தேக்கத்திற்கு வழிவகுத்தன. 2003-ம் ஆண்டு சைனாவில் எள் உற்பத்தி பொய்த்துவிட, குஜராத்தி லிருந்து நமக்கு வர வேண்டிய எள் அனைத்தும் சைனாவுக்குத் திரும்பியது. (வழக்கமாக நாற்பது சதவிகித எள்ளை ஆந்திராவிலிருந்தும் இருபது சதவிகிதத்தை குஜராத்திலிருந்தும் மீதமுள்ளதைத் தமிழ்நாடு மற்றும் இதர பகுதிகளிலிருந்தும் சீஸனுக்குத் தகுந்தாற் போல் எள் வாங்குவது வழக்கம்). 2004-ம் ஆண்டு சைனாவுக்கு அனுப்புவதற்காக அதிக விலை கொடுத்து வாங்கியிருந்த வியாபாரிகள், அங்கு நிலைமை சீரடைந்ததால் மீண்டும் நஷ்டம் அடைந்தனர். இது நேரடியாக எங்களையும் பாதித்தது. நல்லவேளை, அந்த இரண்டு வருடங்களோடு தலைக்கு வந்த பாதிப்புகள் தலைப்பாகையோடு போயின.

இதயத்தில்...

இன்னமும் நாங்கள் நல்லெண்ணெய்த் தொழிலுக்குள் நுழைந்ததைச் சொல்ல வில்லை அல்லவா? 1930களில் வட மாநிலங்களிலிருந்து எள், மொச்சை, துவரம், உளுந்து போன்ற நவதானியங்களை வாங்கி வந்து கமிஷன் விலைக்கு விற்று வந்தனர் விருதுநகரில் வசித்து வந்த என் தாத்தாவும் அவரது சகோதரர்களும். அப்பொழுது எள்ளை வாங்கி வந்த ஒரு கம்பெனி நஷ்டம் ஏற்பட்டுப் பின்வாங்க, அது எங்களுடைய வியாபாரத்தைப் பெரிதாகப் பாதித்தது. இதையே காரணமாக வைத்து எள்ளை அரைத்து நல்லெண்ணெய் தயாரித்து விற்போம் என்று முடிவு எடுக்கப்பட்டது. சகோதரர்களுடன் ஏற்பட்ட பிரிவால் 1943-ம் வருடம் தாத்தா தனியாக இத் தொழிலை ஆரம்பித்தார். பிறகு அப்பா, அதன்பின் நாங்கள் என வாழையடி வாழையாய் இத் தொழிலை வெற்றிகர மாக நடத்தி வரு கிறோம். வாடிக்கை யாளர்களும் அவர் களது இதயத்தில் எங்களது தயாரிப்பை நிறுத்தி வைத்திருக்கிறார் கள். நாங்களும் இதயம்போல் ஒவ் வொரு மணித்துளியும் மக்களுக்காக உழைக்கத் தயாராகவே உள்ளோம்.

- சநகன்

படம் : ஸ்ரீஹரி



திருவல்லிக்கேணி

ஆயிரம் விளக்கு உசேன் அற்புத மான பாடகர். சொந்தக் குரலில் பக்திப் பாடல் பாடுவதென்றால் அவருக்குத் தனி இன்பம். அதிலும் தானே மெட்டமைத்துப் பாடுவது இன்னும் குஷி தரக்கூடியது.

மின்சார இசை!

* ராவ்


சென்னை, நங்கநல்லூரில் இசைக்கருவிகளை விற்பனை செய்யும் ராவ்சன்ஸ் மார்க்கெட்டிங் நிறுவனத்திடம் இசைக் கருவிகளை வாங்கிச் செல்பவர்கள், அவற்றில் கூடுதல் அதிர்வுகளை உணர்ந்தால் அதற்குக் காரணம் உண்டு.

மின்சாதனப் பொருட்கள், ட்ரான்ஸ்ஃபார்மார்கள், காற் றாலை உபகரணங்கள் என மின்னனுத் தொழிலில் ஈடுபட் டிருந்தவர்கள்தான் இப்பொழுது இசை சம்பந்தமான தொழிலிலும் இறங்கியிருக்கிறார்கள். ஏன்? விளக்கம் தருகிறார் அதன் நிறுவனர் ராவ்.

''மனித நாகரிகத்தில் இசை என்பது தொன்று தொட்டு வளர்ந்து, நீடித்து வருகிறது. மின் சாதனப் பொருட்கள் விற்பனையில் நாங்கள் இருந்தாலும் இசை மீதுள்ள நாட் டத்தால் இத்தொழிலில் இறங்கிவிட்டோம். மைலாப்பூரில் ஏராளமான கடைகள் இருந் ததால் வேளச்சேரி, பல்லாவரம், தாம்பரம் மக்களுக்கு வசதியாக, அதேசமயம் இசை ஆர்வலர்கள் அதிகம் உள்ள நங்கநல்லூரில் கடையைத் திறந்தோம்.

தஞ்சாவூரிலிருந்து வீணை, மானா மதுரையிலிருந்து கடம், கொல்கத்தா விலிருந்து வயலின் என்று தயாரிக் கப்படும் இடத்திலிருந்தே கருவி களை நேரடியாகத் தருவித்து விற்று வருகிறோம். இத்தனை வருட மார்க்கெட்டிங் அனுபவத்தில் செவ்வனே தொழிலைச் செய்துவருகிறோம். சிலசமயம் மிருதங்கக் கட்டை, புல்லாங்குழலில் விரிசல் ஏற்பட்டுவிடும். அதை நைஸாக பாலீஷ் செய்து மறைத்து, விற்கும் வியாபாரம், சில இடங் களில் நடப்பதுண்டு. நாங்கள் அப்படியல்ல. இசையில் கலப் படம் செய்யத்துணிவதில்லை. இன்று இசைக்கு இருக்கும் மவுசு வேறெதிலுமில்லை. பத்து வயதுப் பிள்ளைகளெல்லாம் இசைக்கருவிகள் வாங்குகிறார்கள்.

இசைக் கருவிகள் விற்பது தெய்வீகமான தொழில்; லாபகரமான தொழில். தொழில் சுத்தமும் சரியான இடத்தில் கடையைத் தேர்ந்தெடுத்தலும் வெற்றிக்கு வழி வகுக்கும்'' என்கிற ராவ், ஏராளமான தன்னம்பிக்கை மற்றும் மின்னனு சம்பந்தமான புத்தகங்களைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதியுள்ளார்.



- நீலாவள்ளி

கிரிக்கெட்:

தமிழக வீரர்களுக்கு துரோகமிழைக்கப்படுகிறதா?

கர்நாடகா என்கிற ஒரே மாநிலத்தில் இருந்து ஒரு கட்டத்தில் துவக்க வீரர் சுஜித் சோமசுந்தர் முதல், கடைசி பேட்ஸ்மேன் அனில் கும்ப்ளே வரை எட்டு வீரர்கள் இந்திய அணியில் விளையாடினர். ஆனால், இன்று தமிழகத்தில் இருந்து ஒரு வீரர் விளையாடுவதற்கே திண்டாட்டமாக இருக்கிறது. தமிழர் யாராவது இருக்கின்றார்களா என்று தேடி, ரயில்வே அணியின் முரளி கார்த்திக்கை பார்த்துப் பெருமைப்பட்டுக் கொள்கிறோம். ஏன் இந்த அவல நிலை...?

“தமிழக வீரர்கள் என்றால் தேர்வு கமிட்டியினருக்கு ஏனோ வேப்பங்காயாகக் கசக்கிறது. பெரும்பாலான தேர்வாளர்கள் பிராந்திய உணர்வுடன் செயல்பட்டுத் தாங்கள் சார்ந்திருக்கும் மாநில வீரர்களுக்கே முன்னுரிமை அளித்து தமிழகத்தைக் கண்டுகொள்வதே இல்லை” என்று குறைபட்டுக் கொள்கிறார் பெயர் குறிப்பிட விரும்பாத முன்னாள் கிரிக்கெட் வீரர் ஒருவர்.

“நமது வீரர்களுக்கு சர்வதேசத் தரம் இல்லை என்பதும் தவறு. ருபன்பால் என்று ஒரு மிகச்சிறந்த விக்கெட்கீப்பர் பேட்ஸ்மேன் தமிழக அணியில் இருந்தார். ஆனால் அவரை கடைசி வரை இந்திய அணிக்குள் வரவிடவே இல்லை. இதற்குக் காரணம் செலக்டர்கள் நமது வீரர்களுக்காக ஒரு சிறு துரும்பையும் நகர்த்தாததுதான்” என்கிறார் ஒரு ஓய்வு பெற்ற தமிழக வீரர்.

“தொடர்ந்து மிக மோசமாக விளையாடி வரும் சௌரவ் கங்குலி, பலத்த அரசியல் தலையீட்டால் அணிக்குள் மீண்டும் வரும்போது ஏன் நாமும் அதே வழியை நமது வீரர்களுக்காகப் பயன்படுத்தக்கூடாது?” என்றும் சிலர் கேட்கத் துவங்கி விட்டனர்.

ஆனால், “தேர்வுமுறையில் எந்த அரசியலும் இல்லை. இந்த நிலைக்குக் காரணம் முழுக்க முழுக்க நமது வீரர்களே” என்று அதிர்ச்சியளிக்கிறார் பிரபல கிரிக்கெட் விமர்சகரான பத்ரி சேஷாத்ரி.

• பத்ரி சேஷாத்ரி



“தமிழகத்தில் இருந்து இந்திய அணிக்குத் தேர்வாகி பின்னர் கழட்டி விடப்பட்டவர்கள் என்றால் சடகோபன் ரமேஷ், பாலாஜி, தினேஷ் கார்த்திக், ஹேமங் பதானி ஸ்ரீராம், குமரன் ஆகியோரைச் சொல்லலாம். இவர்கள் ஒவ்வொருவரும் ஆளுக்கொரு துறையில் சிறப்பானவர்களே. ஆனால் தமது திறமையை நிரூபிக்கத் தவறுவதே இவர்களுடைய இந்த நிலைக்குக் காரணம். முதலில் ரமேஷை எடுத்துக்கொள்வோம். ரமேஷ் 2001-ல் காயம் காரணமாக நீக்கப்பட்ட பிறகு ஷிவ்சுந்தர் தாஸ், டிராவிட், தீப்தாஸ்குப்தா, வாசிம் ஜாஃபர், சஞ்சய் பாங்கர், ஆகாஷ் சோப்ரா, யுவராஜ் சிங், கௌதம் காம்பீர் என்று பலருக்கு துவக்க வீரர்களாக பல டூர்களில் வாய்ப்பளிக்கப்பட்டது. அவர்களில் சிலர் சொதப்பலாகவும் சிலர் சுமாராகவும் விளையாடினர். அந்தச் சமயங்களில் எல்லாம் காயத்திலிருந்து மீண்ட ரமேஷ், உள்ளூர் போட்டிகளில் மிகவும் மோசமாகவே விளையாடிக் கொண்டிருந்தார். அதனால்

தான் மற்றவர்களுக்கு வாய்ப்பளிக் கப்பட்டனவே தவிர, அவர் தமிழர் என்பதற்காக வாய்ப் பளிக்கப்படவில்லை என்பது தவறு. போட்டி கடுமையாக இருக்கும் நிலையில் உள்ளூர் போட்டிகளில் தமது திறனை அபரிமிதமாக நிரூபித்தா லொழிய அவருக்கு வாய்ப் பில்லை.



அடுத்து பாலாஜி. வேகப் பந்து வீச்சாளரான இவருக்கு மீண்டும் இந்திய அணிக்குச் செல்வது சிரமமானது ஒன்றுமல்ல... தமது வழக்கமான ஆவேச பந்துவீச்சை மீண் டும் தொடர்ந்தாலே அணிக்குத் தேர்வாகி விடலாம். இவர் அணிக்குத் தேர்வாகாமல் இருப்பது தாற்காலிகம்தான். ஆனால், குமரன் அணிக்குத் தேர்வானதே பெரிய விஷயம். உண்மையில் தினேஷ் கார்த்திக் நிலைதான் பரிதாபம். அவர் சிறந்த விக்கெட் கீப்பர். ஆனால் தோனி மிக அற்புதமாக விளையாடி யதால் இவருக்கு வாய்ப்பளிக்கப்படவில்லை. இப்போதைய சூழ்நிலையில் தோனி தவறு செய்தாலொழிய தினேஷுக்கு வாய்ப்பு கஷ் டம்தான். ஹேமங் பதானி நல்ல மிடில் ஆர்டர் பேட்ஸ்மேன் கம் ஃபீல்டர். ஆனால் இந்திய அணியில் கிடைத்த வாய்ப்பை மிக மோசமாகப் பயன்படுத்தியவர்களுள் இவரும் ஒருவர். ரஞ்சி மற்றும் இரானிப் போட்டிகளில் ஒரு மேட்ச் வின்னராகத் தன்னை நிரூபிக்க வில்லை. ஆகவேதான் இவரும் தேர்வாக வில்லை. முக்கியமாக இந்திய அணியின் மிடில் ஆர்டருக்கு மூத்த மற்றும் இளம் வீரர் களிடையே கடும்போட்டி வேறு இருக்கிறது. இதில் பதானி எப்படி உள்ளே வர முடி யும்?





ஆல்ரவுண்டரான ஸ்ரீதரன் ஸ்ரீராம், தனக் குக் கிடைத்த வாய்ப்புகளை மிக மோசமாகக் கோட்டை விட்டவர். பௌலர்களான பதான் போன்றவர்கள் ஆல்ரவுண்டராகும் முயற்சி யில் நன்றாக விளையாடிக் கொண்டிருக்கும் நிலையில் இவருக்கான வாய்ப்புகள் மங்க லாகவே இருக்கின்றன.

யுவ்ராஜ்சிங் பஞ்சாப் அணியைத் தோளில் தூக்கிச் சுமந்து வெற்றிப்பாதையில் அழைத் துச்செல்கிறார். லட்சுமண் உள்ளூர் போட்டி களில் காட்டடி அடித்து இரட்டைச் சதங் களைக் குவிக்கிறார். ஆனால் நம் வீரர்கள் அப்படி ஏதும் செய்வதில்லையே. அப்படி இருக்க, 'என் வீரர்களின் சாதனை இது' என்று எதைக் கொண்டு போய் தரமுடியும் நம் செலக்டர்களால்... தமது திறமை களை வெளிப்படுத்த வீரர்கள் தவறியதுதான் காரணமேயொழிய யாரும் தமிழர்கள் என்பதற்காகப் புறக்கணிக்கப்படுவதுமில்லை, துரோ கம் இழைக்கப்படவுமில்லை" என் கிறார் பத்ரி சேஷாத்ரி.

- இரா. முத்துக்குமார்

படம்: **கோகிலா**

பத்தொன்பது வயதில் அஸ்வத்குமாரி, தன் புகுந்தவீடு நோக்கி வந்தபோது, கனவுகளோடு சேர்த்து கல்கி வார இதழையும் சுமந்து வந்திருக்கிறார் தன் மனத்தில். பன்னிரண்டு வயதிலிருந்து வாசிக்கத் தொடங்கிய பழக்கம். அமரதாரா நாவல் தொடராக வந்தபோது, ஒவ்வொரு வாரமும் அந்த வயதிலேயே ஆழ்ந்து அனுபவித்து படித்து ரசித்த நாட்கள். நாலணா கல்கியிலிருந்து இன்றுவரை தொடர்ந்து வாசித்துவரும் அஸ்வத்குமாரிக்கு இப்பொழுது வயது அறுபது.

"ஒரு நல்ல காபி அருந்தியவுடன் புத்துணர்வு - உற்சாகம் கிடைத்து விடும். அதுபோல எத்தனை கடினமான உழைப்பானிக்கும் தரையில் பாய்விரித்துப் படுத்துறங்கி, மறுதினம் கண் விழித்த பின்னர் புதுத் தெம்பு வந்து விடும். எங்களது பாலு காபித்தூள் இந்தப் பகுதிகளில் வெகு பிரபலம். எங்கள் கோரைப் பாய்களும் தமிழ்நாடு மட்டுமல்லாது பிற மாநிலங்களுக்கும் விற்பனைக்கு அனுப்பப்படுகின்றன" என்றார்கள் அஸ்வத்குமாரியின் மூத்த மகன் ரமேஷ் பாபுவும், அவரது தம்பி ஸ்ரீகாந்தும்.

கல்கியில் வரும் கட்டுரைகள், தங்களது தொழிலுக்கும் வாழ்க்கைக்கும் பெரிதும் வழிகாட்டிகளாக அமைந்து வருவதாகக் கூறுகிறார்கள் இவர்கள்.

"மூன்றாண்டுகளுக்கு முன்பு கல்கியில் வெளிவந்த கட்டுரை அது. சொனாலி என்பவர் பெங்களூரில் 'காபி லேப்' என்கிற ஆய்வு நிலையத்தை நடத்தி வருகிறார். இந்தியாவிலேயே காபி குறித்து ஆய்வு செய்து வருகிற தனியார் நிறுவனம் அது. அதன் செயல்பாடுகள் பற்றிய விவரங்களை கல்கியில் வாசித்தவுடன், பெங்களூருக்கு நேரில் சென்று சொனாலி அவர்களைச் சந்தித்தேன். காபித்தூள் தயாரிப்பு மேலாண்மை குறித்து இதுவரை நான் அறிந்திடாத பல தகவல்களை அந்த அம்மையார் வாயிலாகத் தெரிந்து கொண்டேன். அவர் சொல்லித்தான் காபி பவுடர் செய்யும் கிரைண்டிங் மெஷின் ஒன்றினை நாங்கள் கோவையிலிருந்து வாங்கி வந்தோம். அந்த மிஷின் எங்களுக்கு மிகவும் பயன்தந்து வருகிறது.

வாசிக்க மட்டுமல்ல.... கல்கி, வாழ்க்கைக்கும் என்பது கோடி நிஜம்!"

• மகன்களுடன் அஸ்வத்குமாரி...



வாசிக்க மட்டுமல்ல... வாழ்க்கைக்கும்!

என்கின்றனர் இந்த சகோதரர்கள்.

ஸ்ரீகாந்தின் மனைவி விஜயப்ரியாவின் பாட்டிக்குக் கண்பார்வை சற்றுக் குறைவாம். "ஒவ்வொரு வாரமும் வீட்டுக்குக் கல்கி வந்தவுடன், என் பாட்டிக்கு குறையொன்றுமில்லை தொடரை நான் சப்தமாக வாசித்துக் காட்டவேண்டும். அதன் பிறகுதான் என்னை அடுத்த வேலை செய்ய நகரவிடுவார் பாட்டி. அவருக்காகத் தொடர் வாசிக்கப்போய், இன்று நானும் கல்கியின் வாசகியாகி விட்டேன்!" என்றார் விஜயப்ரியா.

ரமேஷ் பாபு, முசிறி லயன்ஸ் கிளப்பில் முக்கிய பொறுப்பிலிருக்கிறார். சமூகப் பணியாற்றிட லயன்ஸ் சங்கத் தொடர்புகள் அவருக்குப் பாலமாக இருந்து வருகின்றனவாம்.



* குடும்பம் ஒரு கதம்பம்!

இவரது மனைவி அகிலா. மகன் அமர்நாத், ப்ளஸ்டூ படிக்கிறார். மகள் நிவேதா, ஏழாம் வகுப்பு. ஸ்ரீகாந்தின் மகள் சினேகலதா, மகன் தருண்குமார். இருவரின் குடும்பங்களும் ஒரே வீட்டில் வசித்து வருகின்றன. காபித்தூள் வியாபாரம், பாய் உற்பத்தி மட்டுமல்லாது, தங்களது வயல் மற்றும் தோட்டத்தில் கடந்த மூன்றாண்டுகளாக இயற்கை விவசாயம் செய்து வருகிறார்கள் இந்த இளைஞர்கள்.

அஸ்வத்குமாரி, தர்மபுரியின் பெண்ணாகரம் கிராமத்தில் எட்டாம் வகுப்பு வரை படித்தவர். அங்கு அவருக்கு மூன்றாம் வகுப்பு ஆசிரியையாக இருந்தவர் மாரியம்மாள் டீச்சர். நிறையப் படிக்கணும் என்கிற ஆர்வத்தை, அந்தப் பிஞ்சு வயதில் ஊட்டியவர். பள்ளி நேரம் போக மற்ற நேரங்களில் மாணவிகளைத் தன் வீட்டிலேயே இருக்க வைப்பாராம். சாப்பிடவும், தூங்கவும் மட்டும்தான் வீட்டுக்கு. தன் இல்லத்தை ஒரு கலாசாலையாக மாற்றியிருக்கிறார் மாரியம்மாள் டீச்சர். பள்ளிப் பாடங்கள் என்றில்லாது, மாணவிகளுக்குக் கோலம் போடுதல், எம்ப்ராய்டரி பின்னுதல் மற்றும் கை வேலைகளையும் கற்றுத் தந்திருக்கிறார்.

"வீட்டில் பெற்றோரிடம் எப்படி நடந்துகொள்ள வேண்டும்; சமூகத்தில் பெரியவர்களிடமும் மற்றவர்களிடமும் எவ்விதம் பழக வேண்டும் என்றெல்லாம் சொல்லிக் கொடுத்த சமூக ஆசிரியை அவர். என்னால் மறக்க முடியாதவர். இருபதாண்டுகளுக்கு முன்பே அவர் மறைந்து விட்டாலும் அவரது குடும்பத்துடனான தொடர்பு இன்னும் விட்டுவிடவில்லை. அவரது மகள் காமாட்சி, மேட்டூரில் ஆசிரியையாக இருந்து வருகிறார். அவரோடு எங்கள் ஸ்நேகம் தொடர்ந்து வருகிறது" என்று உள்ளம் நெகிழ்ந்து பேசுகிறார் அஸ்வத்குமாரி

- ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு

வாரம் ஒரு வாசகர் குடும்பம்

கண்ணெடுத்த கனவு!

ஆர். சூடாமணி

'எனக்குக் குழந்தை வேண்டும்.

எனக்குக் குழந்தை வேண்டும்.'

காந்தா, பூபதி இருவரின் தவிப்பும் ஒன்றேதான்.

அடிக்கடி நேர்ந்த குறைப் பிரசவங்களால் ஆரோக்கியம் பாதிக்கப்படக்கூடிய நிலை வந்தபோது, இனி அதற்கு இடம் கொடுக்கலாகாது என்று இருவரும் தீர்மானித்தார்கள். முறைப்படி மருத்துவப் பாதுகாப்பு நடைபெற்றது.

சிறிது காலம் வரை நிம்மதி. அறிவுபூர்வமாய் முடிவெடுத்து அதைத் திடமாய் செயலாற்றிய மனத்திருப்தி. பூபதி ஒரு வங்கி உத்தியோகஸ்தன். காந்தா எம்.எஸ்ஸி. முடித்தவள். இருவரும் விவரம் தெரிந்த பொறுப்புள்ள தம்பதி.

ஆனால் சிறுகச் சிறுக அந்த நிம்மதியில் ஒரு சலனம். இன்னதென்று புரியாமல் மனசுக்குள் ஊர்ந்து வந்து உறுத்தும் ஒரு குறை. என்ன குறை இருக்க முடியும்? பரஸ்பர அன்பு, வசதியான வாழ்க்கை, பாசமிக்க உறவினர், நல்ல நண்பர்கள் - எல்லாம் இருக்க வேறென்ன வேண்டும்? ஆனால் எல்லாம் முற்றுப்புள்ளிகள். அவர்கள் வேண்டுவது முடிவல்ல, தொடர்ச்சி. வருங்காலம்.

வருங்காலம் என்றால்...? ஒரு குழந்தை...? அதுதானா? உள்ளேயிருந்து வெறுமையின் கூக்குரல்.

அவளுள்ளிருந்து. அவனுள்ளிருந்து. எவ்வளவு முயன்ற போதிலும் வெறுமையை வெல்ல முடியவில்லை.

"இந்த அப்பாவிகளுக்கு இனி என்ன வருங்காலம் இருக்கு?" பூபதியின் தங்கை மீனா துயரத்தில் கூவினாள். எதிரே நாளிதழ். அதில் வெளியாகியிருந்த நெஞ்சைப் பிளக்கும் அவலக் காட்சிகள்.

சில நாட்களுக்கு முன்பு கடலினின்று வெடித்துக்கொண்டு வந்து கரையோரப் பகுதிகளை அரக்கப் பசியுடன் அடித்து விழுங்கிவிட்ட சுனாமிப் பெருவெள்ளம் அழித்த கிராமங்களின் காட்சிகள் நாளிதழின் பக்கங்களை நிறைத்தன.

"கடவுளே..." காந்தா அரற்றினாள்.

அவளும் மீனாவும் நிவாரண நிதிக்கு நன்கொடை அளித்தார்கள். உடைகளும் சால்வைகளும் கம்பளிகளும் அனுப்பினார்கள்.

சிறிது காலம் வரை இயற்கையின் சீற்றம் விளைவித்த இந்தப் பேரழிவின் நினைவு ஒன்றே மக்கள் மனத்தை நிறைத்தது. சொந்தக் கவலைகளுக்கு அங்கு இடமில்லை. பேச்சு, எண்ணம் எல்லாம் சுனாமியின் பயங்கரம், அதனால் நேர்ந்த பாதிப்புகள், அதற்குப் பலியான எண்ணற்ற பேதைகள். பிறகு மெல்ல சுயம் மீண்டும் தலைநீட்டத் துவங்கியது.

'எனக்குக் குழந்தை வேண்டும்.'

உள்ளேயிருந்து வெறுமையின் கூக்குரல்.

பலர் யோசனை சொன்னார்கள். வாடகைத் தாய்?

'வேண்டாம். வேண்டாம். என் குழந்தை, ஆனால் அதன் தாய் என் மனைவி இல்லையா? எண்ணமே கசக்கிறது.'

'வேண்டாம் வேண்டாம். ஒரு பெண் ஒன்பது மாதம் சுமந்து பெற்ற குழந்தையை ஏதோ ஜடப் பொருளைத் தருவது போல் தூக்கித் தந்துவிட்டுப் போவதா? லட்சங்கள்



விலை கொடுத்தாலும் அந்தத் தாயின் துயரத்துக்கு ஈடாகுமா? அத்தகைய ஒரு நிலையை நான் என் தாய்மையின் பெயரால் இன்னொரு தாய் மீது திணிக்க முடியுமா? இது வேண்டாம்.'

இருவருமே புறக்கணித்தார்கள்.

கடைசியில் –

"தத்தெடுத்துக் கொள்ளலாமே!" என்றான் பூபதியின் நண்பன் ராஜு. அவன் ஒரு குழந்தை இருக்கும்போது இன்னொரு குழந்தையைத் தத்தெடுத்துக் கொண்டவன்.

"அடாப்ஷனா!" இருவருக்கும் உடனடியாய் திக்கென்றது.

''என்ன சொல்றே காந்தா?'

"ம்...? தெரியலையே..."

''நம்முடையதில்லாத ஒன்னை நம்மால் நேசிக்க முடியுமா?'' தனக்குள்ளாகவே பேசிக் கொண்டவன் போல் உயிர்த்தான் பூபதி. பிறகு "உனக்கு உன் தத்து குழந்தைகிட்டே அன்பு காட்டறதில் ஏதும் பிரச்னை உண்டா ராஜு?"

"என்னடா பேசறே? பிரச்னையாவது!

டிசம்பர் 26 - சுனாமி தினம்

என் மனைவிக்கும் எனக்கும் எங்க சொந்த மகன்கிட்ட எத்தனை அன்பு உண்டோ, அத்தனை எங்க தத்து மகள்கிட்டேயும் உண்டு."

பூபதி நிறைவான உள்ளத்துடன் நண்பனைப் பார்த்துப் புன்முறுவலித்தான். காந்தா, "நீங்க சொல்றது ரொம்ப தெம்பாயிருக்கு மிஸ்டர் ராஜு'' என்றாள் நெகிழ்ச்சியுடன்.

சூழ்நிலையின் கனத்தைக் குறைக்க ராஜு சிரித்துக் கொண்டே, "தத்தெடுக்கறதில் ஒரு வசதி பாருங்க மிஸஸ் பூபதி. நாட்டின் ஜனத்தொகையை அதிகமாக்காமலேயே ஒரு குழந்தையை அடைய முடியும்!" என்றான்.

சுவீகாரம் என்று தீர்மானம் ஆனதுமே பூபதியின் சகோதரி மீனா தன் மூன்று வயது மகனைத் தத்து கொடுக்க முன்வந்தாள். அவளுக்கு நான் சளைத்தவளா என்பது போல் காந்தாவின் தங்கை விஜயா தன் இரண்டு வயதுப் பெண் குழந்தையைத் தத்து கொடுக்கத் தயாரானாள்.

காந்தா, பூபதி இருவருக்கும் ஒரே கருத்துதான். குடும்பத்துக்குள் சுவீகாரம் வேண்டாம். ஒன்றைத் தேர்ந்தெடுத்தால் மறுதரப்பில் அதிருப்தி எழும். அந்த இரு பெண்களுக்குள் மனக்கசப்பு நேரலாம். வேண்டாமே!

சுவீகார நிலையத்தின் உதவியை நாடுவதே உத்தமம்.

"உங்க நண்பர் எப்போ நம்மை அந்த அடாப்ஷன் ஏஜென்ஸி ஆபீசுக்கு அழைச்சுட்டுப் போக முடியும்?" காந்தா கேட்க,

"இந்த நிமிஷம் கூட அழைச்சுட்டுப் போக அவன் தயார்தான். ஆனா, எனக்கு எங்க பாங்க் வேலை கொஞ்சம் வந்திருக்கு. அதை முதல்ல கவனிச்சாகணும்" என்றான் பூபதி.

அவன் பணியாற்றிய வங்கியில் எளிய வருமானமுள்ள சமூகப் பிரிவினரின் பயன்பாட்டுக்கென சில புதிய வைப்புத் தொகை திட்டங்களை அறிமுகப்படுத்தியிருந்தார்கள். அவை எப்படி ஏற்கப்படுகின்றன என்பதைச் சில தென்மண்டலப் பகுதிகளில் ஒரு 'சர்வே' செய்து கொண்டு வரும் கடமை அவனுக்கும் இரண்டு சக அலுவலர்களுக்கும் தரப்பட்டிருந்தது.

"நாளை மறுநாள் கிளம்பணும் காந்தா. சர்வே முடிச்சுக்கிட்டு வர ரெண்டு வாரம் ஆகலாம். வந்ததுமே அடாப்ஷன் விஷயத்தைக் கவனிச்சிடுவோம்."

இரண்டு வாரங்கள் கடந்தன.

பூபதி திரும்பவில்லை.

காந்தாவுக்குக் கவலை தோன்றவில்லை. ஒரு முக்கிய அலுவலாக வெளியூர் செல்லும் போது ஊர் திரும்ப இரண்டொரு நாட்கள் முன்னே பின்னே ஆவது ஒன்றும் அதிசயமில்லையே.

மேலே நாலு நாட்கள் ஆனபோது லேசாய் கவலை என்று இல்லை - ஒரு வித அமைதியின்மை உணர்வாகத் தொடங்கியது.

இன்னும் இரண்டு நாள்.

என்ன இது! என்ன செய்கிறான் இவன்? தாமதமாகுமென்றால் வீட்டுக்கு ஒரு போன் போட்டுச் சொல்ல வேண்டியதுதானே? இங்கே ஒருத்தி என்ன ஏது என்று புரியாமல் தவித்துக் கொண்டிருப்பாளென்று தெரியாதா?

ஒரு செல்போன் வாங்காத மடத்தனத்தை எண்ணி நொந்து கொண்டாள்.

மூன்று வாரங்களுக்கு மேல் ஓடிவிடவே அன்று கண் விழித்ததும், என்ன விஷயமென்று அவன் வங்கியைப் பத்து மணிக்குத் தொலைபேசியில் அழைத்து விசாரிக்க வேண்டுமென்று தீர்மானித்தான். ஆனாலும்



பூங்கா நகர்

பழைய பாடல் ஆர்வலர் விநாயமூர்த்தி. சமீபத்திய காங்கிரஸ் பிணக்கின் போதெல்லாம் அவற்றைக் கேட்டே தன்னை ஆறுதல் படுத்திக் கொண்டாராம்.

பொறுப்பே இல்லாமல் இப்படியா...

வீட்டெதிரே ஓர் ஆட்டோ நின்றது. பூபதி கட்டணத்தைக் கொடுத்து அனுப்பி விட்டுத் திரும்பினான்.

காந்தா பரபரவென்று வாசலுக்கு வந்தாள்.

"என்ன இவ்வளவு நாளாயிடிச்சு? ஒரு போன் போட்டுத் 'தகவல் சொல்லக் கூடாதா? இப்படிக் கிணத்துல கல்லைப் போட்டாப்பல இருந்தா என்னன்னு நினைக்கிறது? ஆனாலும் கொஞ்சமாணும்..."

நிறுத்தினாள்.

பூபதி தலை திருப்பிப் பின்னால் பார்த்தவாறு "வாம்மா, உள்ள வா, பயப்படாதே. இந்தா, என் கையைப் பிடிச்சிக்க" என்று சொல்லிக் கொண்டிருந்தான்.

காந்தா வெறித்துப் பார்த்தாள்.

அந்தக் குழந்தைக்கு வயது மூன்று அல்லது நாலு இருக்கலாம். சாயம் போன பழைய பச்சைநிற சூரிதார் உடுத்தியிருந்தாள். அது தொளதொளவென்று தொங்கியது. அவளைப் போல் இன்னும் மூன்று பேருக்குச் சரியாயிருக்கும். யாரோ போட்டுக் கழித்த உடையாக இருக்க வேண்டும். கரிய சருமம். எலும்பு துருத்திய ஒல்லி உடம்பு. எண்ணெய் காணாத தலைமுடி. ஊசி ஊசியாய் நீட்டிக் கொண்டிருந்தது. அகன்ற கண்கள் இப்போது இடுங்கி, பய ஊற்றுகளாய்த் தெரிந்தன.

"என்ன இது பூபா?" என்று காந்தா கணவனைப் பார்த்தாள்.

"காந்தா, எல்லாம் சொல்றேன். மொதல்ல அஞ்சுவுக்கும் எனக்கும் கொஞ்சம் டீ தரியா? அப்படியே, வீட்டில் ஏதாவும் பிஸ்கெட் இருந்தாலும் கொடு."

மௌனமாகவே தேநீரும் பிஸ்கெட்டும் உட்கொண்டாள் குழந்தை அஞ்சு. அவ்வப்போது காந்தாவின் பக்கம் கண்ணுயர்த்தி விட்டு கூடவே பூபதியையும் பார்த்துக் கொண்டாள், ஒரு தெம்பை நாடுபவள் போல். பூபதி கண்களில் நோவும் இரக்கமும் கசிய அ;வள் தலைமுடியைத் தடவிக் கொடுத்தவாறு இருந்தான்.

காந்தா அவளைப் பார்த்தபடி அமர்ந்திருந்தாள். அவள் டீ குடித்து முடித்ததும் பூபதி தம்ளரை வாங்கி வைத்துவிட்டு அவள் தலையைத் தன் மடியில் வைத்துப் படுக்கச் செய்தான். அசதி மிகுதியால் குழந்தை நொடியில் உறங்கிப்போனாள்.



புரசைவாக்கம்

அநேக பொதுக்கூட்டம், மாநாடுகளில் மேடையை விட தொண்டர்களோடு தொண்டர்களாய் உட்காருவதில்தான் ப.ரங்கநாதனுக்கு விருப்பம் அதிகம். பல்ஸ் பார்க்கும் உத்தி!

பூபதி அவள் உறக்கத்தைக் கலைக்காமல் மெல்ல ஒரு சோபா குஷனை அவள் தலைக்கடியில் நகர்த்திவிட்டு எழுந்து கொண்டான். காந்தாவை அழைத்துக் கொண்டு வாசலுக்கு வந்து நடந்தவற்றைக் கூறினான்.

சர்வே வேலை பன்னிரண்டு நாளில் முடிந்து விட்டது. புதிய திட்டங்களுக்கு நல்ல வரவேற்பு. பூபதி உற்சாகமாய் நண்பர்களுடன் ஊர் திரும்ப இருந்தான். அப்போது, கன்னத்தில் அறைந்தாற்போல் மானிட அவலம் எதிர்ப்பட்டு விஸ்வரூபமாய் கண்முன் நின்றது.

நாகப்பட்டினம் மாவட்டத்தின் கடலோரப் பகுதிகளினூடே பயணம் செய்த போது மீனவ இனத்தார் அநேகரைச் சந்தித்தான்.

சுனாமியால் அம்மக்களின் படகுகள் தகர்ந்து, மீன்பிடி சாதனங்கள் தாறுமாறாய்ச் சிதைந்து போய், பிழைப்புக் கெட்டு... அவர்கள் அழுது புலம்புவதைக் கேட்க சகிக்கவில்லை. பல குடும்பங்களில் மீதம் இருந்தவர்கள் வெகு சிலரே. சில குடும்பங்களைக் கடல் வெள்ளம் பூண்டோடு அடித்துக்கொண்டு போய்விட்டது. அஞ்சுவின் குடும்பத்தில் உயிர் பிழைத்தது அக்குழந்தை ஒருத்திதான். மற்ற மீனவ மக்கள் தம்மாலியன்ற உதவியை அவளுக்குச்

செய்தார்கள். அநாதைக்கு அனாதையரின் உதவி. எவ்வளவுக்கென்று முடியும்?

சென்னையிலிருந்த தன் வங்கியின் தலைமை அலுவலகத்துடன் பூபதி தொடர்பு கொண்டான். சர்வே பற்றி சுருக்கமாகச் சொன்னபிறகு அந்த மீனவ மக்களின் வேதனையான நிலையை எடுத்துக் கூறினான்.

வங்கியிலிருந்து உடனே பதில் வந்தது. அவனையும் இரு சக அலுவலர்களையும் இன்னும் சில நாட்கள் அங்கு தங்கி நிலைமையை முழுமையாய்க் கணிக்குமாறு உத்தரவு வந்தது. உடனடியாக வங்கி அந்த மக்களுக்காக நிவாரண நிதி திரட்டுவதோடு வேறு சில நிவாரண செயல்பாடுகளையும் மேற்கொண்டது.

"உனக்கு போன் பண்ணாதது தப்புதான் காந்தா. அந்த நினைவே எனக்கு வரலே. ஐ'ம் ஸாரி. மனசெல்லாம் கனத்துக் கிடந்தது."

"புரியுது பூபா."

"அஞ்சு சுனாமியால பாதிக்கப்பட்ட குழந்தை. அவளைப் பத்தின விவரமெல்லாம் மத்தவங்க சொன்னாங்க. ஒருநாள் அவ ளுக்கு அம்மா, அப்பா, ஆயா, ஒரு அக்கா, ரெண்டு அண்ணன், இத்தனை பேரும் இருந்தாங்க. மறுநாள் - யாருமே இல்லை. எங்கே போய்ட்டாங்க எல்லோரும்? தங்கள் குடிசையைக் கூடக் காணோமே! அந்தக் குழந்தைக்கு எதுவுமே புரியலை. பிரமை பிடிச்சாப்பல இருந்தாள். திடீர்னு அழ ஆரம்பிச்சிட்டாள். ஹிஸ்டெரிக்கல். அக்கம் பக்கத்துல அவளைப் பார்த்துக்கிட்டாங்க. ஆனால் அவங்களும் கதியத்தவங்கதானே. சுனாமியில் எல்லாம் பறிகொடுத்தவங்க. நான் இவளை என்னோடு அழைச்சிட்டுப் போறேன்னு சொன்னப்ப அவங்களுக்கு எவ்வளவு நிம்மதி தெரியுமா? நான் உள்ளூர் அதிகாரிகள்கிட்ட விஷயத்தைச் சொல்லி ஒப்புதல் வாங்கிக்கிட்டு, இவளைத் தேடி யாரானும் சம்பந்தப்பட்டவங்க வந்தால் என்கிட்ட இருக்கிறதாய் தகவல் சொல்லச் சொல்லி என் பெயரும் வங்கி முகவரியும் கொடுத்துட்டு இவளை அழைச்சுக்கிட்டு வந்தேன்."

அவனுடைய ஒவ்வொரு சொல்லையும் உன்னிப்பாய்ச் செவிமடுத்தபடி மௌன மாய் அமர்ந்திருந்தாள் காந்தா. சிறிது நேரத் தில் அவன் மீண்டும் பேசலானான்.

"அஞ்சு இன்னமும் பிரமையில்தான் இருக்கா காந்தா. இன்னும் ரொம்ப காலம் இதே நிலையில்தான் இருப்பாளோ என்னமோ! அவளுக்கு நேர்ந்த அனுபவம் ஒரு நாலு வயசுக் குழந்தை சுலபமாய் ஜீரணிச்சுக்கக் கூடியதில்லை. இதிலேருந்து மீண்டுவர அவளுக்கு அன்பு வேணும். ஆறுதல் தரணும். அவளைப் புரிஞ்சுக்கிட்டு பாதுகாப்புத் தரணும். அவள் செழித்து வளர 'தன்னுடையது'ன்னு உணர முடிகிற ஒரு வீடும் குடும்பமும் வேணும்."

அவன் நிறுத்தினான். அவளைத் தீர்க்கமாய்ப் பார்த்தான். மிக மென்மை யான குரலில் பேசினான் :

"அவளுக்கு அன்பும் ஆறுதலும் புரிதலும் பாதுகாப்பும் வீடும் தரக்கூடிய பரந்த மனசு நமக்கு இருக்கா காந்தா?"

அவன் பார்வையை அவள் நிதானமாய் எதிர்கொண்டாள். எழுந்து நின்றாள். பூபதி பின்தொடர அறைக்குத் திரும்பி வந்தாள். இலேசான மீன் வாசனையுடன் அஞ்சு உறங்கிக் கொண்டிருந்த சோபாவின் பக்கத்தில் தரையில் மண்டியிட்டு அமர்ந்தாள். அந்தப் பரட்டைத் தலைமுடியை மெல்லத் தடவிக் கொடுத்தாள். கரிய நெற்றியை மிருதுவாய் முத்தமிட்டாள். தலைநிமிர்ந்து கணவனைப் பார்த்துப் புன்னகையோடு கூறினாள் :

"நம்ம குழந்தையை நாம கண்டெடுத்துட்டோம்." ●



ஆயிரம் விளக்கு

ஸ்டாலின் மகன் உதயநிதி விரைவில் சினிமா தயாரிப்பாளரா கிறார். முதல் படத்தின் கதாநாயகன் இளைய தளபதி விஜய்.

நடக்குமென்பார்; நடக்கும்!

தஞ்சை பரத்வாஜ்

18.12.2005 முதல்
24.12.2005 வரை

மேஷம்: லட்சியங்கள் நிறைவேறும். தனம், குடும்பம், வாக்கு மேலோங்கும். பொருளாதார முன்னேற்றம் கிட்டும். வாகனம் வாங்கலாம். புதிய தொழில் தொடங்கலாம். திருமண காரியம் கைகூடும். பங்கு மார்க்கெட், ஏற்றுமதி, இறக்குமதி தொழில் செய்பவர்கள் முன்னேற்றம் அடைவார்கள். உத்தியோகஸ்தர்களுக்கு இடமாற்றம், ஊதிய உயர்வு காத்திருக்கிறது. ஆரோக்கியம் பாதிக்காது. சனிக்கிழமை தோறும் ஆஞ்சநேயர் காயத்ரி ஒன்பதுமுறை பாராயணம் செய்யவும்.

ரிஷபம்: உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தேவையில்லாத இடமாற்றங்கள் ஏற்படும். வேலையில் கவனம் செலுத்தவும். தாயாரின் உடல்நிலை பாதிக்கப்படும். வீடு, தொழில் போன்றவற்றில் மனக்குழப்பங்களும் தொல்லைகளும் இருக்கும். கணவன், மனைவிக்குள் மனக்கசப்பு ஏற்பட்டு விலகும். வியாபாரிகளுக்குத் தொழிலில் மந்த கதி இருக்கும். கொடுக்கல்/வாங்கலில் எச்சரிக்கை தேவை. ராகு/கேது/குரு வழிபாடு நன்மை பயக்கும்.


மிதுனம்: மன சந்தோஷம் ஏற்படும். சுப காரியங்கள் கைகூடும். புதிய ஆஸ்திகள் வாங்க நல்ல நேரம். புத்திர பாக்கியம் ஏற்படும். கணவன்/மனைவி உறவு நன்றாக இருக்கும். குழந்தைகள் வழியில் சுபச் செலவு ஏற்படும். ஆரோக்கியம் பாதிக்காது. தைரியமும் தன்னம்பிக்கையும் வளரும். ஊதிய உயர்வு கிட்டும். அயல்நாட்டு பிரயாணம் அமையும். வியாபாரிகள் தொழில் முன்னேற்றம் அடைவர். ராகு/கேது வழிபாடு நலம் தரும்.

கடகம்: நினைத்த காரியம் வெற்றி பெறும். தனம், வாக்கு, குடும்பம் மேலோங்கும். மனத்தெளிவு ஏற்படும். உத்தியோக இடமாற்றம், ஊதிய உயர்வு, வெளிநாடு





* படம்: ஸ்ரீஹரி



எனக்கு எப்பொழுது வேலை கிடைக்கும், சொந்தமாகத் தொழில் தொடங்கலாமா? எனது இரு மகன்களின் ஜாதகங்களை ஒப்பிட்டு பதில் கூறவும்...
- ஜி. அருள்ஜோதி, தேனி

உங்கள் பெரிய மகன் ஜாதகப்படி 2005 வரை நேரம் காலம் சரிவர இல்லை. சந்திர தசை நடந்ததால் தந்தைக்குக் கடன் தொல்லை, பிணி, வழக்கு, வியாதி போன்றவற்றை அளித்தது. இனிமேல் கவலைப்பட வேண்டாம். செவ்வாய் தசை ஆரம்பமாகி விட்டதால் நல்ல வேலை கிடைக்கும். தொழில் செய்தாலும் அனுகூலமாக இருக்கும். சின்ன மகன் ஜாதகப்படி நேரம் காலம் நன்றாக உள்ளது.

எனது பூர்வீக வீட்டின் பேரில் வழக்கு நடந்து வருகிறது. வழக்கு எங்களுக்குச் சாதகமாக முடியுமா?
- எஸ். சரோஜா, பெங்களூர்

2006-ல் வீடு விற்கலாம். உங்கள் வீட்டிலுள்ள மூவருக்கும் நேரம், காலம் சரியாக இருப்பதால் முயற்சிக்கும் காரியத்தில் வெற்றி கிடைக்கும். பையன் ஜாதகப்படி குருதசை ராகுபுத்தி நடப்பதால் பூர்வீகச் சொத்து விற்றுப் போகும். வழக்கும் முடிவுக்கு வரும். பரிகாரம் தேவையில்லை.

எனது மகளுக்கு மறு மணம் நடக்குமா? நல் வாழ்வு அமை

செல்லக்கூடிய வாய்ப்பு ஏற்படும். கணவன்/மனைவி உறவு நன்றாக இருக்கும். திருமண காரியம் கைகூடும். நண்பர்கள்/ உறவினர்களால் ஆதாயம் பெறுவீர்கள். வியாபாரம் சூடு பிடிக்கும். சத்ரு தொல்லை விலகும். சனி/குரு வழிபாடு நற்பலன் தரும்.

சிம்மம்: நன்மையும் தீமையும் கலந்த வாரம். நெருங்கியவர்களுக்குள் மனக்கசப்பு ஏற்படும். முன் கோபத்தைக் குறைக்கவும். கூட்டுத் தொழில் செய்பவர்கள் மனவருத்தமடைய நேரிடும். உடல்நிலையில் கவனம் தேவை. வாகனத்தில் செல்லும் பொழுது கவனம் அவசியம். குடும்ப வாழ்வில் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது. புதிய முயற்சிகளை சற்றுத் தள்ளிப் போடவும். பணப்பற்றாக்குறை தீரும். வேலையில் தொல்லைகள் இருக்கும். ராகு/கேது/குரு/சனியை வழிபட்டு வரவும்.

கன்னி: திருமண காரியம் கைகூடும். உத்தியோகத்தில் முன்னேற்றம் கிட்டும். தூரதேசப் பிரயாணம் அமையும். குடும்ப வாழ்வு நன்றாக இருக்கும். சந்தான பாக்கியம் கிட்டும். நணபர்கள்/உறவினர்களால் ஆதாயம் உண்டு. வியாபாரிகள் தொழில் முன்னேற்றம் காண்பார்கள். மாணவ/மாணவிகளுக்குப் படிப்பில் லட்சியங்கள் ஈடேறும். உடன்பிறந்தவர்கள் மூலம் நற்பலன் கிடைக்கும். வீடு வாங்க நல்ல காலம். செலவுகள் கட்டுக்கடங்கி இருக்கும். ராகு/கேதுவை வழிபட்டு வரவும்.

துலாம்: புதிய முயற்சிகள் கைகூடும். தனம், வாக்கு மேன்மை பெறும். கணவன்/மனைவி உறவு நன்றாக இருக்கும். திருமண காரியம் கைகூடும். சந்தான பாக்கியம் கிட்டும். சிலருக்கு கிரஹ பிராப்தம் கிட்டும். சத்ரு தொல்லை விலகும். உடல்நிலையில் பாதிப்பு இருக்காது. மனப்பிரமை இருக்காது. அண்டை நாட்டு வியாபாரம் வெற்றி அளிக்கும். வழக்கு, விவகாரங்கள் வெற்றி பெறும். சுபச்செலவுகள் ஏற்படும். வியாபாரிகள் தொழிலில் சுறுசுறுப்புடன் விளங்குவார்கள். ஆஞ்சநேயர் நாமாவளி படித்து வரவும்.

யுமா?

- பி. ராதாகிருஷ்ணன், திருநின்றவூர்

தங்களது பெண்ணின் ஜாதகத்தில் சர்ப்பதோஷம், செவ்வாய் தோஷம் இருந்து ஜாதகப் பொருத்தம் சரிவரப் பார்க்காத காரணத்தால் இவருடைய வாழ்க்கை துன்பகரமாக அமைந்துவிட்டது. மறுமணம் கிடையாது. ஆதலால் வேலைக்குப் போவது நற்பலனை அளிக்கும்.

எனது மகன் சிவகுமாருக்கு எப்போது திருமணம் நடக்கும்?

- எம். அருணாசலம்

உங்கள் பையனுக்கு தற்பொழுது சுக்ரதசை ராகுபுத்தி நடக்கிறது. 2006-ல் திருமணம் முடியும். படித்த, பண்புள்ள பெண் அமையும். பரிகாரம் தேவையில்லை.

எனது மகளுக்குத் திருமணம் எப்போது? - எம். ராமசாமி, சென்னை - 114

தங்கள் பெண்ணுக்கு புதன் தசை நடை பெற்று வருகிறது. நன்கு படித்த, பண்புள்ள, உறவில் லாத இடத்தில் பையன் அமைவான். 2006-ல் திருமணம் முடியும்.

பரத்வாஜ் பதில்கள்

விருச்சிகம்: செல்வச் செழிப்பு ஏற்படும். சுபகாரியம் கைகூடும். உத்தியோகப் பணி மாற்றம், ஊதிய உயர்வு, வெளிநாடு செல்லக்கூடிய வாய்ப்பு ஏற்படும். சத்ரு தொல்லை இருக்காது. ஆரோக்கியம் பாதிக்காது. திருமணத் தடை விலகும். வியாபாரிகள் தொழில் விரிவாக்கம் செய்யும் வாய்ப்பு வரும். வீடு/வாகனம் வாங்கும் நேரமிது. குடும்ப வாழ்வு நன்றாக இருக்கும். ராகு/கேது/ குரு வழிபாடு நன்மை அளிக்கும்.


தனுசு: சுபகாரியங்கள் கைகூடும். உடல்நிலையில் முன்னேற்றம் காணப்படும். குடும்பத்தில் மனக்கசப்பு இருக்காது. குழந்தைகளால் மனமகிழ்ச்சி கிடைக்கும். வியாபாரிகள் தொழில் வளர்ச்சி காண்பார்கள். செலவுகள் கட்டுக்கடங்கி இருக்கும். கொடுக்கல்/வாங்கல் நன்றாக இருக்கும். நண்பர்/உறவினர்களால் ஆதாயம் கிட்டும். பாகப் பிரிவினை ஏற்படும். சனி/ராகு/கேது வழிபட்டு வருதல் நலம் தரும்.

மகரம்: வரவும் செலவும் கலந்திருக்கும். எண்ணங்கள் யாவும் ஈடேறும். தனம், வாக்கு, குடும்பம் மேலோங்கும். மனைவி வழியில் சுபச் செலவு ஏற்படும். தடை விலகி திருமணம் கைகூடும். வீடு, நிலம் வாங்க நல்ல காலம். உடல் ஆரோக்கியம் பாதிக்காது. புகழ் கிடைக்கும். வியாபாரிகள் தொழிலை அபிவிருத்தி செய்ய நேரிடும். கணவன்/மனைவி உறவு நன்றாக இருக்கும். வெளியூர் பிரயாணம் செல்ல நேரிடும். குரு/சனி வழிபாடு செய்து வரவும்.

கும்பம்: தொட்டது துலங்கும். எதிர்ப்பு, தொல்லைகள் விலகி உங்களின் வெற்றிக்கொடி பறக்கும். கணவன்/மனைவிக்குள் அனுசரணை தேவை. வீட்டை கவனிக்க நேரமிருக்காது. பொறுப்புகள் அதிகரிக்கும். ஊதிய உயர்வு கிடைக்கும். சிலருக்கு மகப்பேறு பாக்கியம் உண்டாகும். பொருளாதார முன்னேற்றம் ஏற்படும். வாகனத்தில் செல்லும்போது கவனம் தேவை. ராகு/கேது வழிபட்டு வருதல் நலம்.

மீனம்: தன்னம்பிக்கையுடன் செயல்படுவீர்கள். லட்சியங்கள் ஈடேறும். சத்ரு தொல்லை விலகும். கணவன்/மனைவிக்குள் அனுசரணை தேவை. வீடு வாங்க நல்ல காலம். குழந்தைகள் வழியில் சுபநிகழ்ச்சி ஏற்படும். நண்பர்/உறவினர்களால் ஆதாயம் ஏற்படும். உத்தியோக வேலைப்பளு அதிகரிக்கும். நேர்முக எதிர்ப்பு இருக்காது. குடும்ப வாழ்வு நன்றாக இருக்கும். புத்திர பாக்கியம் ஏற்படும். வியாபாரிகள் நற்பலனை அடைவார்கள். ராகு/கேது/குரு/சனி வழிபட்டு வரவும்.

விஜயகாந்த் பேசுகிறேன்! 9



தமிழ் மட்டும்

அப்பா கண்கள் சிவக்க என்னிடம் கேட்டார், "எப்படிடா ஃபெயிலானே... ஒழுங்காப் படிக்கலையா?"

"நான் நல்லாப் படிச்சேம்பா. ஆனா...!" என்று இழுத்தேன்.

''ஏண்டா, படிக்கச் சிரமமாயிருக்கா? டியூஷன் போறியா?'' தடாலென்று அப்பாவின் குரலில் மென்மை தெரிந்தது. உடனே தலையாட்டி வைத்தேன். 'ஏற்பாடு பண்றேன்'னு என் முதுகைத் தடவிக் கொடுத்துப் போனார். நல்லவேளை, அடி உதையிலிருந்து தப்பினேன்.

எங்க ஸ்கூல் வாத்தியார் சாந்தாராம் சார்கிட்டேயே டியூஷன் ஏற்பாடு செய்யப்பட்டது. தினமும் நானும் இப்ராகிமும் சைக்கிளில் வாத்தியார் வீட்டுக்குப் போய்ப் படித்து வந்தோம். சைக்கிளிலேயே ஊர் சுற்றுவோம். வேகமா ஓட்டுவது, கைகளை விட்டு ஓட்டுவது, ஒரு பக்கம் உட்கார்ந்து ஒத்த காலால் பெடல் மிதித்து ஓட்டுவது... இப்படிப் பல சாகசங்கள் செய்வோம். பெரும்பாலும் இந்த சாகசங்களை சகமாணவிகளைப் பார்த்ததும்தான் செய்வோம்.

சிந்தாமணி தியேட்டர் பக்கத்துல வாத்தியார் வீடு இருந்தது. மாடியில் உட்கார்ந்து பாடம் படிப்போம். டியூஷன் முடிஞ்சு வெளியே வரும்போது ரொம்ப ஜாலியா அரட்டை அடிச்சுட்டு வருவோம். வர்ற வழியில கோயா ஹோட்டல் இருக்கும். அது அம்சவல்லி பவனுக்கு நேர் எதிரில் இருந்தது. அங்கே காடை சாப்ஸ், கக்கா சாப்ஸ், ரொம்ப ஃபேமஸ். அந்தக் கடையின் ரெகுலர் கஸ்டமர் நாங்க.

சில சமயம் டியூஷன் முடிச்சுட்டு வந்து சாப்பிடுவோம். சில வேளை கிடைக்காது. அதனால டியூஷனுக்குப் போகும்போதே வாங்கி பேப்பர்ல மறைச்சு பாக்கெட்ல வச்சுக்குவோம். சாந்தாராம் சார் சுத்த சைவம். 'என்னடா நாத்தம் வருது'ம்பார், 'பக்கத்து வீட்ல ஏதோ வறுக்குறாங்க போலிருக்கு சார்' என்போம், நல்ல பிள்ளைகள் மாதிரி.

அவரு ரொம்ப நல்லா பாடம் சொல்லிக் கொடுப்பார். நான் சுமாராப் படிப்பேன். இப்ராகிம் ஹோம்-வொர்க் பண்ணாம வந்து மாட்டிக்குவான். அடி விழும்.

சாந்தாராம் சார், எங்களை நல்லா கவனிச்சுக்கிட்டார். 'டேய் நீங்க டெய்லி கட் அடிக்கிறீங்க. அதனால டியூஷனுக்காவது வந்துடுங்க'ம்பார். எக்ஸாம் சமயத்துல ஒரு பத்து நாள் எல்லாப் பாடத்துலயும் நல்லா கோச்சிங் கொடுப்பார்.

நாங்க வாங்குற மார்க் 45, 50.... இந்த ரேஞ்சுலதான் இருக்கும். எங்களுக்கு ஆங்கிலம், சயின்ஸ் ரெண்டும் ஏறாது. ஏறாதுன்னு சொல்றதை விட, அதை நாங்க பெருசா எடுத்துக்கலை. அதனால பிடிக்கலை. ஆனால் தமிழிலும் கணக்கிலும் நல்ல மார்க் வாங்குவோம்.



எதைப் பத்தியும் யோசனையில்ல. எங்க ரெண்டு பேருக்கும் பிடிச்ச விஷயம் சினிமா பார்க்கறதுதான். ஒருநாளைக்கு நாலு 'ஷோ' விடாம பார்ப்போம்.

எங்க செட்ல இருந்த நண்பர்களில் ஞானமுருகன் ரொம்ப பயந்த சுபாவம் கொண்டவன். நெத்தி நிறைய பட்டை போட்டுக்கிட்டு வருவான். 'டேய், நீ ஜெய்சங்கர் மாதிரி இருக்கே'ன்னு சொல்லியே உசுப்பேத்தி விடுவோம். அவன் ஒருநாள் ஊரை விட்டே சென்னைக்கு ஓடி வந்துட்டான்.

நாடார் வித்யாசாலை பள்ளியில் புலவர் வேலாயுதம்னு தமிழ் ஆசிரியர் இருந்தார். அவரை நாங்க 'வேலய்யா'ன்னு மரியாதையா கூப்பிடுவோம். அவர் வகுப்புல மட்டுமில்ல, எங்கேயும் எப்பவும் செந்தமிழ்லதான் பேசுவார். குள்ளமாயிருப்பார், கதர் ஜிப்பாதான் அணிவார். நிறைய புத்தகங்களை எழுதியிருக்கிறார்.

போதுமா?

அப்ப எதிர்காலம் பத்தியோ, படிப்பு பத்தியோ பெருசா யோசிக்கல. வீட்ல காசு திருடினாலும், ஸ்கூலுக்கு 'கட்' அடிச்சாலும் நேராப் போறது சினிமாவுக்குத்தான். அப்போ சினிமா தவிர வேற

அவரின் வகுப்பில், சங்க இலக்கியங்கள் செவிக்கு இன்பம் சேர்க்கும். அவரது குரல் கம்பீரமாக கணீரென்றிருக்கும். பாரதியார், பாரதிதாசன் கவிதைகளை அவர் உச்சரிக்கும் அழகே தனி. தமிழைச் சரியாகப் படிக்கலன்னா பிரம்புதான் பேசும்.

வேலய்யா இப்பவும் என்னோடு நல்ல நட்புடன்

இருக்கிறார். மதுரைக்குப் போனால் பேசுவேன். "என்ன விஜய் எப்படியிருக்கிறீர்கள்...! நீங்கள் இப்படி ஒரு உயரமான இடத்துக்கு வருவீர்கள் என்று எதிர்பார்க்கவில்லை. மிக்க மகிழ்ச்சி. வாழ்த்துக்கள். தமிழுக்காக உழைக்கிறீர்கள். உங்கள் முயற்சியைப் பாராட்டுகிறேன். இன்னும் பலமாகத் தமிழுக்காகக் குரல்கொடுங்கள்" என்று செந்தமிழில் பேசுவார். தமிழ் உணர்வை எனக்குள் விதைத்தவர்களில் இவரும் ஒருவர்.

இவரது தமிழ் வகுப்பும், பெரியார், அண்ணா போன்ற தலைவர்களின் பத்திரிகை அறிக்கைகளும் மேடை தோறும் வெடித்துக் கிளம்பிய இந்தி ஆதிக்க எதிர்ப்பும் படித்து வந்த எங்களை உசுப்பேத்திவிட, மறுபடியும் இந்தி எதிர்ப்பில் இறங்கினேன். என்னுடன்



• மனைவி - மகன்களுடன்...

இப்ராகிமும் நண்பர்களும் கைகோத்தார்கள்.

சேதுராம் பண்டிட்னு ஒரு இந்தி வாத்தியார். அவர் நல்ல மனுஷன்தான். இந்தி மேல் இருந்த கோபம் அவர் மேல் திரும்பியது. மறைஞ்சு நின்னு கல்லெறிவோம். ஒருநாள் அவர் சைக்கிளை நொறுக்கிட்டோம். இப்படிப் பலவிதங்களில் எதிர்ப்புக் காட்டி வந்தோம்.

நான் இந்தி கிளாஸுக்குப் போகாம பல நாள் 'கட்' அடிச்சுட்டிருந்தேன். இந்தி பண்டிட் என்னைக் கூப்பிட்டு புத்திமதி சொல்வார். "தமிழ் மட்டும் போதும்னு இருந்திடாதே. நாலு பாஷை கத்துக்கோ. அதனால எதிர்காலத்துல பல நன்மைகள் கிடைக்கும். இந்தியும் இங்கிலீஸும் அவசியம் படி'ன்னு அவரும் பல தடவை சொன்னார். நான் அதைக் காதுலயே போட்டுக்கலை.

அவர் சொன்னதைக் கேட்கலை என்பதைவிட தமிழ் ஒண்ணே போதும்னு இருந்துட்டேன். 'தமிழ்நாட்ல வாழ்றவனுக்குத் தமிழ் எழுத, படிக்கத் தெரிஞ்சா போதாதா... அதுக்கு மேல வேற என்ன வேணும்? இந்தி - இங்கிலீஷ் கூடுதலாக எதுக்கு'ன்னு கிணத்து தவளையாவே இருந்துட்டேன். இப்போ அவஸ்தைப்படுறேன். வடநாட்டில், வெளிநாட்டில் படப்பிடிப்பில் கலந்து கொள்ளும்போது இந்தி, இங்கிலீஷ் படிக்க, பேசத் தெரியாமல் ரொம்ப

அவமானப்பட்டதுண்டு. இப்ப என் மனைவி, என் பிள்ளைகளுக்கு ஆங்கிலம் சொல்லிக் கொடுக்கும்போது, நானும் அப்படியே கத்துக்கறேன். இதைச் சொல்றதுல எனக்கு அவமானமோ, வெட்கமோ இல்லே.


இந்தி பண்டிட் எவ்வளவு சொல்லியும் நான் இந்தி வகுப்பைப் புறக்கணித்து வந்தேன். இதனால் ஆத்திரமடைந்த பண்டிட் என்னைக் கூப்பிட்டுத் திட்ட, நான் கோபத்துல ஏதோ வேகத்துல 'இது தமிழ் நாடு. எதுக்கு இப்படி இந்தி வெறியனா நடந்துக்கறீங்க'ன்னு கத்தினேன்.

ஆத்திரத்தில் பண்டிட் என்னை அடித்து நொறுக்கி விட்டார். 'நீ வெளியே வா! உன்னை வச்சுக்கறேன்'னு பதிலுக்குக் கத்திவிட்டு வெளியே வந்துட்டேன்.

இதனால் ஒரு பெரிய பிரச்னை உருவானது. எங்கப்பா அழைக்கப்பட்டார். 'உங்க மகனை அழைச்சுட்டுப் போயிடுங்க' என்றது பள்ளி நிர்வாகம்.

(சொல்றேன்)

படம் உதவி : **சஜோ**



விஜயகாந்த் பற்றி வி.ஜ.பி!

வாழ்வின் வழிகாட்டி!

'எனக்கு ஒரு அண்ணன் இல்லையே' என்ற குறையை நீக்கியவர் விஜயகாந்த் சார்தான். எங்கப்பா இயக்கத்தில் அவர் நடிக்கும் படப்பிடிப்புக்கு நான் பல தடவை போயிருக்கேன். அப்போது பலமுறை அவரை ஆச்சரியமா பார்த்திருக்கேன்.

எந்த ஒரு காட்சி என்றாலும் அதில் அவர் செலுத்தும் கவனம் எனக்கு ரொம்பப் பிடிக்கும். குறிப்பாகச் சண்டைகளில் அவர் துணிச்சலாகப் பாய்ந்து பறந்து மோதுவதைப் பார்த்துப் பலமுறை ஷூட்டிங் ஸ்பாட்டிலேயே கைதட்டி ரசித்திருக்கிறேன். பல படங்களில் அவரின் சின்ன வயது வேடத்தில் நான் நடித்திருக்கிறேன். என் மீது என் பெற்றோர் காட்டும் பாசத்தைப் போல், அண்ணன் ஸ்தானத்தில் இருந்து பாசம் காட்டுபவர் விஜயகாந்த் சார்.

'தான் உயர வேண்டும். தான் புகழ்பெற வேண்டும். தன்னுடைய இமேஜை மேலும் உயர்த்திக்கொள்ள வேண்டும்' என்ற ஆர்வம்தான் பொதுவாக எல்லா நடிகர்களிடமும் இருக்கும் குணம். அதற்கு விதிவிலக்கு ஒருவர் உண்டென்றால், அது விஜயகாந்த் சார்தான்.

தமது இமேஜ் பாதிக்கப்பட்டுவிடக் கூடாது என்பதற்காக தன்னுடன் நடிக்கும் நடிகர்களுக்குப் போதிய வாய்ப்பை சில நடிகர்கள் தரமாட்டார்கள். ஆனால், நான் சினிமாவில் நடிக்க வந்தபோது, நான் நல்ல பெயர் பெற்று, நல்ல இடத்தைப் பிடிக்க வேண்டும் என்பதற்காக 'செந்தூர பாண்டி' படத்தில் தனக்குச் சமமாக நடிக்க எனக்கு வாய்ப்புக் கொடுத்து என் வாழ்வில் ஒரு நல்ல வழிகாட்டியாக இருந்தவர், இருப்பவர் எங்கள் விஜயகாந்த் சார்.

- இளையதளபதி விஜய்

யுகபாரதி கவிதைகள்

எனக்குக் குழந்தைகளைப்
பிடிக்குமென்பதற்கு
ரெண்டு காரணம்
என் குழந்தைப் பருவத்தில்
யாருக்கும் நான் பிடிக்கவில்லை
என்பது முதலாவது
என் பரந்து விரிந்த முற்றத்தில்
விழுந்து எழுந்து விளையாட
பிள்ளையில்லையென்பது
மற்றொன்று

கொஞ்சத்திலும்
கொஞ்சமாக
குழந்தையின் உதட்டிலிருந்து
பரவுகிற பால் வீச்சத்தில்
எல்லாத் தாயும்
ஆகிவிடுகிறாள்: ஏவாளாக
எந்தத் தகப்பனும்
ஆவதில்லை ஆதாமாக

குழந்தையும் தெய்வமும்
ஒன்றென சொல்வோர்க்குத்
தெரிந்திருக்குமா
இல்லையே பிள்ளையென
ஏங்குகிற ஒருத்தியின்
மனவலி.
இருந்து இல்லாமல்
இல்லாமலிருந்து எனும்விதமாக
வருகிற தெய்வங்கள்
எதுயெதில் சிறந்தது
குழந்தைகளைவிட





பொதுவாழ்வில்
உள்ளோர்க்குப் பிரச்னை
புத்திரர்களால்
வாழ்வைப் பொதுவாக
எண்ணுபவர்க்கு
வந்து பிறக்கிறது பிரச்னை
புத்திரர்களாக
செத்தாலும் தீராத சிக்கல்
பெத்தால் வந்திடுமோ
பெருமானே

குழந்தைகளைக் கொஞ்சுகையில்
குழந்தையாகிவிடுகிற யாராலும்
சொல்ல முடியாது
இந்த ஜென்மம் இம்சையென்று
இல்லையெனினும்
குழந்தைகள் வரைந்து காட்டுகிற
காக்கைதனை காக்கையென்று
பொய் சொல்லப் பழகுங்கள்
வெள்ளைக் காக்கைகளை
நீங்கள் தரிசிக்கலாம்

ஓவியம்: அனந்தபத்மநாபன்



பிரதமர் பாராட்டிய புத்தகம்!



மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பில் பிறந்து வளர்ந்தவர். மும்பையிலுள்ள அந்தேரி பகுதியில் வசித்தவர். இவரது தந்தை ரிக்ஷா வண்டி இழுத்தும், கூலி வேலை செய்தும் பிழைத்தவர். தாய், பழக்கூடையைத் தலையில் சுமந்து தெருத் தெருவாக அலைந்து விற்றவர்.

இந்தப் பகுதியில் டாக்டர் அம்பேத்கர், பிற்படுத்தப்பட்ட மக்களின் உயர்வுக்காகப் பேசிய பேச்சைக் கேட்டுவிட்டு, தானும் ஏன் தன் பிள்ளைகளைப் படிக்க வைக்கக்கூடாது என்று நினைத்தார் தந்தை.

மகன் படித்து, பெரிய மனிதராக ஆனார். அவர்தான் டாக்டர் நரேந்திர ஜாதவ். பாரத ரிசர்வ் வங்கியின் முதன்மை ஆலோசகர் மற்றும் முக்கிய பொருளாதார நிபுணர்.

நரேந்திர ஜாதவ் எப்படி இந்த உன்னதமான பதவியை எட்டிப் பிடித்தார்?

தமது பள்ளிப் படிப்பின்போது ஏராளமான பரிசுகளைப் பெற்றார். கல்லூரிப் படிப்பிலும் முதன்மையாக இருந்தார். அமெரிக்காவில் உள்ள இன்டியானா பல்கலைக்கழகத்தில் டாக்டர் பட்டத்தைப் பெற்றார். உலக வங்கியில் டாக்டர் மன்மோகன்சிங் பணியாற்றியபோது, அவருக்கு ஜாதவ் உதவியாளராக இருந்து வந்தார். சிறந்த பேச்சாளர். பொருளாதாரத் துறையில் ஏழு நூல்களையும் நிறைய ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதியவர்.

தன் வாழ்க்கையைப் பின்னணியாகக் கொண்டு இவர் எழுதிய நூல்தான் 'துருவ நட்சத்திரம்'! இதை முதலில் தன் தாய்மொழி மராட்டியில் எழுதி வெளியிட்டார். பிறகே இது ஆங்கிலத்தில் வெளிவந்தது. அதற்குப் பிறகு ஜாதவ்வின் புகழ் பல பாகங்களிலும் பரவியது. இப்போது இந்த நூல் தமிழ், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளில் வெளியாகியிருக்கிறது. தமிழில் ஜாதவ்வின் நூலை மொழிபெயர்த்தவர் வழக்கறிஞர் சுமதி. இந்த நூலை புதுதில்லியில் நவம்பர் 16ஆம் தேதி வெளியிட்டார், பாரதப் பிரதமர் மன்மோகன் சிங்.

"அல்லயன்ஸ் கம்பெனியின் வெளியீடான 'துருவ நட்சத்திரம்' இன்னொரு ஜாதவ் உருவாக உதவ வேண்டும்!" என்று அல்லயன்ஸ் பதிப்பக சீனிவாசன், ஜாதவ்விடம் கூறினாராம் பிரதமர்.

புத்தக வெளியீட்டு விழா நிகழ்ச்சி முடிந்தவுடன், அல்லயன்ஸ் பதிப்பக சீனிவாசனைக் கூப்பிட்டு, பாராட்டியிருக்கிறார். நூற்றாண்டு கண்ட தமிழ்ப் பதிப்பகம் என்று அறிந்ததும் வியப்புத் தெரிவித்து வாழ்த்தும் கூறினாராம் பிரதமர்!

- சாருகேசி

உள்ளத் தூய்மை!



உடல், உடை இவற்றுக்கு மேலாக ஒன்று இருக்கிறது. அதுதான் உள்ளம், மனம் என்பது. மனச்சுத்தம், உள்ளத் தூய்மைதான் மிக மிக முக்கியம். அது இல்லாமல் உடம்பும் உடுப்பும் எவ்வளவு தூய்மையாக இருந்தாலும் பயனேயில்லை. மனசிலே அழுக்குப் படியாமல் அதை அவ்வப்போது தேய்த்துக் கழுவிக் குளிப்பாட்டிக் கொண்டே இருக்க வேண்டும்.

மனசுக்கு ஏற்படுகிற அழுக்கு என்பது என்ன? தப்பு, தவறு செய்வது தான் உள்ளத்துக்கு அழுக்கு. நாம் செய்கிற காரியங்களில் தவறு ஏற்படக்கூடாது. அதாவது கெட்ட நோக்கங்களுக்காகக் காரியம் செய்யவே கூடாது.

ஆனாலும் காரியம் என்று வந்து விட்டால் நல்லதைச் செய்கிறபோது கூட அதிலே சில தப்பு, தவறுகள் நேர்ந்துவிடலாம். இதனால் பெரிய குற்றம், அதாவது தோஷம் இல்லை. ரொம்பப் பெரியவர்கள்கூட எவ்வளவோ நல்ல காரியங்கள் செய்கிறபோது அவர்களையும் கொஞ்சம் சறுக்கிவிட்டிருக்கிறது. நாமே எல்லாம் செய்துகொள்ள முடியும் என்று கர்வப்படாமல், பகவான் துணையால் தான் எதையும் சாதிக்க முடியும் என்று நாம் உணருவதற்காகவே இப்படிச் சில தவறுகள் நேர்ந்துவிடுகின்றன. இம்மாதிரி சமயங்களில் நீங்கள் பகவானை வேண்டிக் கொள்வது தான் சரி. அதுவே அழுக்கைக் கழுவி விடும்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய சுவாமிகள்

சொந்தங்கள் வாழ்க!

மற்ற உறவுகளிலிருந்து மாறுபட்ட பந்தம் நட்பு; ஏனெனில் அவற்றில் பகிர்ந்து கொள்ள முடியாத சில அந்தரங்கங்களை நட்பில் நம்பிக்கையோடு, தயக்கமில்லாமல் பகிர்ந்து கொள்வது பாரத்தை இறக்கிவைத்த சுகத்தைத் தருகிறது. இதமான நெருக்கம் ஏற்படுகிறது. இந்த கட்டத்திற்குப் பிறகு, நட்பைத் தொடர்ந்து பலப்படுத்திக் கொள்ளாதவர்கள் இழப்புக்கு உள்ளாகிறார்கள். உள்ளன்போடு கொள்ளும் நட்பு, பல சந்தர்ப்பங்களில், பல காரணங்களால் முறியும்போது, ஏற்படும் புண் ஆறுவது கடினம்.

சந்திரனும் ரவியும் இளம் பருவம் முதல் ஒன்றாகவே படித்தார்கள். இருவரையும் இரட்டைப் பிறவிகள் என்று சொல்லும் அளவுக்கு ஒட்டிக் கொள்வார்கள். இவன் தப்பு செய்தால் அவன் பழியை ஏற்றுக்கொண்டு அடி வாங்குவான். சந்திரன் சிரிக்கச் சிரிக்கப் பேசுவான் என்பதால், விடலைப் பருவத்தில் அவனைச் சுற்றி ஒரு கூட்டம் சேர்ந்தது. அவனும் இறங்கிப் போனான். அதில் சிலர் அவனைத் தவறான வழியில் அழைத்துப்போக, நெஞ்சு பொறுக்காத ரவி எச்சரித்தான். ஒருமுறை கூசாமல் சந்திரன் ரவியின்மீது பழியைப் போட, சந்திரன் தன் நல்ல குணத்தைத் தவறாகப் பயன்படுத்திக்கொண்டது ரவிக்குப் புரிய, நண்பனிடமிருந்து ரவி விலகிக்கொண்டான் - சந்திரனும் சூரியனும் ஓரிடத்தில் தென்படாத மாதிரி இருவரும் விலகிவிட்டார்கள். ரவி மனமுடைந்து போனான். பல வருடங்கள் கழித்து சந்திரன் தன் தவறை உணர்ந்து திரும்பி வந்தபோது, ரவி, "நம் நட்பு சுட்டமண்ணாகி விட்டது; இனி சேராது." என்று சொல்லிவிட்டான். இழப்பு சந்திரனுக்குத்தான்.

சிலரது நட்பு உண்மையாயினும் தொடர முடியாமல் சூழ்நிலை சதி செய்கிறது - ஜமீலா, விஜியின் கதை போல. இருவரும் கல்லூரியில் நன்றாகப் படித்தார்கள்; எந்த வித்தியாசமும் இல்லாது உண்மையாகப் பழகினார்கள். ஜமீலாவின் உடையை விஜி போட்டுக் கொள்வதும், விஜி வீட்டு சைவ உணவை ஜமீலா விரும்பிச் சாப்பிடுவதும் வழக்கமாகிவிட்டன. தன்னை மறந்து விடிய, விடியப் பேசிச் சிரித்துக் கழித்த இரவுக் காலங்கள் அவர்களிடையே மறக்க முடியாதவை! இருவரும் ஒருவரை ஒருவர் மறக்க மாட்டோம் என்று சத்தியப் பிரமாணம் செய்து, அழுதுகொண்டே பிரிந்தார்கள். நடந்தது என்ன? மணமாகி இருவரும் பிரிந்து, அவரவர் வாழ்க்கைச் சுழலில் சிக்க, உண்மையான நட்புதான்; ஆனால் நினைவோடு தேங்கிப் போன உறவு.

பழநியும் நடராஜுனும் நெருங்கிய நண்பர்கள். வசதியில்லாத நடராஜுக்குப் படிக்க உதவி செய்து, அவரை நல்ல நிலைக்கு பழநி கொண்டு வந்ததால், நடராஜ் நெகிழ்ந்து போனார். இருவரும் சேர்ந்து ஒரு தொழிலை வெற்றிகரமாக நடத்த, திருமணம் செய்து கொண்டார்கள். நடராஜின் மனைவி, பழநி அவரை உபயோகப்படுத்தித் தன் வசதிகளைப் பெருக்கிக் கொள்வதாகப் போதிக்க, போதிக்க.. அம்மி நகர ஆரம்பித்தது. முடிவு? நட்பு, பகை இரண்டுக்கும் இடையே உள்ள அந்த மெல்லிய கோடு தாண்டப்பட்டதும், பகை கனன்றது.



எங்கோ ஒரு மூலையில்

• படம்: யோகா



நட்புக்கு மரியாதை!

உயர்ந்த நட்புக்கு அமைதியான சான்றாக விளங்கிக் கொண்டிருக்கும் கருப்பையாவை நினைக்கையில் மெய்சிலிர்க்கிறது. தோட்ட வேலை செய்யும் கருப்பையா தனது வளர்ப்பு மகளின் திருமணத்துக்குப் பத்திரிகை வைக்க வந்தார். கருப்பையாவின் நண்பருக்கு அருமையாகப் பிறந்த மகள் இரண்டு வயதாக இருக்கையில், ஒரு கோர விபத்தில் பெற்றோர் இருவரும் இறந்து போனார்கள். சடங்கு நடக்கும்போதே உறவினர் அந்தப் பச்சிளங்குழந்தையை ஏலம் போட, நெஞ்சு பொறுக்காது குழந்தையைத் தூக்கி வந்து, தன் மகளாக வளர்த்து திருமணம் செய்து கொடுப்பதாக கருப்பையா சொன்னபோது, இறந்த நண்பரின் நினைவில் கண்கலங்கிப் போனார். இன்னும் எத்தனையோ கருப்பையாக்கள் உண்மையான நட்பின் கொடியை ஆரவாரமில்லாமல் பறக்கவிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

ஆணாகட்டும் பெண்ணாகட்டும் இரு நபர்களிடையே நட்பு தழைக்க அடிப்படையில் சில விழிப்புணர்வுகள் தேவை.

- மாற்றம் ஒன்றுதான் மாறாதது; நாம் மாறுவதுதான் வளர்ச்சிக்கு அடையாளம். காட்டாறாக ஆரம்பிக்கும் நட்பு, அமைதியான நதியாக

மனநல ஆலோசகர் பிருந்தா ஜெயராமன்

ஒடுவது நண்பர்களின் விரும்பத்தக்க வளர்ச்சியால்தான். இந்த மாற்றங்களை ஏற்றுக்கொள்ளும் பக்குவம் அவசியம்.

• சிறந்த நட்புக்கு நேர்மையும் விசுவாசமும்தான் அஸ்திவாரம். இவை குறையும்போது நட்பு ஆட்டம் கண்டு விடுமல்லவா?

• உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேச அவசியமில்லை; ஏனெனில் நண்பரை/தோழியை அவருடைய குறையோடு நேசிப்பதுதான் நட்பின் சிறப்பு! நடராஜ் அப்படித்தான் பழகினார்; ஆனால் பழநியின் குறைகளை மனைவி பெரிதுபடுத்த, நடராஜ் அதை மட்டும் பார்க்க ஆரம்பித்து விட்டார்.

• நட்பு தழைக்க வேண்டுமென்றால் இருவரிடையே ஒரு சிறு இடைவெளி அவசியம். அவரவர் அந்தரங்கத்தில் இளமையில் தலையிட்டிருந்தாலும், குடும்பம் என்று ஆன பிறகு, அந்த வட்டத்தில் மூக்கை நுழைக்காமல் இருந்தால், நண்பரது வாழ்க்கைத் துணை நட்பை மதிப்பார்.

• நட்பில் சுயநலம் இருந்தால் காட்டிக்கொடுத்துவிடும். அத்துமீறல்கள் நட்பின் முடிவுக்கு அபாய விளக்கு.

• இருவரிடையே சமமான அந்தஸ்து அவசியம். 'நான் உயர்ந்தவன்/வள்; நீ என் சொல்லைக் கேள்'. எனும் தோரணை ஆரோக்கியமான நட்புக்கு அடையாளமாகாது. அவர்கள் இருவரும் இதை ஏற்றுக் கொள்ளலாம். ஆனால் குடும்பத்தார் அங்கீகரித்தால் தானே வண்டி ஓடும்?

• நண்பர்களிடையே பரஸ்பரம் உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுத்தால் தான் நட்புக்கு மரியாதை. வெளிப்படையான தொடர்பு மொழி இதைச் சாத்தியமாக்கும்.

• அசைக்க முடியாத நம்பிக்கையை அஸ்திவாரமாகக் கொண்டிருந்தால், எந்தத் தீவிரவாதியும் நட்பெனும் கோட்டையைத் தகர்க்க முடியாது. விஷமிகளின் பேச்சை நம்பி, நண்பரைத் தவறாகப் புரிந்துகொள்ளும் நபர் கோட்டையைத் தானே தகர்த்து விடுவார்.

• 'தானாடாவிட்டாலும் சதை யாடும்' என்பார்களே, அந்தத் துடிப்பு இருக்க வேண்டும்; அதே சமயம் நண்பரைச் சார்ந்திருத்தல் (நண்பரில்லாது வாழ்க்கை இல்லை எனும் நிலை) உயர்ந்ததல்ல.

நல்ல நண்பர்/தோழி ஒருவருக்குக் கிடைத்த பொக்கிஷம் என்பதைப் புரிந்து கொள்ளும் அதே நேரத்தில், 'நண்பர்கள் வயலின் தந்தி மாதிரி; அதிகமாக முறுக் கேற்றினால் அறுந்து போகும் அபாயம் உண்டு.' என்கிற விழிப்புணர்வோடு, வரம்பு மீறாமல் நடந்து கொண்டால், ஒரு கருமி பொக்கிஷத்தைச் செல வழிப்பதில் காட்டும் எச்சரிக்கையைப் பின்பற்றுவோம்.

எந்த உறவைத் தான் நாம் அலட்சியமாக நினைக்க முடியும்? 'பெற்றோர் - குழந்தை உறவு உள்பட... நான் உன்னைப் பெற்று, வளர்த்து...' இந்தப் பேச்சு இன்று செல்லாத காசு. அடுத்த வாரம் இது பற்றி நிறையப் பேச இருக்கிறது.

(பேசலாம்)



அண்ணாநகர்

அதிகாலையில் தன்னைச் சந்திக்க வரும் கட்சிக்காரர்களை வீட்டில் ரொம்ப நேரம் காக்க வைக்காமல், வாக்கிங் போகும்போதே முடிந்தவரை பேசி விடுகிறார் ஆற்காடு வீராசாமி.

தொகுப்பு: கலை

"ஒரு சின்ன பையன் அழுதுக்கிட்டு நிக்கிறான். டாக்டர் அவனைக் கூப்பிட்டுக் கேட்கிறார்.

'ஏம்பா அழுறே?'

'எங்க நாய் செத்துப் போச்சு...'

'அடடா, போன வாரம் எங்க தாத்தா கூடத்தான் செத்துப்போனார். நான் என்ன அழுதுக்கிட்டா இருக்கேன்.'

'உங்க தாத்தாவை நீங்க குட்டிலேயிருந்தா வளர்த்தீங்க?''

- வஸந்த் சொல்லி முடித்ததும் விழுந்து விழுந்து சிரித்தாள் ஸ்ரேயா. ''எங்க படிச்சே?''

''எல்லாம் தென்கச்சி யாரோட புக்லதான். மஞ்சரியில அஞ்சு வருஷமா அவர் எழுதிக்கிட்டிருக்கிற கேள்வி-பதில் பகுதியைத் தொகுத்து புக்கா போட்டிருக்காங்க. நிறைய்ய ஜோக்ஸ், கொடேஷன்ஸ் எல்லாம் இருக்கு. ரொம்ப லைவ்லியா, ஜாலியா ஆன்சர் பண்ணியிருக்காரு... இந்தா கையோட கொண்டு வந்திருக்கேன். என்ஜாய்!''





''கொண்டா... ஓகே. இப்ப நான் ஒரு புக் படிச்சிட்டிருக்கேன். பேரு வேதங்களை ஏற்றுப் போற்றும் தமிழ் இலக்கியங்கள். கே.சி. லட்சுமிநாராயணன் எழுதியிருக்காரு. குண்டோ குண்டு புக். ஆயிரம் பக்கங்களுக்கும் மேல இருக்கும்.''

''ஃபுல்லா படிச்சிட்டியா?''

''படிச்சிக்கிட்டேடடடயிருக்கேன்.. உனக்காக கேப்ஸ்யூல் சைஸ் இன்ட்ரோ தரேன் கேட்டுக்கோ. தொல்காப்பியம், சிலப்பதிகாரம், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை இப்படி தமிழ் இலக்கியங்கள் ஒவ்வொண்ணா எடுத்துக்கிட்டு எங்கெல்லாம் வேதங்களைப் பத்தி சொல்லியிருக்காங்கன்னு ரொம்ப ஆழமா ஆராய்ச்சி பண்ணியிருக்காரு... வேதங்கள், உபநிஷத்துகளைப் பத்தி எளிமையா, சுருக்கமா அறிமுகம் பண்ணியிருக்காரு... வேதங்களை எதிர்க்கறோம்னு சொல்லிக்கிட்டிருக்கவங்க உண்மையில வேதம்னா என்னன்னு தெரியாததாலதான் எதிர்க்கறாங்கன்னு ஆசிரியர் சொல்றாரு''

''கொண்டு வந்திருக்கலாமில்லை? நானும் கொஞ்சம் புரட்டிப் பார்த்திருப்பேன்.''



''அய்யோ சாமி. அதை என்னால தூக்க முடியாது. உனக்கு வேணும்னா நீ ஆட்டோ புடிச்சிக்கிட்டு வீட்டுக்கு வா... இப்போதைக்கு பை பை.''

தென்கச்சி பதில்கள், தென்கச்சி கோ. சுவாமிநாதன், அன்னை புத்தகாலயம், 3, சிவஞானம் தெரு, 2வது மாடி, தியாகராய நகர், சென்னை - 17, பக்கம் 408, ரூ. 100.00

வேதங்களை ஏற்றுப் போற்றும் தமிழ் இலக்கியங்கள், கே.சி.லட்சுமிநாராயணன், 1076, 19வது மெயின் ரோடு, அண்ணாநகர் மேற்கு, சென்னை - 40, பக்கம் 1152, ரூ. 250.00

அதுதான் மனிதன்!

வேப்ப மரத்தில் இரண்டு காகங்கள் உட்கார்ந்திருந்தன. எதிரே இருந்த சமையலறையின் ஜன்னல் திறந்திருந்தது. வீட்டுக்கார அம்மாள் ஒரு ரொட்டியின் விளிம்புகளைக் கத்தரித்து ஜன்னல் மேடையில் வீசினாள். ஜூனியர் காக்காய் பறந்துவந்து அந்தத் துண்டுகளைக் கொத்தப் பார்த்தது. "சூ! போ! போ" என்று விரட்டினாள் அந்த அம்மாள். காகம் திரும்பி மரத்துக்குப் போய் பெரிய காக்கையைக் கேட்டது. "அந்த அம்மாள் வேண்டாமென்று எறிந்ததைத்தானே நான் எடுக்கப் போனேன். ஏன் என்னை விரட்டுகிறாள்?"

"அவளுக்கு வேண்டாததைக்கூட அவள் நினைக்கும்போதுதான் எடுக்க வேண்டும். அதுதான் மனிதர்கள்" என்றது பெருசு.

சில நாட்கள் கழித்து அந்த அம்மாள் வீட்டில் திவசம் வந்தது. சாத உருண்டையுடன் அந்த வீட்டு மனிதர் மொட்டை மாடிக்கு வந்து "கா! கா!" என்று குரல் எழுப்பினார்.

சின்ன காகம் பெருசிடம் கேட்டது. "எதற்கு நம்மை வருந்தி வருந்திக் கூப்பிடுகிறார்கள்? அன்றைக்கு விரட்டினார்களே?"

"அதுவா! இறந்து போனவர்கள் காக்கை ரூபமாக வந்து அவர்கள் பிள்ளைகள் கொடுக்கும் சாப்பாட்டைச் சாப்பிடுவதாக ஐதீகம். அப்படிச் சாப்பிடாவிட்டால் குடும்பத்துக்குப் பல கஷ்டங்கள் வரும் என்று நினைப்பார்கள். அதனால் இப்படிக் கூப்பாடு போடுகிறார்கள்" என்றது பெருசு.

"அப்ப நான்போய் சாதத்தைச் சாப்பிடட்டுமா?" யோசனை கேட்டது சின்ன காகம்.

"வேண்டாம். கொஞ்சம் பொறு. காக்கா சாதத்தை எடுக்கவில்லை என்று 'டென்ஷன்' படட்டும். நம்மை விரட்டுகிறவர்களுக்கு இந்தச் சின்ன தண்டனையாவது வேண்டாமா?" என்றது பெருசு.

"நீயும் மனிதன் மாதிரி ஆகி வருகிறாயே..." என்றது சின்னது! ○



கிருஷ்ணவேணி ரங்கநாதன்



* பத்மாவதி

* அனந்தகோபாலன்

வீடு முழுக்க வீணைகள்!

"நான் 1988-ல் இங்கே சத்குரு சங்கீத வித்யாலயா ஆரம்பித்தபோது, மாணவ - மாணவியர் பதிமூன்று பேர்தான். இன்றைக்குக் கிட்டத்தட்ட இருநூறு பேர் வயலின், வீணை, வாய்ப்பாட்டு கற்றுக் கொள்கிறார்கள்!" என்கிறார் பத்மாவதி அனந்தகோபாலன். புகழ் பெற்ற வயலின் இசைமேதை லால்குடி ஜெயராமனின் சகோதரிதான் இவர்.

வீணை பாலசந்தரின் சிபாரிசு காரணமாக 1973ல் சிங்கப்பூர் சென்று, அங்கே எட்டு வருடங்களுக்கு மேலாக இசை கற்பித்து வந்தார். சுமார் 500 மாணவ - மாணவியர். பெரும்பாலும் இலங்கைத் தமிழர்கள். 83-ல் இந்தியா திரும்பியதும் இவர் தொடங்கிய இசைப் பள்ளிதான் சத்குரு சங்கீத வித்யாலயா. கணவர் அனந்தகோபாலனும் பாடகர். லால்குடியின் தகப்பனாரின் சிடர்.

"இங்கே ஏழு வருடங்கள் முறையாக இசை கற்றுக்கொண்டால், சென்னை பல்கலைக்கழகத்தில் பி.ஏ (மியூசிக்) பண்ணலாம். தியரி, பிராக்டிகல் எல்லாம் சொல்லித் தருகிறோம். தனி 'சிலபஸ்' இருக்கிறது. வருகிற அத்தனை அப்ளிகேஷன்களையும் அலசி ஆராய்ந்து, அவர்களை நேரில் வரச் சொல்லி, உண்மையான ஆர்வம் இருந்தால் மட்டுமே சேர்த்துக்கொள்கிறோம். இசை கற்றுக்கொள்ளும் விருப்பம் உள்ளவர்கள் நூற்றுக்கணக்கில் இருக்கிறார்கள். அத்தனை பேரையும் சேர்த்துக் கொள்ளத்தான் எங்களால் முடியவில்லை. இத்தனைக்கும் வாரம் முழுக்க, காலை முதல் இரவு வரை சொல்லித் தருகிறோம். ஒரு மணி நேரம்தான் வகுப்பு என்று இருந்தாலும், அரை நாளுக்கு மேல் சொல்லிக் கொடுக்கிறோம். நேரம் எல்லாம் பார்ப்பதில்லை. சிலர் இங்கேயே சாப்பிடுவதும் உண்டு. குருகுல வாசம் போல்தான்!" என்கிறார் பத்மாவதி.

ஜெர்மனி, பாரிஸ், அமெரிக்கா என்று இவர் போகிற இடங்களில் எல்லாம், அங்கே இருக்கிற இந்திய மாணவ - மாணவியர் இவரிடம் பயில வருகிறார்கள். இவர்கள் தவிர, ஜெர்மன், ஜப்பானிய மாணவ - மாணவியரும் இருக்கிறார்கள்.

விஜயதசமி அன்றும், விடுமுறைக்

காலமான மே - ஜூன் மாதங்களிலும் தான் அதிகம் பேர் வகுப்பில் சேரு கிறார்கள். ஏழு வருடப் பயிற்சி முடிந் ததும், 'சங்கீத சிகாமணி' பட்டம் கொடுக்கிறார்கள். "பல்லவி வாசிக்கிற வரைக்கும், நாலு களைச் சவுக்கம் வாசிக்கிற வரைக்கும் சொல்லிக் கொடுத்து வருகிறோம். வீணை ரிப்பேர் பண்ணவும், மேளம் கட்டவும் இவர் களுக்குத் தெரியும். ஒரு டாக்டரேட் வாங்கக்கூடிய அளவுக்கு வீணை பற்றி எழுதும் நிலைக்கு அவர்களைத் தயார் பண்ணி விடுகிறோம்!''

எந்த வயதில் வீணை கற்றுக் கொள்ள வருகிறார்கள்?

"மூன்று வயதில்! ஐந்து வயதுக் குழந்தை சஹானா வீணை நன்றாக



★ மாணவிகளுடன்...

வாசிப்பாள். அதேபோல திவ்யா என்ற குழந்தை பாடினாலும், வாசித்தாலும் சட்டென்று எந்த ராகம் என்று சொல்லிவிடுவாள்!''

அண்ணாநகரிலும் வில்லிவாக்கத் திலும் நடைபெறும் வகுப்புகளுக்கு, திருவான்மியூர், அடையாறு, நுங்கம் பாக்கம், ஏன்... இன்னனூர், செங்கல் பட்டிலிருந்துகூட கற்றுக் கொள்ள வரு கிறார்கள். "நிறைய கச்சேரிகள் செய் தாலும் சொல்லிக் கொடுப்பதில்தான் எனக்கு விருப்பம். வீணை பால சந்தர்தான் என் மானசீக குரு!''

சகோதரி மகளும், பிரபல வீணைக் கலைஞருமான ஜெயந்தி குமரேஷ் இவரது மாணவி.

சவுந்தர்ய லகரி, அபிராமி அந்தாதி, மாத்ரிகா புஷ்பமாலா, மூகபஞ்ச ஸ்துதி எல்லாவற்றுக்கும் மெட்டமைத்து, கிட்டத்தட்ட 2000 பேருக்கு மேல் சென்னையிலும், பெங்களூரிலும் கற்றுக்கொண்டார்களாம். அதில் கிடைத்த பணத்தை என்ன செய்வது என்று காஞ்சி மகாபெரியவரிடம் கேட்டபோது, காமாட்சியம்மன் கோயில் குளப்படிகள் இரண்டு சீர் பண்ணாமல் பாக்கி இருந்ததைச் சரி செய்ய சொன்னாராம்.

பத்மாவதி அனந்தகோபாலன் நடத்தும் பள்ளி மாணவ - மாணவியரின் ஆதிசங்கரர் போன்ற இசை நாடகங்கள் பிரபலமானவை. மனோகர் நேரில் வந்து பார்த்துப் பாராட்டி இருக்கிறார். பகுள பஞ்சமியன்றும், தியாகராஜ ஆராதனையன்றும் விமரிசையாக விழா போல நடத்துவார்கள். இவை தவிர, பிற இசைக் கலைஞர்களை அழைத்து, அண்ணாநகர் மியூசிக் கிளப்பில் பாடச் சொல்லி, பொது மக்களோடு, தம் மாணவ - மாணவி யரையும் வந்து கச்சேரி கேட்க வைக் கிறார்.

"வீணைக் கச்சேரிகளுக்குக் கூட் டம் வருவதில்லை என்று சொல் கிறார்கள். நன்றாக வாசித்தால் வரத் தான் செய்கிறது. வீணை வாசிப்பில் தொடர்ச்சி - அதாவது கன்டின்யுடி இல்லை. அதைப் போக்கி, வாசிக்கணும். தந்தியை அசைப்பதில், கையை வைத்துக்கொள்வதில், மீட்டுவதில் எல்லாவற்றிலும் கவனம் செலுத்திச் சொல்லித் தருகிறோம். 'அப்யாஸ மஞ்சரி' என்று மியூசிக் புத்தகம் வெளியிட் டிருக்கிறோம்!'' என்கிறார் பத்மாவதி.

வில்லிவாக்கத்திலிருக்கும் இவர் வீடு முழுக்க வீணைகள்தான். பூஜை அறையில், படிக்கிற அறையில் கற்பிக் கிற அறையில் என்று டஜன் கணக்கில் விதவிதமாக....

"என் உயிர், பேச்சு, மூச்சு, காற்று எல்லாமே வீணைதான்!'' என்கிறார் பத்மாவதி.

- சாருகேசி

படங்கள்: ஓம்

"இன்றைய கர்நாடக சங்கீத உலகத்தில், கற்றுக் கொள்ள வேண்டும் என்கிற ஆசையைக் காட்டிலும் கச்சேரி பண்ண வேண்டும் என்கிற வெறிதான் அதிகமாய் இருக்கிறது... கவனத்தை ஈர்ப்பதற்காக புதிய முயற்சிகளில் ஈடுபடுவது அபாயகரமானது. நூதனமான அனைத்துமே புதுமைகளாகிவிட முடியாது!"

- இப்படிச் சொன்னவர் யாரென்று நினைக்கிறீர்கள்...? சுப்புடு? டி.கே. பட்டம்மாள்? ஒருவேளை அகாடமியின் புதிய தலைவர் என். முரளியோ...? - ஊஹூம்... இவர்கள் யாருமில்லை. சொன்னவர் டி.எம். கிருஷ்ணா! இப்படிக் கடுமையாய் விமர்சிப்பதற்கான வயதும் தகுதியும் முளைத்து மூன்று இலை விடாத கிருஷ்ணாவுக்கு இருக்கிறதா என்று யாரும்

பாடுவது பிறப்புரிமை; படுத்துவது யார் உரிமை?

கேட்கவில்லை!

கிருஷ்ணா பேசியது ஒரு கருத்தரங்க பேச்சாளராக. தி ஹிந்து நாளிதழ் ஏற்பாடு செய்திருந்த கருத்தரங்கம். 'இந்திய இசை உலகளாவ பிரகாசிக்கிறதா? அதற்கு உள்ள சவால்கள் என்ன? வாய்ப்புகள் என்ன?' - இதுதான் கருத்தரங்க தலைப்பு. நெறிப்படுத்திய ஸ்ரீராம் பரசுராம் சொன்னார் : "பாடுவது என்பது மனிதகுலத்தின் அடிப்படை உரிமை!"

ஏன் சார்.... அந்தத் துணிச்சலில்தான் இன்றைக்கு எத்தனையோ பேர் துளிக் கூட பயமின்றி மேடையேறிக் கொண்டிருக்கிறார்களே... நீங்கள் இப்படியொரு பிளாங்கெட் லைசென்ஸ் வேறு தர வேண்டுமா!

கர்நாடக இசையுலகின் நட்சத்திரங்கள் இந்தக் கருத்தரங்கில் ஒருசேர ஜொலித்தனர் - மேடையிலும் பார்வையாளர்கள் மத்தியிலும். சீசன் ஆரம்பிப்பதற்கு முன் (நவம்பர்) ஒருமுறை எல்லோரும் பரஸ்பரம் குசலம் விசாரித்துக் கொள்ளவும் கருத்தரங்கு கைகொடுத்தது.

"கர்நாடக சங்கீதத்தின் கம்பீரமே பரிச்சயமற்றவர்களை நெருங்க விடாமல் அச்சுறுத்துகிறது. மிகவும் அறிவுபூர்வமான கலை இது என்றாலும் அழகும் உணர்ச்சி பாவமும் நிரம்பியது. இனிமையும் ஹ்ருதய பாவமும் மேலோங்க இதை வழங்கினால்தான் உலகளாவ அனைத்து தரப்பினரையும் சென்றடைய முடியும்"என்றார் சுதா ரகுநாதன்.

பல அயல்நாட்டுக் கலைஞர்களுடன் இணைந்து நிகழ்ச்சி வழங்கிய அனுபவத்தில் பேசினார் அருணா சாய்ராம்.

"நம் இசையால் யாருடனும் இணையலாம். ஒரு கணம் ஒரே புள்ளியில் இரு மாறுபட்ட கலைஞர்கள் இணைந்தால், அந்தக் கணம் அழகானது. பகிர்ந்து கொள்ளப்படும்போது இசை வளர்கிறது."



தம்புரு



• சிதார் - கிதார்

அயல்நாட்டவருக்குக் கற்றுத் தரும் முயற்சிகள் பற்றிப் பேசினார் காரைக்குடி சுப்ரமண்யம் :

"கர்நாடக சங்கீதத்தை அயல்நாட்டவருக்குக் கற்றுத் தருவது பெரிய சவால். ஸ்வர ஸ்தானங்களையும் கமகங்களையும் புரிய வைப்பதற்கு மிகத் துல்லியமான கற்பித்தல் முறையை வகுத்துக் கொள்ள வேண்டும். தன்னை மறந்து, அர்ப்பண உணர்வுடன் இசைத்தலே நமது சங்கீதத்தின் ஆதார பலம். இந்த பக்தியை யாராவது 'கற்றுத்தர' முடியுமா!" என்றார்.

பக்தி - சிரத்தையைத் தனியே கற்றுத் தராவிட்டாலும் தமது இசையின் மூலம், அவற்றின் முக்கியத்துவத்தை உணர்த்தியபடியே வாழ்ந்தார் எம்.எஸ்.

இந்த வருடம் எல்லோருமே எம்.எஸ். நினைவைப் போற்ற ஏதேனும் ஒன்று செய்கிறார்கள். ஆனால் செய்கிற காரியத்தில் பக்தி சிரத்தை மட்டும் அனேகமாக மிஸ்ஸிங்!

'எம்.எஸ். மறைந்த இரண்டாம் ஆண்டு நினைவாஞ்சலி' என ஒரு சபா அறிவிக்கிறது!

• ஸ்ரீராம் பரசுராம்



அவர் படத்தை முகப்பில் தாங்கி அச்சிடப்பட்டு, கச்சேரிகளில் வினியோகிக்கப்படும் சுலோக புத்தகங்களில் அம்மைத் தழும்புகளாக அச்சுப் பிழைகள்!

அவர் பாடிய பாடல்களைக் கொண்டு அமைக்கப்படும் நடன நிகழ்ச்சியின் அழைப்பிதழை அச்சிடுவதில் அசிரத்தை.....

எம்.எஸ். பாரதத்தின் சொத்து என்பது உண்மைதான். அதற்காக தலைக்குத் தலை அவர் பெயரைப் பயன்படுத்திக் கொண்டு தராதரமற்ற நிகழ்ச்சிகளை வழங்குவதை எப்படி ஏற்பது?

இத்தகைய முயற்சிகளுக்கு மேடை கொடுக்கும் சபாக்களையும், ஆதரவு கொடுக்கும் புரவலர்களையும் நாம் மன்னிப்பது கஷ்டம்! ஆனால், எம்.எஸ்.ஸின் நல்லிதயம் அவர்களை மன்னித்து விடும்!

பக்தி இல்லாவிட்டாலும் ஓரளவு சிரத்தையுடன் பாடுகிறார் மாஸ்டர் பாலமுரளி

கிருஷ்ணா. (எத்தனை நாளைக்கு மாஸ்டர் என்றழைப்பதாம்?) பிரும்மகான சபாவில் இவர் பாடிய நாட்டைக்குறிச்சி நிமிர்ந்து உட்கார வைத்தது. ஆனால், அதற்கு முந்தைய உருப்படிகள் இன்னும் உருப்படியாக இருந்திருக்கலாம். தம்பூரா இல்லாததால் சுருதி அலை பாய்ந்தது.



• தர்மபுரம் சுவாமிநாதன்

சிவகாமி பெத்தாச்சி அரங்கை அழகாக அலங்கரித்து கச்சிதமான ஒலிபெருக்கி அமைப்பை ஏற்பாடு செய்திருக்கும் பிரும்மகான சபாவிடம் 'ஹம்சத்வனி' சபா கொஞ்சம் டியூஷன் எடுத்துக் கொள்ளலாம். மைக்கையும் மேடையையும் எப்படித் தயார் செய்ய வேண்டும் என்று. ஹம்சத்வனி துவக்க விழாவில் முதல் முக்கால் மணி நேரம் ஒலிபெருக்கி 'ஒலி படுத்தி'யாகவே செயல்பட்டது! ரஞ்சனி - காயத்ரியின் கச்சேரிக்கு ஏற்பாடு செய்தவர்கள் மைக்கை முன்னதாகவே சரிபார்த்திருக்க வேண்டாமோ...?

எம்.எஸ்ஸுக்கு இசை விழாக்களை சமர்ப்பிக்கும் ஹம்சத்வனி மேடையில் அவரது படங்களைப் பிரமாதமாக பொருத்திவிட்டு மும்மூர்த்திகளையும் புரந்தரதாசரையும் ஓர் ஓரத்தில்

முதல் முக்கால் மணி நேரம் ஒலிபெருக்கி ஒலி'படுத்தி' யாகவே செயல்பட்டது!

பிளாஸ்டிக் சேர்களில் அமர்த்திவிட்டார்கள்! மார்ச் முடிய இவர்களுடைய இசைவிழா தொடர்கிறது. விரைவில் உரிய மேடை மாற்றங்கள் நிகழ்த்துங்கள் ஐயா!

இதே துவக்க விழாவில் கமலா ஷங்கர் - ராஜீவ் ஜனார்த்தன் தம்பதியின் கிடார் - சிதார் கச்சேரி. வினோத் பாதக் தபலா. மேற்கத்திய 'ஜாஸ்' வாத்தியமான கிடாரில் சிதாரைக் காட்டிலும் கன-நயங்கள் அழகாக ஒலித்தன என்பது சுவாரஸ்யம். தபலாவின் எடுப்பு தொடுப்புகள் அதனினும் சுவாரஸ்யம்.

சீசனில் நடத்திருக்கும் இரண்டு நல்ல காரியங்கள் :

1. தேவார மூவரின் பதிகங்கள் தர்மபுரம் சுவாமி நாதனின் குரலில் பதிவு செய்யப்பட்டு 160 சி.டிக்களாக விற்பனைக்கு வெளி வந்துள்ளன. திருமுறை வழிபாட்டு அன்பர்கள் திருக்கூட்டம் இந்த கைங்கர்யத்தைச் செய்திருக்கிறது.

2. மன்னார்குடி சாம்பசிவ பாகவதரின் சங்கீத உபன்யாஸ ஒலிப்பதிவுகளும் சி.டிக்களாக்கப்பட்டு விற்பனைக்கு வந்துள்ளன. அவர் நினைவாக நிறுவப்பட்டுள்ள அறக்கட்டளையின் முயற்சி இது.

கேட்ட கச்சேரிகளில் பேர் பாதியில் தம்பூரா மிஸ்ஸிங்; எலக்ட்ரானிக் சுருதிதான். பிரும்மகான சபாவில் விஜய் சிவா பாட ஆரம்பித்தபோது தம்பூரா இருந்தது; போட ஆள் இல்லை! அரை மணி தாமதமாக வந்து தம்பூரா போட ஆரம்பித்தார் ஓர் அம்மணி.

"இவர் தாமதமாக வந்திருப்பதாக நினைக்க வேண்டாம். ஆபத்துக்கு உதவ வந்திருக்கிறார். ஏற்கெனவே புக் பண்ணியிருந்த தம்பூரா ஆர்டிஸ்ட் சொல்லாமல் கொள்ளாமல் ஊருக்குப் போய் விட்டார்'' என அறிவித்தார் விஜய் சிவா!

ஏழை தம்பூரா கலைஞர்கள்பால் அனுதாபம் பொங்க கதையெழுதிய கல்கி ஆசிரியர் இதற்கென்ன சொல்கிறாராம்?!



"இந்திய அணிக்கு கோச்சாக ஆசை!"

- வாசிம் அக்ரம்

வீட்டிலிருந்தபடியே, ரத்தத்தில் சர்க்கரையின் அளவைத் தெரிந்துகொள்ள 'அக்யூ செக்' என்ற கருவியைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். அதன் அறிமுக விழாவில் கலந்து கொள்வதற்காக பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர் வாசிம் அக்ரம் சென்னைக்கு வந்திருந்தார். சர்க்கரை நோய் பற்றி மட்டுமின்றி, கிரிக்கெட் பற்றியும் நிறைய பேசினார் அக்ரம்.

"என் பெற்றோருக்கு சர்க்கரை நோய் இல்லை. எனவே எனக்கு வரும் என நான் கனவிலும் நினைக்கவில்லை. யதேச்சையாக, ரத்தப் பரிசோதனை செய்துகொண்ட போதுதான் ரத்தத்தில் சர்க்கரையின் அளவு மிக அதிகமாக இருப்பது தெரியவந்தது. எனக்கு அளவில்லாத அதிர்ச்சி ஏற்பட்டது. 'எனக்கு ஏன் இப்படி ஆகிவிட்டது?' என்று மனம் ஒடிந்து போனேன்.

என் அப்பாதான் எனக்கு தைரியம் சொன்னார். 'உன் கிரிக்கெட் வாழ்க்கைக்கு சர்க்கரை நோய் ஒரு தடையாக இருக்க நீ அனுமதிக்கக் கூடாது. மனதை திடப்படுத்திக் கொள். கிரிக்கெட்டுக்கு உடற்பயிற்சி மிக அவசியம். அந்த உடற்பயிற்சியுடன் கூட உணவு விஷயத்திலும் கட்டுப்பாட்டைக் கடைப்பிடித்தால் உன்னால் கண்டிப்பாக இந்த நோயை ஜெயிக்க முடியும்' என்று ஊக்கம் கொடுத்தார்.

டாக்டர்களின் ஆலோசனைப்படி, உடற்பயிற்சியுடன், உணவுக் கட்டுப்பாட்டையும் கடைப்பிடித்தேன். சர்க்கரை நோய் என்னையும், எனது கிரிக்கெட்டையும் பாதிக்காதவாறு கவனம் செலுத்தினேன். புது மனிதனாகக் களமிறங்கி, பல புதிய சாதனைகளைப் படைத்தேன். என்னையே உதாரணமாக முன்னிறுத்தி, சர்க்கரை நோயாளிகள் சாதனை புரிய ஊக்கமளித்துக் கொண்டிருக்கிறேன்.

சௌரவ் கங்குலி, யுவராஜ்சிங் இருவரும் இந்திய கிரிக்கெட்டின் நம்பிக்கை நட்சத்திரங்களாகத் திகழ்கின்றனர். இர்ஃபான் பதான் திறமையான இளைஞர். அவருக்கும் நல்ல எதிர்காலம் இருக்கிறது.

இந்திய அணியின் கோச்சாக எனக்கு ஆர்வம் இருந்தாலும், இங்கேயே இரண்டு வருடங்களுக்குத் தங்குவது எனக்கு சாத்தியமில்லை. கோச் வேலை மிகவும் கஷ்டமான வேலை என்றும் எனக்குத் தோன்றுகிறது.

அரசியலில் ஈடுபடும் எண்ணம் இப்போதைக்கு இல்லை. ஒருவேளை இம்ரான்கான் பாகிஸ்தான் பிரதமரானால் நான் நிச்சயம் அரசியலுக்கு வருவேன்!"

- எஸ். சந்திரமௌலி

● என்.சண்முகம், திருவண்ணாமலை.

? கலைஞர் வீட்டுக்குப் போய் கேக் வெட்டச் சொல்லி சோனியாவின் பிறந்தநாளைக் கொண்டாடிய மாநில இளைஞர் காங்கிரஸின் செயல் பற்றி...?



● இன்னொரு ஜாக்பாட்!

! தமிழக காங்கிரஸ் வெட்டிச் சிதறுண்ட கேக்காகிவிட்ட நிலையில் எந்தவொரு பிரிவின் தலைவரையும் முன்னிலைப் படுத்தி சோனியா பிறந்த நாளைக் கொண்டாடினாலும் சர்ச்சைதான்! தி.மு.க. தலைவரை முன்னிலைப் படுத்திவிட்டால் சர்ச்சையைத் தவிர்த்த மாதிரியும் ஆச்சு; தேர்தல் சீட்டுக்கு அச்சாரம் போட்ட மாதிரியும் ஆச்சு!

● ஆர்.லட்சுமி, மதுரை-16.

? உமாபாரதி பிரச்னை எதில் போய் முடியும்?

! 'உங்கள் உடம்பில் ஹிந்துத்வ மரபணுக்கள் உள்ளனவா என டி.என்.ஏ. பரிசோதனை செய்துதான் பார்க்க வேண்டும்' என்று அத்வானி அண்ட் கோவுக்கு உமாபாரதி விடுத்த சவாலில் தற்போது சுழன்று கொண்டிருந்தாலும் மெள்ள சுருதி இறங்கி சமரசத்தில் முடியும்.

● வி.எம்.செய்யதுபுகாரி, அதிராம்பட்டினம்.

? தமிழக அமைச்சர் ஜெயக்குமார் வெள்ளத்தில் நீந்தி மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளாரே...?

! அவர் மனித நேயத்தைப் பாராட்டும் அதே நேரத்தில், ஓர் அமைச்சர் இப்படியெல்லாம் களத்தில் இறங்கிச் செயல்படுவதற்குப் பதில், நிர்வாக ரீதியான விஷயங்களில் கவனம் செலுத்தி மேற்பார்வையிடுவதே முக்கியம் என்பதைக் குறிப்பிட்டாக வேண்டும்.

● பி.ஜெயப்பிரகாஷ், சர்க்கார்பதி.

? 'பீஹாரை பின் தங்கிய மாநிலமாக அறிவிக்க வேண்டும்' என்று நிதீஷ் குமார் கேட்டுள்ளாரே? அது சரியா?

! மூன்றே மாதத்தில் இந்த மாநிலத்தை மாற்றிக் காட்டுகிறேன் என்று சவால் விட்டுவிட்டு, இப்போது இப்படியொரு சலுகை கேட்கிறார்; அதன்மூலம் கூடுதல் ஒதுக்கீடுகளுக்கு அடிபோடுகிறார். இப்படிப்பட்ட குறுக்கு வழிகளில் வளர்ச்சியும் முன்னேற்றமும் சாத்தியமில்லை. திட்டமிடல், தொலை நோக்கு, மக்கள் நலனில் மெய்யான அக்கறை கொண்டு எந்த முடிவையும் எடுத்தல் - இவை மட்டுமே வளர்ச்சிக்கு வழிகள்.

நிதீஷ்குமார்

● எஸ். ஆனந்த், பூனே-27 ★

? நச்சு தூசுகளின் ஊசி முனை, ஓசோன் படலத்தை ஓட்டை போட்டதால்தானே இந்த அளவுக்கு இயற்கைச் சீற்றம்?

● அரசியல் தொழில்நுட்பம்!



● மக்கள் விருது!



● சரியும் சர்க்கை!



• பெருமைப்படலாம்!

! அதுவும் ஒரு காரணம் என்று ஆராய்ச்சியாளர்கள் உறுதிப் படுத்தியுள்ளார்கள். ஆனால், உலக வரலாற்றில், ஓசோன் ஓட்டைகள் விழுவதற்கு முன் பிருந்தே கொடுமையான இயற்கைச் சீற்றங்கள் நிகழ்ந்து வந்துள்ளன. இயற்கையின் எல்லா செயல்பாடுகளுக்கும் விளக்கம் காண்பது இயலாது.

● ஆர். ராஜதுரை, சீர்காழி.

? மத்திய தொலை தொடர்பு - தகவல், தொழில்நுட்ப அமைச் சகம் எல்லா நிகழ்ச்சிகளையும் (சென்னையில்) கருணாநிதி தலைமையில் நடத்துவது ஏன்? தயாநிதிமாறன் நன்றிக்கடன் செலுத்துகிறாரா?

! இந்த நிகழச்சிகள் தி.மு.க. கூட்டங்கள் போல் தோற்ற மளிக்க காரணம் நன்றியுணர்வு மட் டும் அல்ல... ஆட்சி மட்டத்தில் நடப் பவற்றைக் கொண்டு கட்சிக்கும் ஆதாயம் தேடும் முயற்சிகள் தான் இவை. 'உங்கள் அன்புச் சகோதரி

• சவாலுக்குச் சவால்!





ஆனால் சோம்நாத் சாட்டர்ஜி போன்ற தலைவர் அமைந்ததற்காக நாம் பெருமைபட்டுக்

கோரிக்கை சரியா?

யாகிய நான் ஆணையிட்டிருக்கிறேன்' என்று அறிவிப்புகளை வெளியிடும் தமிழக முதல்வர் தேடும் ஆதாயத்துக்கும், இதற்கும் அதிக வித்தியாசமில்லை.

● எம்.சம்பத், வேலாயுதம்பாளையம்.

? 'இந்த சபையின் தலைவராக இருப் பதற்காக நான் வெட்கப்படுகிறேன்' என்கிறாரே சோம்நாத் சாட்டர்ஜி?

! இப்படி அவைத் தலைவரை நொந்து கொள்ளச் செய்யும் வகையில் மோசமான உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்த மக்கள்தான் வெட்கப்படவேண்டும்.

கொள்ளலாம் - லோக் சபாவில் கேள்வி எழுப்ப லஞ்சம் பெற்றதாகக் குற்றம் சாட் டப்பெற்ற பதினொரு எம்.பிக்களிடம் உடனடி விளக்கம் கோரி உத்தரவிட்ட தற்காக.


● மல்லிகை மன்னன், மதுரை

? தங்கத்தின் நிலை இப்படி உயர்ந்து விட்டதே... இனிமேல் குழந்தைகளுக்குத் 'தங்கம்' என்று பெயரிட்டுத் திருப்தி அடைய வேண்டியதுதானா?

! இப்படியெல்லாம் சோர்ந்து போக வேண்டிய அவசியமில்லை. சொர்ணா,



● பிறந்த நாள் பிரச்னை!



● களப்பணி வீரர்!

பங்காரு, காஞ்சனா, பொன்னு என்னும் பெயர் வைக்கலாமே!

● ஆர். லட்சுமி, மதுரை - 16

? சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடு கட்டித்தர அறிவித்த தொகையில் இன்னும் ஒரு சல்லிக் காசு கூட மத்திய அரசு வழங்கவில்லை என்கிறாரே ஜெயலலிதா?

! மத்திய நிதியமைச்சர் மொத்த நிவாரண தொகையும் கொடுக்கப்பட்டுவிட்டதாகச் சொல்கிறார். 'ஒதுக்கீடாக அறிவித்ததோடு சரி, மொத்த பணம் வரவில்லை' என்கிறார் முதல்வர். அதற்குள் வெள்ளமும் வந்து, அதிலிருந்து மெள்ள மீண்டு மக்கள் அவரவர் நிவாரணத்தை அவரவரே தேடிக் கொண்டிருக்கிறார்கள்!

● உமரி. பொ.கணேசன், மும்பை - 37.

? கடலூர் கலெக்டர் ககன்தீப் பேடி மக்கள் நாயகனாக உயர்ந்து விட்டாரே?

! 'இன்னும் பத்து வருடங்களுக்கு இவரே எங்கள் கலெக்டராக இருக்கட்டும்' என்று மக்கள் அரசிடம் கோரியிருப்பது கடலூர் கலெக்டருக்குக் கிடைத்த விருது என்றபோதிலும் இதர மாவட்டங்களும் அவருடைய சிந்தனை - உழைப்பால் பயனுற வேண்டும் என்பதுதான் எனது ஆசை.

● கே.என்.பாலகிருஷ்ணன், கும்பகோணம்-1.

? ரம்யா கிருஷ்ணனின் 'தக தக தங்க வேட்டை' பற்றி...?

! ஜக ஜக ஜாக்பாட்டின் ஜெராக்ஸ்தான் தகதக தங்க வேட்டை. ஆனால் 'உய் உய்' என்ற அந்த அலறல் ஓவர் பில்ட் அப்!

● ஜி.வெங்கட்ராமன், மும்பை - 81 ☐

? நிறைய மாநாடுகள் நடத்தி கட்சிகள் பணம் சேர்த்து வைத்துள்ளனவே. அதில் பத்து சதவிகிதத்தை வெள்ள நிவாரணத்துக்குச் செலவிட்டால் உதவியாக இருக்குமே?

! சரியாப் போச்சு! தேர்தல் நெருங்கற இந்த நேரத்துல, வெள்ள நிவாரணத்துக்கு ஒதுக்கப்படற பணம் கட்சி செலவுக்கு வளைச்சுக்கப்படாமல் இருந்தாலே பெரிய காரியமுங்க!

● ஏ.திருநாவுக்கரசு, காஞ்சிபுரம்

? கடுமையான மழையால் மக்கள் படும் துன்பம் கண்டால் கடவுள் ஒருவர் இருப்பதாகவே தெரியவில்லையே?

! கடவுள் ஒருவர் இருப்பதால்தான் இவ்வளவு சிற்றத்தையும் தாங்கி, தப்பி மக்கள் இன்று பெருமுயற்சியுடன் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பிக் கொண்டிருக்கிறார்கள்.

● ஷோபனாதாசன், நாட்டரசன்கோட்டை.

? 'மரியாதை நிமித்த சந்திப்பு'னா என்னங்க?

! வெளியில சொல்லிக்க முடியாத விஷயங்களைப் பேசிக்கறதுக்காக சந்திக்கறப்போ, அதை மரியாதை நிமித்தம் இப்படிக் குறிப்பிடுகிறார்கள். ○

☐ ரூ.100/- பரிசு பெறுபவர்:

ஜி.வெங்கட்ராமன்,
12, பால்கோவிந்த்,
சானே குருஜி சாலை,
முலுந்த் கிழக்கு
மும்பை - 400 081

● ரூ.50/- பரிசு பெறுபவர்:

எஸ். ஆனந்த்,
28, பூனா மார்பன் லைன்,
குரு பிம்ப்லே,
அபங் காலனி,
பூனே - 411 027

கனாக் காணும் கண்கள்!



மிருதுளா சிவக்குமார்... குரலழகி, விழியழகி, கூந்தலழகி, அறிவழகி... 'போதும் போதும் வர்ணனை' என்கிறீர்களா! வர்ணிக்கவில்லை... பல்வேறு போட்டிகளில் அவர் வாங்கிய பட்டங்களைத்தான் சொல்கிறோம்.

கோடம்பாக்கத்திலிருந்து வாரம் ஒருமுறை அழைப்பு வந்துவிடுகிறது மிருதுளாவுக்கு. அரிதாக ஒரு தமிழ் அழகியைக் கண்டதில் எல்லோருக்கும் பெருத்த மகிழ்ச்சி. ஆனால் மிருதுளா 'மாட்டேன்' என்கிறார். "என் கனவுகள் வேறு. தமிழ் சினிமா போதாது" என்கிறார்.

விஜய் டி.வியால் நடத்தப்பட்ட அழகிப் போட்டியில் மிருதுளாவுக்கு இரண்டாவது இடம்தான் என்றாலும் மேலே சொன்ன கூந்தலழகி பட்டத்தைத் தவிர அத்தனை அழகிப் பட்டத்தையும் மிருதுளாவுக்கே வழங்கி சந்தோஷமாக வீட்டுக்கு அனுப்பியிருக்கிறார்கள். 'கூந்தலழகி' பட்டம் மட்டும் சமீபத்தில் நடந்த மிஸ். தமிழ்நாடு போட்டியில் சூட்டப்பட்டது.

இவரின் அப்பா சிவக்குமார், ஏ.ஆர். ரஹ்மானின் ஆஸ்தான சவுண்ட் இன்ஜினீயர்.

"டூயட், ரிதம் படங்களுக்காக அப்பா தமிழக அரசு விருதுகள் வாங்கியிருக்காங்க. கலைகள் மேல எனக்கு ஆர்வம் வர்றதுக்கு அவர்தான் க்ரியா ஊக்கி" என்று கூறும் மிருதுளா, +2 வரைக்கும் படித்தது கலாக்ஷேத்ரா பள்ளியில். இப்போது லயோலாவில் பி.எஸ்.சி விஷுவல் கம்யூனிகேஷன். "வெளிநாட்டில் முதுகலை படிச்சு விளம்பரத் துறையில் சாதிக்கணும்" என்கிறவருக்கு கனாக் காணும் கண்கள்.

"அம்மா சொல்வாங்க 'நீ மட்டும் சம்பாதித்து நீயே அதை அனுபவிக்காதே. நாலு பேருக்குப் பகிர்ந்து கொடு. உன்னாலயும் நாலுபேர் வாழ்க்கையில மேலே வரணும்'னு முத்து முத்தா அறிவுரைகளை எனக்குள்ளே செலுத்தியிருக்காங்க. நானும் இப்போதான் சம்பாதிக்க ஆரம்பிச்சிருக்கேன். அடுத்தவங்க சந்தோஷத்தை என் கண்கள்ல பார்க்கிற நாளை எதிர்பார்த்துட்டிருக்கேன்."

- சநகன்

அட்டை, படம்: ஸ்ரீஹரி

சூப்பர் ஸ்டாரையே

உணவுக்கு எண்ணெய் ஊழலுக்கு எத்தனை புகழ் கிடைத்ததோ, அதைவிட ஒருபடி அதிகமாகவே பிரபலமாகிவிட்டது அமிதாப்பச்சனுக்கு வந்த கொலைட்டீஸ் (Colitis) நோய்த்தொற்று! அதென்ன கொலைட்டீஸ்?

* டாக்டர் அஷோக்



தி.நகரிலிருக்கும் லேசர் மற்றும் லேப்ராஸ்கோபிக் மருத்துவமனை நிறுவனரும், ஜீரண மண்டலம், குடல் அறுவை சிகிச்சை நிபுணருமான டாக்டர் அஷோக்கிடம் கேட்டோம்.

"பெருங்குடலின் ஒரு இடத்திலோ, பல இடங்களிலோ அல்லது பெருங்குடல் முழுவதுமாகவோ ஏற்படும் புண்களைத்தான் கொலைட்டீஸ் என்று பொதுவாகச் சொல்கிறோம். மாசுபட்ட குடிநீர், மாசுபட்ட உணவு மூலம் நம் உடலுக்குள் செல்லும் பாக்டீரியாக்கள், வைரஸ்கள் மற்றும் அமீபியா வகை நுண்ணுயிர்கள் பெருங்குடலில் நோய்த் தொற்றை ஏற்படுத்தி கொலைட்டீஸ் ஏற்படக் காரணமாகின்றன. எனவே 'கேஸ்ட்ரிக் அல்சர்' எனப்படும் குடல் புண்ணுடன் கொலைட்டீஸை போட்டுக் குழப்பிக் கொள்ள வேண்டிய அவசியமில்லை.

கொலைட்டீஸ் வகை பெருங்குடல் புண்களை நான்கு வகையாகப் பிரிக்கலாம்.
1. அமீபிக் கொலைட்டீஸ்
2. நான் - பெசிபிக் கொலைட்டீஸ்
3. அல்சரேட்டீவ் கொலைட்டீஸ்
4. கொலாமிக் டைவர்ட்டிக் கொலைட்டீஸ்.

இவற்றில் அமீபிக் மற்றும் நான் பெசிபிக் ஆகிய இரண்டு வகை கொலைட்டீஸுக்காகவும் குலை நடுங்க வேண்டிய அவசியமில்லை. இவை மாத்திரைகள் மூலம் எளிதில் குணமாகக் கூடியவை. ஆனால் திரும்பவும் வராமல் இருக்க பழக்க வழக்கங்களை மாற்றிக்கொள்ள வேண்டும்.

அமீபியா, பாக்டீரியாக்கள் மூலம் அமீபிக் வகை கொலைட்டீஸ் ஏற்பட்டவுடன் தொடர்ந்து வயிற்றுவலி, வயிற்றுப் போக்கு ஏற்படும். ஹோட்டலில் சாப்பிடுதல், பொறித்த உணவுகளை அதிகம் சாப்பிடுதல் போன்ற காரணங்களால் நான்பெசிபிக் கொலைட்டீஸ் ஏற்படுகிறது. அமிதாப்பச்சனுக்கு ஏற்பட்டது அமீபிக் வகையைச் சேர்ந்த சாதாரண கொலைட்டீஸ்.


ஆனால் மூன்றாவது வகையான அல்சரேட்டிவ் கொலைட்டீஸ் மிகவும் கொடுமையானது. தினசரி ஏழு முதல் பத்துமுறை ஷவரிலிருந்து தண்ணீர் பீய்ச்சி அடிப்பதுபோல கடுமையான வயிற்றுப்போக்கு ஏற்பட்டு, வாழ்க்கை மொத்தமும் பாத்ரூமிலேயே முடங்கிவிடும் அவலம் ஏற்படும். வேலைக்குச் செல்ல முடியாது. ஒருமணி நேரத்தில் ஷாப்பிங் போய்விட்டுத் திரும்பிவிடலாம் என்றால்கூட வழியில் கட்டுப்படுத்த முடியாமல் வயிற்று வலியோடு எந்த நேரத்திலும் டயரியா வந்துவிடலாம்.


அல்சரேட்டிவ் வந்துவிட்ட பிறகே பலரும் டாக்டரிடம் செல்கிறார்கள். அவர் தரும் மாத்திரைகளைச் சாப்பிட்டுத் தற்காலிகமாக நோயைக் கட்டுப்படுத்தி வைக்கிறார்கள். ஆனால் மீண்டும் மெல்ல தலை தூக்கும். உணவில் காரம் சேர்த்துக்கொள்ள முடியாது. மறுபடியும்

சுருட்டிப் போட்ட நோய்!

தயிர் சாதம் மட்டுமே சாப்பிட வேண்டிய நிலை. மீண்டும் டாக்டர்... மீண்டும் வீட்டில் முடக்கம் என்று அல்சரேட்டிவ் கொலைட்டீஸ் பாதிப்புக்கு ஆளானவர்கள், உடல் இளைத்து, தொடர் டயரியா, ஆசனவாயில் சீழ் வருதல் என்று மிகுந்த துன்பத்தில் உழன்று கொண்டு எல்லாம் விதி என்று முடங்கிக் கிடப்பார்கள். பணம் செலவாகுமே தவிர, நோய் குணமாகாது.

ஆனால் இப்போது அப்படி முடங்கிக் கிடக்க வேண்டிய அவசியமில்லை. நவீன மருத்துவங்கள் வந்துவிட்டன. கொலனெஸ்ஸ்கோபி எனும் நவீன உள்நோக்கி மூலம் பெருங்குடல் முழுவதையும் பார்த்து இந்நோயின் வீச்சைக் கண்டறிந்து விடலாம். லேப்ராஸ்கோபிக் முறையில் பாதிக்கப்பட்ட பெருங்குடல் முழுவதையும் அறுவை சிகிச்சை மூலம் அகற்றிவிட்டு சிறுகுடலை வலதுபக்க அடிவயிற்றுப் பகுதியின் பக்கவாட்டில் வைத்துத் தைத்து விடுவோம். இப்படி தைக்கப்பட்ட சிறு குடலின் வாய்ப்பகுதி, ஆசனவாய்போல வயிற்றுக்கு வெளியே செயல்படும். இதில் ஒரு விசேஷ 'பேக்'கை பொருத்தி விடுவோம். இப்படிச் செய்வதால் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படும் என்று சிறிதும் அஞ்ச வேண்டியதில்லை. இதில் நோய்த் தொற்றும் ஏற்படாது. அலுவலகம் போகலாம்; இயல்பான மனிதராக இல்லற வாழ்க்கையில் எந்தப் பிரச்னையும் இல்லாமல் வாழலாம். நீங்களாக வெளியே சொன்னால் தவிர இந்த அறுவை சிகிச்சை பற்றி யாருக்கும் தெரியாது.





கொலாமிக் டைவர்ட்டிக் கொலைட்டீஸ் என்பது பெருங்குடலின் ஓரத்தில் இருக்கும் சிறுசிறு பைகளில் ஏற்படும் புண்களால் உண்டாகும் உபாதையாகும். இந்தப் பைகளில் கொலைட்டீஸ் ஏற்படும் போது, பைகளில் ஓட்டைகள் விழுந்து அவற்றிலிருந்து மலக்கசிவு ஏற்பட்டு பிரச்னையை ஏற்படுத்துகின்றது. இதனால் கொலைட்டீஸ் ஏற்பட்ட பைகள் உள்ள பெருங்குடல் பாகத்தை மட்டும் வெட்டி நீக்கி விடுகிறோம். இதற்கும் லேப்ராஸ்கோபிக் அறுவை சிகிச்சையே சிறந்த தீர்வாக இருக்கிறது. குடிநீர், உணவுக் கட்டுப்பாடு, காரமான உணவுகளையும் ஹோட்டல்கள் மற்றும் சாலையோரங்களில் சாப்பிடுவதையும் தவிர்த்தாலே கொலைட்டீஸ் எனப்படும் பெருங்குடல் புண்களிலிருந்து எளிதில் தப்பித்து விடலாம்"

- ஸ்ரீசக்கரம்

டிசம்பர் 25 - ராஜாஜி நினைவுநாள்

அரசியலின் இலக்கு என்ன?

சுவதந்திரா கட்சி தொடங்கிய சில வாரங்களுக்குள்ளாகவே பண்டித ஜவஹர் லால் நேரு அதனைக் கடுமையாக விமர்சித்தார் - 'இளவரசர்கள், முதலாளிகளின் கட்சி' என்று சாடினார். இந்த முத்திரை சுவதந்திரா கட்சியுடன் ஒட்டிக் கொள்ளத்தான் செய்தது. ஆனால் ராஜாஜி தமக்கே உரிய பாணியில் நேருவுக்குப் பதில் சொன்னார்: காங்கிரஸ் கட்சியிலும் ஏராளமான பிரபுக்களும் மஹாராஜாக்களும் இருப்பதைச் சுட்டிக் காட்டினார். சுவதந்திரா கட்சியில் சேர்ந்த பணக்காரர்களுக்கும் இளவரசர்களுக்கும் வாங்குகிற ஆசை உண்டாகாது என்று ஒரு போடு போட்டார்.

1967 தேர்தல்களின்போது நாற்பத்து நான்கு இடங்களை வென்ற சுவதந்திரா கட்சி, மிக அதிக இடங்களைப் பெற்ற பிரதான எதிர்கட்சியாக நாடாளுமன்றத்தில் இடம்பிடித்தது.

இந்தத் தேர்தல் முடிவுகள் காங்கிரஸின் தனியாதிக்கத்தைத் தகர்த்தன. சுவாராஜ்யா இதழை ஒரு கையிலும் சுவதந்திரா கட்சியை மறு கரத்திலும் ஏந்தி ராஜாஜி, நேரு ஆட்சியையும் காங்கிரஸின் தனியாதிக்கத்தையும் எதிர்த்துப் போராடினார். தமது எண்பத்தெட்டாவது வயதிலும் சிரமம் பாராமல் நாடு முழுவதும் பயணம் செய்து பிரசாரம் செய்தார்! நேரு ஆட்சியைக் கடுமையாக விமர்சனம் செய்தார். ஆனால் தனிப்பட்ட முறையில் அவர் தாக்கியதேயில்லை.

"ராஜாஜியின் விமர்சனங்கள் கத்தி முனையைப் போல் கூர்மையாக இருக்கும். ஆனால் அவை மனத்தைப் புண்படுத்தாது. கட்டியை நீக்கப் பயன்படும் அறுவை சிகிச்சை மருத்துவரின் கத்தியைப் போல் அது லாகவமாகச் செயல்படும். வேண்டாததைத் தாக்கும்; ஆனால் வடு ஏற்படுத்தாது. அவருக்குக் கடுமையாகக் கோபம் வரும்; ஆனால் பழிவாங்கும் நோக்கில் பேசவோ, செயல்படவோ அறியாதவர்" - காந்திஜியின் உதவியாளர் பியாரேலால், ராஜாஜி குறித்து சொன்னது இது!

சுவதந்திரா கட்சி பல்வேறு மாநில சட்டமன்றங்களிலும் 259 இடங்களை வென்றது. ஒரிஸ்ஸாவில் கூட்டணி ஆட்சியின் பிரதான கட்சியாக அங்கம் வகித்தது. ராஜஸ்தான், குஜராத்தில் பிரதான எதிர் கட்சியாய் பொறுப்பேற்றது. ஆந்திரா, தமிழ்நாடு சட்டமன்றங்களில் கணிசமான இடங்களைப் பெற்றது.

ராஜஸ்தானிலும் குஜராத்திலும் ஒரு சில எம்.எல்.ஏக்களை சுவதந்திராவுக்கு இழுத்திருந்தால் அங்கே அக்கட்சியே ஆட்சி அமைத்திருக்கலாம். ஆனால் கட்சித் தலைமை அதை விரும்பவில்லை. ராஜாஜியின் பலத்த ஆதரவுடன் சுவதந்திரா பொதுச் செயலாளர் மினூ மசானி மிக உறுதியாகச் சொல்லிவிட்டார் 'இவ்விரு மாநிலங்களிலும் மக்கள் சுவதந்திரா கட்சியை ஆட்சியில் அமர்த்தவில்லை. ஆகவே, மக்களின் தீர்ப்பை மதித்து நாம் எதிர்கட்சியில் அமர்வதுதான் தர்மம்' என்று கூறிவிட்டார்.

இன்று கட்சி மாறல் தடைச் சட்டத்தால் கூட காக்க முடியாத அரசியல் தூய்மையை அன்று சுயகட்டுப்பாடும் கொள்கைப் பிடிப்பும் காத்தன; நிலைநிறுத்தின.

ராஜாஜிக்கும் மினூ மசானிக்கும் இருந்த இந்த பரஸ்பர நம்பிக்கையும் கொள்கைப் பிடிப்பும்தான் மிகச் சிறிய கட்சியான சுவதந்தரா கட்சியை மிகப்பெரிய சாதனைகள் புரிய வைத்தன. எந்த ஒரு விஷயத்திலும் இவ்விருவருக்கும் அனேகமாக ஒத்துப் போய்விடும்.

ஆனால் 1969-ல் காங்கிரஸ் பிளவுபட்ட பிறகு மசானிக்கும் ராஜாஜிக்குமிடையே



எஸ்.வி.ராஜு

கருத்து மாறுபாடு உதித்தது. இந்திரா காந்தி, ஐந்தாவது லோக்சபாவை ஓராண்டு முன்னதாகவே கலைத்துவிட்டு 1971-ல் தேர்தல் அறிவிக்க, சுவதந்திரா கட்சி காமராஜ் காங்கிரஸ் (அப்போது காங்கிரஸ் 'ஓ') பிரிவை ஆதரிக்க முடிவு செய்தது. இந்திராவுக்கு எதிராக 'கிராண்ட் அலையன்ஸ்' என்ற பிரும்மாண்ட கூட்டணி உருவாயிற்று. மசானியும் தாண்டேகரும் இக்கூட்டணியின் குறைந்தபட்ச செயல் திட்டத்தை வகுக்கும்படி பணிக்கப்பட்டனர்.

ஆனால், கூட்டணியைச் சேர்ந்த வாஜ்பாய் (ஜன சங்), ஜார்ஜ் ஃபெர்னாண்டஸ், மது லிமாயி (லோஹியா கட்சி) போன்றோர் இந்தச் செயல் திட்டத்தை நிராகரித்துவிட்டு 'இந்திராவை வெளியேற்று' என்கிற ஒற்றை அம்ச செயல் திட்டத்துடன் தேர்தல் களத்தில் இறங்க வற்புறுத்தினர். இதை மசானி ஏற்கவில்லை; ஆனால் ராஜாஜி ஒப்புக் கொண்டார். சுவதந்திரா கட்சியின் ஒப்புதலை பிற கூட்டணிக் கட்சிகளிடம் தெரிவிக்கும்படி மசானியை வற்புறுத்தினார் ராஜாஜி. மசானி மறுக்க, தாண்டேகர் அப்பணியைச் செய்யும்படி ஆகிவிட்டது.

1971 தேர்தலில் இந்திரா காங்கிரஸ் வென்றது. 35 சதவிகித வாக்குகளே பெற்றபோதும் நாடாளுமன்றத்தில் எழுபது சதவிகித இடங்களைப் பிடித்தது. சுவதந்திரா கட்சி நாற்பத்து நாலு இடங்களில் நாற்பதை இழந்து வெறும் நான்கே தொகுதிகளில் ஜெயித்தது.

மசானி தோல்விக்குத் தார்மிகப் பொறுப்பேற்று ராஜினாமா செய்தார். ராஜாஜி எவ்வளவோ சொல்லியும் தமது முடிவை அவர் மாற்றிக்கொள்ளத் தயாராயில்லை. அரசியலிலிருந்தே விலகிக் கொண்டார் மசானி. ராஜாஜியின் மற்றொரு சீடரான என்.ஜி.ரங்கா காங்கிரஸுக்குக் கட்சி மாறினார்.

இரு முக்கிய தளபதிகளை இழந்த ராஜாஜி சோர்ந்து போனார். சுவதந்திரா கட்சியின் வலிமை குன்றியது. ராஜாஜி காலத்துக்குப் பிறகு அது அடியோடு மறைந்தும் போயிற்று.

ஆனால் 1959 முதல் 1972 வரை அக் கட்சியை மிகுந்த கொள்கைப் பிடிப்போடு நடத்தி வந்தார் ராஜாஜி. அரசியலின் இறுதி இலக்கு பதவி அல்ல; பதவியும் அதிகாரமும் உயர் இலக்குகளை அடையவும் நிறைவேற்றவும் ஏற்பட்ட கருவிகள்தான் என்பதே ராஜாஜியின் சித்தாந்தம்; சுவதந்திரா கட்சியின் கொள்கை.

நன்றி : ஃப்ரீடம் ஃபர்ஸ்ட்
மினூ மசானி நூற்றாண்டு
நவம்பர் 2005 ஆரம்பம்

உமாபாரதியிடம் கேட்கக்கூடாத 10 கேள்விகள் :

போட்டுத் தாக்கு!

1 'பாரதி'ன்னு பேரு வச்சுக்கிட்டதால புதுமைப் பெண்போல நடந்துக் குறிங்களா... இல்ல, புதுமைப் பெண்ணாட்டம் நடப்பீங்கங்கறதுக்காக 'பாரதி'ன்னு பேரு வச்சாங்களா?

2 ஏழு கிழமைகள்ல உங்களுக்குப் பிடிச்சது அதிரடி வியாழன்தானே?

3 சன் டீவில வந்த 'சூலம்' தொடர்ல நடிக்கறதுக்கு மொதல்ல உங்களைத்தான் கேட்டாங்களாமே?

4 விஜயசாந்தி போயிட்டாங்க... உமாபாரதி போயிட்டாங்க... இனி பி.ஜே.பில யாரு ஆக்ஷன் ஹீரோயின்... கூறும்மா மின்னல்?

5 ஹாரிபாட்டரை தூக்கிச் சாப்பிடுற ஐடியா இருக்கா... 'என் பார்வையில் அத்வானி'ன்னு புக்கு போடப் போறீங்களாமே...?

6 உங்க அயோத்தி பாத யாத்திரைக்கு வைகோகிட்டருந்து வாழ்த்துக் கடிதம் வந்திருக்காமே... உண்மையா?

7 எங்க ஊட்டாண்ட ஒரு விழா வெச்சுருக்கோம். வந்து கொடி யேத்தி மிட்டாய் தர்றீங்களா?

8 மேடையேறி ஃபயர் சர்வீசுக்கு போன் பண்ணிட்டுத்தான் பேசவே ஆரம்பிக்கறீங்களாமே... பொறி பறந்தா அணைக்கறதுக்கா?

9 நம்மாளு ஒருத்தனுக்கு மரபணு சோதனை பண்ணச் சொன்னா முடியாதுன்னு அடம்பிடிக்குறாங்க டாக்டருங்க... வந்து கொஞ்சம் குரல் கொடுக்க முடியுங்களா?

10 'ம.பி. முதல்வர் பதவி எனக்கு ஜுஜுபி. பி.ஜே.பி உறுப்பினர் பதவிதான் எனக்கு ஜிலேபி'ன்னு சதா அழுது கண்ணீர் வடிக்கறீங்களாமே?



-பரமு

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / PMG (CCR) 572 / 03 - 05 *
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 358 / 03 - 05 * Registered as a Newspaper in Srilanka